உற்றுர்சிலரல்லவரேபலரென்பதுண்மை
பெற்றருழைப்பெற்றபயன்பெறும்பெற்றியல்லால்
அற்றுர்நவையென்றலுக்காகுநரார்கொலென்றான். (ஈடு)

வீரத்திறலோரிவையின்னவிளம்பும்வேலை
தேரிற்றிரிவான்மகனிந்திரன்செம்மலென்றிப்
பாரிற்றிரியும்பனிமால்வரையன்னபண்பார்
சூரித்திசையானையிரண்டெனமுட்டினரே. (ஈசு)

குன்றேருகுன்றெறத்தனர்கோளரிக்கொற்றவல்லே
றென்றேருசென்றென்றெதிருற்றனவேயுமொத்தார்
நின்றுர்திரிந்தார்நெடுஞ்சாரிநிலந்திரித்த
வன்றேட்குயவன்றிணிமட்கலத்தாழியென்ன. (ஈள)

தோளோடுதோடேய்த்தலிற்றென்னிலங்தாங்கலாற்று
தாளோடுதாடேய்த்தலிற்றந்ததழற்பிறங்கல்
வாளோடுமின்னெடுவபோனெடுவானினெடும்
கோளோடுகோளுற்றனவொத்தடர்ந்தார்கொலத்தார். (ஈஅ)

தந்தோள்வலிமிக்கவர்தம்மொருதாய்வயிற்றின்
வந்தோர்மடமங்கைபொருட்டுமெலக்கலுற்றுர்
சிந்தோடரியொண்கட்டிலோத்தமைகாதல்செற்ற
சுந்தோபசுந்தப்பெயர்த்தொல்லையினுருமொத்தார். (ஈக)

கடலொன்றினெடொன்றுமலைக்கவுங்காவன்மேருத்
திடலொன்றினெடொன்றமர்செய்யவுஞ்சீற்றமென்ப
துடல்கொண்டிரண்டாகியுடற்றவுங்கண்டிலாதேம்
மிடலிங்கவர்வெந்தொழிற்கொப்புரைவேறுகாணேம். (சூ0)

ஊகங்களினுயகர்வெங்கணுமிழ்ந்ததீயால்
மேகங்களெரிந்தனவெற்புமெரிந்தநிக்கின்
நாகங்கணடுங்கினநானிலமுங்குலைந்த
மாகங்களேநண்ணியவிண்ணவர்போய்மறைந்தார். (சூத)

விண்மேலினரோநெடுவெற்பின்முகட்டினரோ
மண்மேலினரோபுறமாதிரவீதியரோ
கண்மேலினரோவெனயாவருங்காணகின்றுர்
புண்மேலிரத்தம்பொடிப்பக்கடிப்பார்புடைப்பார். (சூஉ)

ஏழொத்துடனந்திசையெட்டொடிரண்டுமூட்டும்
ஆழிக்கிளரார்கலிக்கைம்மடங்கார்ப்பினெசை
பாழித்தடந்தோளினுமார்பினுங்கைகள்பாய
ஊழிக்கிளர்பாரிடியொத்ததுகுத்துமோதை. (சூங)

வெவ்வாயெயிற்றுன்மிடல்வீரர்கடிப்பமீச்சென்
றவ்வாயெழுசோரியதாசைகடோறும்வீச
எவ்வாயுமெழுந்தகொழுஞ்சுடர்மீன்கள்யாவும்
செவ்வாயைநிகர்த்தனசெக்கரையொத்தமேகம். (சச)

வேறு. வெந்தவல்லிரும்பிடைநெங்கூடங்கள்வீழ்ப்பச்
சிந்தியெங்கணுஞ்சிதறுவபோற்பொறிதெறிப்ப
இந்திரன்மகன்புயங்களுமிரவிசேயுரனும்
சந்தவன்னெடுந்தடக்கைகடாக்கலிற்றகர்வ. (சரு)

உரத்தினுன்மடித்துந்துவர்பாதமிட்டைப்பர்
கரத்தினுல்விசைத்தேற்றுவர்கடிப்பர்நின்றிடிப்பர்
மரத்தினுலடித்துரப்புவர்பொருப்பினம்வாங்கிச்
சிரத்தின்மேலெறிந்துறுக்குவர்தெழிப்பர்தீவிழிப்பர். (சசு)

எடுப்பர்பற்றியுற்றொருவரையொருவர்விட்டெறிவர்
கொடுப்பர்வந்துரங்குத்துவர்கைத்தலங்குளிப்பக்
கடுப்பினிற்பெருங்கறங்கெனச்சாரிகைபிறங்கத்
தடுப்பர்பின்றுவரொன்றுவர்தழுவுவர்விழுவர். (சஎ)

வாலினுலுரம்வரிந்தனர்தெரிந்துகவலிப்பர்
காலினுனெடுங்கால்பிடித்துடற்றுவர்கழல்வர்
வேலினுலறவெறிந்தனவிறல்வலியுகிரால்
தோலினுலுடனெவரைமுழையெனத்தொளைப்பர். (சஅ)

மண்ணகத்தனமலைகளுமரங்களுமற்றும்
கண்ணகத்தினிற்றுன்றியயாவையுங்கையால்
எண்ணகப்பறித்தெறிதலினெற்றலினிற்ற
விண்ணகத்தினமறைத்தனமறிகடல்வீழ்ந்த. (சகூ)

வெருவிச்சாய்ந்தனர்விண்ணவர்வேறென்னவிளம்பின்
ஒருவர்க்காண்டமரொருவருந்தோற்றிலருடன்று
செருவிற்றுய்த்தலிற்செங்கனல்வெண்மயிர்செல்ல
முரிபுற்காணிடையெரிபரந்தனவெனமுனைவார். (கூ0)

அன்னதன்மையராற்றலினமர்புரிபொழுதின்
வன்னெடுந்தடந்திரள்புயத்தடுதிறல்வாலி
சொன்னதம்பியைத்தும்பியையரிதாலைத்தென்ன
கொன்னகங்களிற்கரங்களிற்குலைந்துகமலைந்தான். (கூக)

மலைந்தபோதினைந்திரவிசேயையன்மாடணுகி
உலைந்தசிந்தையோடெனைங்கினன்வணங்கிடவுள்ளம்
குலைந்திடேலுமைவேற்றுமைதெரிந்திலங்கொடிப்பூ
மிலைந்துசெல்கெனவிடுத்தனனெதிர்த்தனன்மீட்டும். (கூஉ)

தயங்குதாரகைகிரைதொடுத்தணிந்தனபோல
வயங்குசென்னியன்வயப்புலிவானவல்லேற்றே
டெங்குமார்பினெஞ்லேவந்தடுதிறல்வாலி
பயங்கொளப்புடைத்தெற்றினன்குத்தினன்பலகால். (டுஈ)

அயிர்த்தசிந்தையனந்தகன்குலகுலேந்தஞ்சச்
செயிர்த்துநோக்கினன்சினத்தொடுசிறகைசெய்யா
வயிர்த்தகையினுங்காலினுங்கதிர்மகன்மயங்க
உயிர்த்தலந்தொறும்புடைத்தனனடித்தனனுதைத்தான். (டுசு)

கக்கினனுயிருயிர்ப்பொடுஞ்செவிகளிற்கண்ணின்
உக்கதாங்கெரிப்படலையோடெரித்தினெழுக்கம்
திக்குநோக்கினன்செங்கதிரோன்மகன்செருக்கிப்
புக்குமீக்கொடுநெருக்கினனிந்திரன்புதல்வன். (டுடு)

எடுத்துப்பாரிடையெற்றுவாம்பற்றியென்றிளவல்
கடித்தலத்தினுங்கழுத்தினுந்தன்னிருகரங்கள்
மடித்துமீக்கொண்டவாலிமேற்கோலொன்றுவாங்கித்
தொடுத்துநாணெடுதோளிறுத்திராகவன்றுரந்தான். (டுசு)

காரும்வார்சுவைக்கதலியின்கனியினைக்கழியச்
சேருஞ்சூசியிற்சென்றதுநின்றதென்செப்பின்
நீருநீர்த்தருநெருப்புமன்காற்றுங்கீழ்நிமிர்ந்த
பாருஞ்சார்வலிபடைத்தவனுரத்தையப்பகழி. (டுஎ)

அலங்குதோள்வலியழிந்தனன்றம்பியையருளான்
வலங்கொள்பாரிடையெற்றுவானுற்றபோர்வாலி
கலங்கிவல்லிசைக்கால்கிளர்ந்தெறிவுறக்கடைக்கால்
விலங்கன்மேருவும்வேர்பறிந்தாமெனவீழ்ந்தான். (டுஅ)

சய்யம்வேரொடுமுருமுறச்சாய்ந்தெனச்சாய்ந்தான்
வய்யமீதிடைக்கிடந்தபோரடுதிறல்வாலி
வெய்யவன்றருமதலையைமிடல்கொடுகவரும்
கய்யெகிழ்ந்தனனெகிழ்ந்திலன்கடுங்கணைகவர்தல். (டுஈ)

வெற்றிவீரனதடுகணையவன்மிடலுரத்தூ
டெற்றதப்புறத்தருதமுனுறுவலிக்கரத்தால்
பற்றிவாலினுங்காலினும்பிணித்தகப்படுத்தான்
கொற்றவெங்கொடுமறலியுஞ்சிரதலங்குலைந்தான். (சுo)

எழுந்துவான்முகடிடித்தகப்படுப்பலென்றிவரும்
உழுந்துபேர்வுழீஇத்திசைதிரிந்திறுப்பலென்றுறுக்கும்
விழுந்துபாரினேவேரொடும்பறிப்பலென்றேருரும்
அழுந்துமிச்சரமெய்தவனுர்கொலென்றயிர்க்கும். (சுக)

எற்றுங்கையினைநிலத்தொடுமெரிப்பொறிபறப்பச்
சுற்றுநோக்குறுஞ்சுடுசரத்தைத்துணைக்கரத்தால்
பற்றிவாலினுங்காலினும்வலியுறப்பறிப்பான்
உற்றுருமையினுலவுறுமலையெனவுருளும். (சுஉ)

தேவரோவெனவயிர்க்குமத்தேவரிச்செயலுக்
காவரோவவர்க்காற்றலுண்டோவெனுமயலோர்
யாவரோவெனநகைசெயுமொருவனேயிறைவர்
மூவரோடுமொப்பான்செயலாமெனமொழியும். (சுங)

நேமிதான்கொலோநீலகண்டன்னெஞ்சூலம்
ஆமிதாங்கொலோவன்றெனிற்குன்றுருவயிலும்
நாமவிந்திரன்வச்சிரப்படையுமென்னவேட்
போமெனுந்துணைபோதுமோயாதெனப்புழுங்கும். (சுச)

வில்லினுற்றுரப்பரிதிவ்வெஞ்சரமெனவியக்கும்
சொல்லினுனெழுனிவரோதூண்டினுரென்னும்
பல்லினுற்கடிப்புறும்பலகாலுந்தன்னுரத்தைக்
கல்லியார்ப்பொடும்பறிக்குமப்பகழியைக்கண்டான். (சுடு)

சரமெனும்படிதெரிந்ததுபலபடச்சலித்தென்
உரமெனும்பதமுயிரொடுமுருவியவொன்றைக்
கரமிரண்டினும்வாலினுங்காலினுங்கழற்றிப்
பரமனன்னவன்பெயரறிகுவெனெனப்பறிப்பான். (சுசு)

ஓங்கரும்பெருந்திறலுடைமனத்தனுள்ளத்தன்
வாங்கினுன்மற்றவ்வாளியையாளிபோல்வாலி
ஆங்குநோக்கினரமரருமவுணரும்பிறரும்
வீங்கினுர்கடோள்வீரரையார்வியவாதார். (சுஎ)

மோடுதெண்டிரைமுரிதருகடலெனமுழங்கி
ஈடுபேருலகிறந்ததுதாமெனற்கெளிதோ
காடுமொடுவிலங்கல்கள்கடந்ததக்கடலின்
ஊடுபோதலுற்றதனையொத்துயர்ந்ததுதிரம். (சுஅ)

வாசத்தாரவன்மரர்பெனுமலைவழங்கருவி
ஓசைச்சோரியைநோக்கினனுடன்பிறப்பென்னும்
பாசத்தாற்பிணிப்புண்டவத்தம்பியும்பசுங்கண்
நேசத்தாரைகள்சொரிதரநெடுநிலஞ்சேர்ந்தான். (சுகூ)

பறித்தவாளியைப்பரூஉவலித்தடக்கையாற்பற்றி
இறுப்பெனென்றுகொண்டெழுந்தனன்மேருவையிறுப்போன்
முறிப்பெனென்னினுமுறிவதன்றுமெனமொழியாப்
பொறித்தநாமத்தையறிகுவானுக்கினன்புகழோன். (எ0)

வேறு. மும்மைசாலுலகுக்கெல்லாமூலமந்திரத்தைமுற்றும்
தம்மையேதமர்க்குநல்குந்தனிப்பெரும்பதத்தைத்தானே
இம்மையேயெழுமைநோய்க்குமருந்தினையிராமனென்னும்
செம்மைசேர்நாமந்தன்னைக்கண்களிற்றெரியக்கண்டான். (எக)

இல்லறந்துறந்தநம்பியெம்மனோர்க்காகத்தங்கள்
வில்லறந்துறந்தவீரன்மேன்றலால்வேதநூலில்
சொல்லறந்துறந்திலாதசூரியன்மரபுந்தொல்லை
நல்லறந்துறந்ததென்னுகைவரநாணுட்கொண்டான். (எஉ)

வெள்கிடமகுடஞ்சாய்க்கும்வெடிபடச்சிரிக்குமீட்டம்
உள்கிடுமிதுவந்தானேரோங்கறமோவென்றுன்னும்
முள்கிடுங்குழியிற்புக்கமூரிவெங்களிறல்யானை
தொள்கொடுங்கிடந்ததென்னத்துயருழன்றழிந்துசோர்வான். (எங)

இறைதிறம்பினனுலென்னேயிழிந்துளோரியற்கையென்னின்
முறைதிறம்பினனுலென்றுமொழிகின்றமுகத்தான்முன்னர்
மறைதிறம்பாதவாய்மைமன்னர்க்குமுன்னஞ்சொல்லும்
அறைதிறம்பாமற்காக்கத்தோன்றினனன்வந்துதோன்ற. (எச)

கண்ணுற்றான்வாலிநீலக்கார்முகில்கமலம்பூத்து
மண்ணுற்றுவரிவிலேந்திவருவதேபோலுமாலைப்
புண்ணுற்றதனையசோரிப்பொறியொடும்பொடிப்பநோக்கி
எண்ணுற்றானென்செய்தாயென்றேசுவானியம்பலுற்றான். (எடு)

வாய்மையுமரபுங்காத்துமன்னுயிர்துறந்தவள்ளற்
றூயவன்மைந்தனேநீபரதன்முன்றோன்றினையே
தீய்மைதான்பிறரைக்காத்துத்தான்செய்தாற்றீங்கொன்றுமோ
தாய்மையுமன்றிநட்புந்தருமமுந்தழுவினின்றாய். (எசு)

குலமிதுகல்வியீதுகொற்றமீதுற்றுநின்ற
நலமிதுபுவனமூன்றுநாயகமுன்னதன்றோ
வலமிதிவ்வுலகந்தாங்கும்வண்மையீதென்றற்றிண்மை
அலமரச்செய்யலாமோவறிந்திருந்தயர்ந்துளார்போல். (எஎ)

கோவியற்றருமமுங்கள்குலத்துதித்தோர்கட்கெல்லாம்
ஓவியத்தெழுதவொண்ணுவுருவத்தாயுடைமையன்றோ
ஆவியைச்சனகன்பெற்றவன்னத்தையமிழ்தின்வந்த
தேவியைப்பிரிந்தபின்னைத்திலகத்தனைபோலுஞ்செய்கை. (எஅ)

அரக்கரோரழிவுசெய்துகழிவரேலதற்குவேறோர்
குரக்கினத்தரசைக்கொல்லமனுநெறிகூறிற்றுண்டோ
இரக்கமெங்குகுத்தாயென்பாலெப்பிழைகண்டாயப்பா
புரக்கழியிதுவீபூண்டாற்புகழையார்பரிக்கற்பாலார். (எக)

ஒலிகடலுலகத்தன்னி னூர்தருகுரங்கின்மாடே
கலியதுகாலம்வந்துபரந்ததோகருணைவள்ளால்
மெலியவர்பாலதேயோவொருமக்கமும்விழுப்பந்தானும்
வலியவர்மெலிவுசெய்தாற்புகழன்றிவசையுமுண்டோ. (அ0)

கூட்டொருவரையும்வேண்டாக்கொற்றவபெற்றதாதை
பூட்டியசெல்வமாங்கேதம்பிக்குக்கொடுத்துப்போந்து
நாட்டொருகருமஞ்செய்தாயெம்பிக்கிவ்வரசைநல்கிக்
காட்டொருகருமஞ்செய்தாய்கருமந்தானிதன்மேலுண்டோ. (அக)

அறைகழலலங்கல்வீரராயவர்புரிவதாண்மைத்
துறையெனலாயிற்றன்றேதொன்மையினன் னூற்கெல்லாம்
இறைவனீயென்னேச்செய்ததீதெனிலிலங்கைவேந்தன்
முறையலசெய்தானென்றுமுனிதியோமுனிவிலாதாய். (அஉ)

இருவர்போரெதிருங்காலையிருவருநல்லுற்றாரோ
ஒருவர்மேற்கருணைதூண்டியொருவர்மேலொளித்துநின்று
வரிசிலைகுழையவாங்கிவாயம்புமருமத்தெய்தல்
தருமமோபிறிதொன்றுமோதகுகிலதென்னும்பக்கம். (அங)

வேறு. வீரமன்றுவிதியன்றுமெய்ம்மையின்
வாரமன்றுநின்மண்ணினுக்கென்னுடல்
பாரமன்றுபகையன்றுபண்பொழிந்
தீரமன்றிதுவென்செய்தவாறுநீ. (அச)

இருமைநோக்கினின்றியாவர்க்குமொக்கின்ற
அருமையாற்றலன்றேவறங்காக்கின்ற
பெருமையென்பதிதென்பிழைபேணல்விட்
டொருமைநோக்கியொருவற்குதவலோ. (அடு)

செயலேச்செற்றபகைதெறுவான்றெரிந்
தயலேப்பற்றித்துணையமைந்தாயெனின்
புயலேப்பற்றுமப்பொங்கரிபோக்கியோர்
முயலேப்பற்றுவதென்னமுயற்சியோ. (அசு)

காரியன்றகளங்கநிறத்தொன்மை
ஊரியன்றமதிக்குளதாமெனச்
சூரியன்மரபுக்குமோர்தொன்மறு
ஆரியன்பிறந்தாக்கினேயாமரோ. (அஎ)

மற்றொருத்தன்வலிந்தறைகூறவந்
துற்றவென்னையொளித்துயிருண்டநீ
இற்றையிற்பிறர்க்கும்மிகலேதென
நிற்றிபோலுங்கிடந்தநிலத்தரோ. (அஅ)

நூலியற்கையுநுங்குலத்துந்தையர்
போலியற்கையுஞ்சீலமும்போற்றலை
வாலியைப்படுத்தாயலைமன்னற
வேலியைப்படுத்தாய்விறல்வீரனே. (அசு)

தாரமற்றொருவன்கொளத்தன்கையிற்
பாரவெஞ்சிலைவீரம்பழிப்பதே
நேருமன்றுமறைந்துநிராயுதன்
மார்பினெய்யவோவில்லிகல்வல்லதே. (கூ0)

என்றுதானுமெயிறுபொடிபடத்
தின்றுகான்றுவிழிவழித்தீயுக
அன்றவாலியனையனகூறினன்
நின்றவீரனினையநிகழ்த்தினன். (கூக)

பிலம்புக்காய்நெடுநாள்பெயராயெனப்
புலம்புற்றுன்வழிப்போதலுற்றுன்றனைக்
குலம்புக்கான்றமுதியர்குறிக்கொணீ
அலம்பொற்றூரவனேயரசென்றலும். (கூஉ)

வானமாளவென்றம்முனைவைத்தவன்
தானுமாளக்கினையினிறத்தடிந்
தியானுமாள்வெனிருந்தரசாள்கிலென்
ஊனமானவுரைபகர்ந்தீரென. (கூங)

பற்றியான்றபடைத்தலைவீரரும்
முற்றுணர்ந்தமுதியருமுன்பரும்
எற்றுநும்மரசெய்துவையாமெனக்
கொற்றநன்முடிகொண்டதக்கோதிலான். (கூச)

வந்தவுன்னைவணங்கிமகிழ்ந்தனன்
எந்தையென்கணினத்தவராற்றலின்
தந்தவுன்னரசென்றுதருக்கிலான்
முந்தையுற்றதுசொற்றமுனிந்துநீ. (கூடு)

கொல்லலுற்றனையும்பியைக்கோதவற்
கில்லையென்பதுணர்ந்துமிரங்கலை
அல்லல்செய்யேலுனக்கபயம்பிழை
புல்லலென்னவும்புல்லலைபொங்கினாய். (கூசு)

ஊற்றமுற்றுடையானுனக்காரமர்
தோற்றுமென்றுதொழுதுயர்கையனீ
கூற்றமுண்ணக்கொடுப்பெனென்றெண்ணினாய்
நாற்றிசைக்கும்புறத்தையுநண்ணினான். (கூஎ)

அன்னதன்மையறிந்துமருளலே
பின்னவனிவனென்பதும்பேணலே
வன்னிதானிடுசாபவரம்புடைப்
பொன்மலைக்கவனண்ணலிற்போகலே. (கூஅ)

ஈரமாவதுமிற்பிறப்பாவதும்
வீரமாவதுங்கல்வியின்மெய்ந்நெறி
வாரமாவதுமற்றொருவன்புணர்
தாரமாவதைத்தாங்குந்தருக்கரோ. (கூக)

மறந்திறம்பல்வலியமெனுமனம்
புறந்திறம்பலெளியவர்ப்பொங்குதல்
அறந்திறம்பலருங்கடிமங்கையர்
திறந்திறம்பறெளிவுடையோர்க்கெலாம். (க00)

தருமமின்னதெனுந்தகைத்தன்மையும்
இருமையுந்தெரிந்தெண்ணலேயெண்ணினுல்
அருமையும்பிதன்னுருயிர்த்தேவியைப்
பெருமைநீங்கினேயெய்திப்பெறுதியோ. (க0க)

ஆதலானுமவனெனக்காருயிர்க்
காதலானெனலானுநிற்கட்டனென்
ஏதிலாருமெளியரென்றுரையும்
தீதுதீர்ப்பதென்சிந்தைக்கருத்தரோ. (க0உ)

பிழைத்ததன்மையிதுவெனப்பேரெழில்
தழைத்தவீரனுரைசெயத்தக்கிலா
இழைத்தவாலியியல்பலவித்தணை
விழைத்திறத்தொழிலென்னவிளம்புவான். (க0ங)

அய்யனுங்களருங்குலக்கற்பினம்
பொய்யின்மங்கையர்க்கேய்ந்தபுணர்ச்சிபோல்
செய்திலன்னெமைத்தேமலர்மேலவன்
எய்தினெய்தியதாகவியற்றினுன். (க0ச)

மணமுமில்லமறைநெறிவந்தன
குணமுமில்லக்குலமுதற்கொத்தன
உணர்வுசென்றுழிச்செல்லுமொழுக்கலால்
நிணமுநெய்யுமிணங்கியநேமியாய். (க0ஞ)

பெற்றிமற்றிதுபெற்றதொர்பெற்றியிற்
குற்றமுற்றிலெனீயதுகோடியால்
வெற்றியுற்றதொர்வெற்றியினுயெனுச்
சொற்றசொற்றகைக்குற்றதுசொல்லுவான். (க0ரு)

நலங்கொடேவரிற்றேன்றிநவையறக்
கலங்கலாவறநன்னெறிகாண்டலின்
விலங்கலாமைவிளங்கியதாதலான்
அலங்கலார்க்கிதடுப்பதன்றுமரோ. (கoஎ)

பொறியின்யாக்கையதோபுலனேக்கிய
அறிவின்மேலதன்றேவறத்தாறுதான்
நெறியுநோன்மையைநேர்நின்றுணர்ந்தநீ
பெறுதியோபிழையுற்றுறுபெற்றிதான். (கoஅ)

மாடுபற்றியிடங்கர்வலித்திடக்
கோடுபற்றியகொற்றவற்கூயதோர்
பாடுபெற்றவுணர்வின்பயத்தினுல்
வீடுபெற்றவிலங்கும்விலங்கரோ. (கoக)

சிந்தைநல்லறத்தின்வழிச்சேர்தலால்
பைந்தொடித்திருவின்பரிவாற்றுவான்
வெந்தொழிற்றிறல்வீடுபெற்றெய்திய
எந்தையும்மெருவைக்கரசல்லனே. (ககo)

நன்றுதீதென்றியறைநல்லறி
வின்றிவாழ்வதன்றேவிலங்கின்னிடை
நின்றநன்னெறிநீயறியாநெறி
ஒன்றுமின்மையுன்வாய்மையுணர்த்துமால். (ககக)

தக்கவின்னதகாதனவின்னவென்
றெக்கவுன்னலராயினுயர்ந்துள
மக்களும்விலங்கேமனுவின்னெறி
புக்கவேலவ்விலங்கும்புத்தேளிரே. (ககஉ)

காலனுற்றல்கடிந்தகணிச்சியான்
பாலனுற்றியபத்திபயத்தலான்
மாலனுற்றருவன்பெரும்பூதங்கள்
நாலனுற்றலுமாற்றுழிநண்ணினுய். (கககூ)

மேவருந்தருமத்துறைமேவினுர்
ஏவரும்பவத்தாலிழிந்தோர்களும்
தாவருந்தவரும்பலதன்மைசால்
தேவரும்மூளர்தீமைதிருந்தினுர். (கக௪)

இனையதாதலினெக்குலத்தியாவர்க்கும்
வினையினுல்வருமேன்மையுங்கீழ்மையும்
அனையதன்மையறிந்துமழித்தனை
மனையின்மாட்சியென்றுன்மனுநீதியான். (ககஙி)

வேறு. அவ்வுரையமையக்கேட்டவரிகுலத்தரசுமாண்ட
செவ்வியோயினையதாகச்செருக்களத்துருத்தெய்யாதே
வெவ்வியபுளிஞரென்னவிலங்கியேமறைந்துவில்லால்
எவ்வியதென்னையென்றுனிலக்குவனியம்பலுற்றான். (ககசு)

முன்புநின்றம்பிவந்துசரண்புகமுறையிலோயைத்
தென்புலத்துய்ப்பெனென்றுசெப்பினன்செருவினீயும்
அன்பினையுயிருக்காகியடைக்கலம்யானுமென்றி
என்பதுகருதியண்ணன்மறைந்துநின்றெய்ததென்றான். (ககள)

கவிகுலத்தரசுமன்னன்கட்டுரைமனத்திற்கொண்டான்
அவியுறுமனத்தனாகியறத்திறனழியச்செய்யான்
புவியிடையண்ணலென்பதெண்ணினன்பொருந்திமுன்னே
செவியுறுகேள்விச்செல்வன்சென்னியையிறைஞ்சிச்சொன்னான். (ககஅ)

தாயெனவுயிர்க்குரல்கித்தருமமுந்தகவுஞ்சால்பும்
நீயெனநின்றநம்பிநெறியினிலுலக்குநேர்மை
நாயெனநின்றவெம்பானவையறவுணரலாமே
தீயனபொறுத்தியென்றுன்சிறியனசிந்தியாதான். (ககக)

இரந்தனன்பின்னுமெந்தையாவதுமெண்ணறேற்றுக்
குரங்கெனக்கருதிநாயேன்கூறியமனத்துக்கொள்ளேல்
அரந்தைவெம்பிறவியென்னுயிர்க்கருமருந்தனையவையா
வரந்தருவள்ளாலொன்றுகேளெனமறுத்துஞ்சொல்வான். (கஉ0)

வேறு. ஏவுகூர்வாளியாலெய்துநாயடியனேன்
ஆவிபோம்வேலைவாயறிவுதந்தருளினாய்
மூவர்நீமுதல்வனீமுற்றுநீமற்றுநீ
பாவநீதருமநீபகையுநீயுறவுநீ. (கஉக)

புரமெலாமெரிசெய்தோன்முதலினோர்பொருவிலா
வரமெலாமுருவியென்வசையிலாவலிமைசால்
உரமெலாமுருவியென்னுயிரெலாநுகருநின்
சரமலாற்பிறிதுவேறுளதரோதருமமே. (கஉஉ)

யாவருமெவையுமாயிருதுவும்பயனுமாய்ப்
பூவுநல்வெறியுமொத்தொருவரும்பொதுமையாய்
ஆவனீயாவதென்றறிவினாரருளினார்
தாவரும்பதமெனக்கருமையோதனிமையோய். (கஉங)

உண்டெனுந்தருமமேயுருவமாயுடையநிற்
கண்டுகொண்டேனினிக்காணவென்கடவெனோ
பண்டொடின்றளவுமேயென்பெரும்பழவினைத்
தண்டமேயடியனேற்குறுபதந்தருவதே. (கஉச)

வேறு. மற்றினியுதவியுண்டோவானினுமுயர்ந்தமானக்
கொற்றவனின்னையென்னைக்கொல்லியகொணர்ந்துதொல்லைச்
சிற்றினக்குரங்கினுடந்தெரிவுறச்செய்தசெய்கை
வெற்றரசெய்தியெம்பிவீட்டரசெனக்குவிட்டான். (கஉஙி)

ஓவியவுருவாயேனுளதொன்றுபெறுவதுன்பால்
பூவியனறவமாந்திப்புந்திவேறுற்றபோது
தீவினையற்றுமேனுமெம்பிமேற்சீறியென்மேல்
ஏவியபகழியென்னுங்கூற்றினையேவலென்றான். (கஉசு)

இன்னுமொன்றிரப்பதுண்டாலெம்பியையும்பிமார்கள்
தன்மூனைக்கொல்வித்தானென்றிகழ்வரேற்றடுத்திதக்கோய்
முன்மூனேமொழிந்தாயென்றேயிவன்குறைமுடிப்பதையா
பின்னவன்வினையின்செய்கையதனையும்பிழைக்கலாமோ. (கஉஎ)

மற்றிலெனெனினுமாயவரக்கனைவாலிற்பற்றிக்
கொற்றவனின்கட்டங்குரக்கியற்றொழிலுங்காட்டப்
பெற்றிலென்கடந்தசொல்லிற்பயனிலைப்பிறிதொன்றேனும்
உற்றதுசெய்கென்றுலுமுரியனிவ்வதுமனென்றான். (கஉஅ)

அனுமனென்பவனையாழியையநின்செய்யசெங்கைத்
தனுவெனநினைதிமற்றென்றம்பினின்றம்பியாக
நினைதியோர்துணைவரின்னேரனையவரிலைநீயீண்டவ்
வனிதையைநாடிக்கோடிவானினுமுயர்ந்ததோளாய். (கஉக)

என்றவற்கியம்பிப்பின்னரிருந்தனனிளவறன்னை
வன்றுணைத்தடக்கைதீட்டிவாங்கினன்றழுவிமைந்த
ரென்றுனக்குரைப்பதுண்டாலுறுதியஃதுணர்ந்துகோடி
குன்றினுமுயர்ந்ததோளாய்வருந்தலையென்றுகூறும். (கஙஂ)

மறைகளுமுனிவர்யாருமலர்மிசையனுமற்றைத்
தூறைகளின்முடிவுஞ்சொல்லுந்துணிபொருடெளிவிற்றூக்கி
அறைகழலிராமனுகியறநெறிநிறுத்தவந்த
இறையொருசங்கையின்றியெண்ணுதியெண்ணமிக்கோய். (கஙக)

நிற்கின்றசெல்வம்வேண்டிநெறிநின்றபொருள்களெல்லாம்
கற்கின்றவிவன்றனுமங்கருதவிவனைக்கண்டாய்
பொற்குன்றமனையதோளாய்பொதுநின்றதலைமைநோக்கின்
எற்கொன்றவலியேசாலுமிதற்கொன்றுமேதுவேண்டா. (கஙஉ)

கய்தவமியற்றியாண்டுங்கழிப்பருங்கணக்கிற்றீமை
வய்கலும்புரிந்துளாரும்வானுயர்நிலையைவள்ளல்
எய்தவர்பெறுவரென்றுலினையடியிறைஞ்சியேவல்
செய்தவர்பெறுவதையாசெப்பலாஞ்சீர்மைத்தாமோ. (கஙங)

அருமையென்விதியினுரேயுதவுவானமைந்தகாலே
இருமையுமெய்திஞெய்மற்றினிச்செயற்பாலதெண்ணின்
திருமறுமார்பனேவல்சென்னியிற்சேர்த்திச்சிந்தை
ஒருமையினிறுவிமும்மையுலகினுமுயர்தியன்றே. (கசு)

மதவியல்குரக்குச்செய்கைமயர்வொடுமோற்றிவள்ளல்
உதவியையுன்னியாவியுற்றிடத்துதவுகிற்றி
பதவியையெவர்க்குநல்கும்பண்ணவன்பணித்தயாவும்
சிதைவிலசெய்துகொய்திற்றீர்வரும்பிறவிதீர்தி. (கசுடு)

அரசியற்பாரம்பூரித்தயர்ந்தனையிகழாதையன்
மரைமலர்ப்பாதநீங்காவாழுதிமன்னரென்பார்
எரியனற்குரியாரென்றேயெண்ணுதியெண்ணம்யாவும்
புரிதிசிற்றடிமைகுற்றம்பொறுப்பரென்றெண்ணவேண்டா. (கசுசு)

என்னவித்தகையவாயவுறுதிகள்யாவுமேங்கும்
பின்னவற்கியம்பிபின்றபேரெழிலானைநோக்கி
மன்னவர்க்கரசன்மைந்தமற்றிவன்சுற்றத்தோடும்
உன்னடைக்கலமென்றுந்தியுயர்கரமுச்சிவைத்தான். (கசுஎ)

வைத்தபின்னுரிமைத்தம்பிமாமுகநோக்கிவல்லே
உய்த்தனைகொணர்தியுன்றனுங்கருமகனையென்ன
அத்தலையவனையேவியழைத்தலினனைந்தானென்ப
கய்த்தலத்துவரிநீரைக்கலக்கினன்பயந்தகாளை. (கசுஅ)

சுடருடைமதிமென்னத்தோன்றினன்றேன்றியாண்டும்
இடருடையுள்ளத்தோரையெண்ணினுமுணர்ந்திலாதான்
மடருடைநறுமென்சேக்கைமலையன்றியுதிரவாரிக்
கடரிடைக்கிடந்தகாதற்றுதையைக்கண்ணிற்கண்டான். (கசுக)

கண்டனன்கலுழிநீருங்குருதியுங்காலமாலைக்
குண்டலமலம்புகின்றகுவவுத்தோட்குரிசிறிங்கள்
மண்டிலமுலகில்வந்துகிடந்ததம்மதியின்மீதா
விண்டலந்தன்னினின்றேர்மீன்விழுந்தென்னவீழ்ந்தான். (கசo)

எந்தையேயெந்தையேயிவ்வெழுதிரைவளாகத்தியார்க்கும்
சிந்தையாற்செய்கையாலோர்தீவினைசெய்திலாதாய்
நொந்தனையதுதானிற்கநின்முகநோக்கிக்கூற்றம்
வந்ததேயன்றேவஞ்சாதாரதன்வலியைத்தீர்ப்பார். (கசக)

தறையடித்ததுபோற்றீராத்தகையவித்திசைகடாங்கும்
கறையடிச்கழிவுசெய்தகண்டகனெஞ்சமுன்றன்
நிறையடிக்கோலவாலினிலைமையையுன்னுந்தோறும்
பறையடிக்கின்றவந்தப்பயமறப்பறந்தவன்றே. (கசஉ)

குலவரைநேமிக்குன்றமென்றுவானுயர்ந்தகோட்டின்
தலைகளுநின்பொற்றளிற்றழும்பினிற்றவிர்ந்தவன்றே
மலைகொளுமரவுமற்றுமதியமும்பலவுந்தாங்கி
அலைகடல்கடையவேண்டினரினிக்கடைவரையா. (கசஉ)

பஞ்சின்மெல்லடியாள்பாகன்பாதுகமல்லயாவும்
அஞ்சலித்தறியாச்செங்கையாணையாயமர்யாரும்
எஞ்சலரிருந்தாருன்னுலின்னமிழ்தீந்தனீயோ
துஞ்சினவள்ளியோர்கணின்னின்யார்சொல்லற்பாலார். (கசச)

ஆயனபலவும்பன்னியழுங்கினன்புழுங்கிநோக்கித்
தீயுறுமெழுகிற்சிந்தையலமருஞ்செங்கண்வாலி
நீயினியயர்வாயல்லையென்றுதன்னெஞ்சிற்புல்லி
நாயகனிராமன்செய்தநல்வினைப்பயனிதென்றான். (கசடு)

தோன்றலுமிறத்தருனுந்துகளறத்துணிந்துநோக்கின்
மூன்றுலகத்திஞர்க்குமூலத்தேமுடிந்தவன்றே
யான்றவமுடைமையாலிவ்விறுதிவந்திசைந்ததியார்க்கும்
சான்றெனநின்றவீரன்றன்வந்துவீடுதந்தான். (கசசு)

பாலமைதவிர்நீயென்சொற்பற்றுதியென்னினைய
மேலொருபொருளுமில்லாமெய்ப்பொருள்வில்லுந்தாங்கிக்
கால்தரைதோயநின்றுகட்புலக்குற்றதம்மா
மால்தரும்பிறவிநோய்க்குமருந்தெனவணங்குமைந்த. (கசஎ)

என்னுயிர்க்கிறுதிசெய்தானென்பதையிறையுமெண்ணு
துன்னுயிர்குறுதிசெய்தியிவற்கமருற்றதுண்டேல்
பொன்னுயிர்த்தொளிரும்பூணுய்போதுதிநிலைமைநோக்கி
மன்னுயிர்க்குறுதிசெய்வான்மலரடிசுமந்துவாழ்தி. (கசஅ)

என்றனனினையவாயவுறுதிகள்யாவுஞ்சொல்லித்
தன்றுணைத்தடக்கையாரத்தனயனைத்தழுவிச்சாலக்
குன்றினுமுயர்ந்ததிண்டோட்குரக்கினத்தரசன்கொற்றப்
பொன்றிணிவயிரப்பைம்பூட்புரவலன்றன்னைநோக்கி. (கசக)

நெய்யடைநெடுவேற்றானைநீனிறநிருதரென்னும்
தய்யடைக்கனலியன்னதோளினன்றொழிலுந்தூயன்
பொய்யடையுள்ளத்தார்க்குப்புலப்படாப்புலவமற்றுன்
கய்யடையாகுமென்றவ்விராமற்குக்காட்டுங்காலை. (கடo)

தன்னடிதாழ்தலோடுந்தாமரைத்தடங்கணானும்
பொன்னுடைவாளைநீட்டிநீயிதுபொறுத்தியென்றான்
என்னலுமுலகமேழுமேத்தினவிறந்துவாலி
அன்னிலைதுறந்துவானுக்கப்புறத்துலகனுணன். (கடுக)

கய்யவணெகிழ்தலோடுங்கடுங்கணைகாலவாலி
வெய்யமார்பகத்துட்டங்காதுருவிமேக்குயரமீப்போய்த்
தெய்யநீர்க்கடலுட்டோய்ந்துதூய்மலரமரர்சூட்ட
அய்யன்வெங்விடாதகொற்றத்தாவம்வந்தடைந்ததன்றே. (கடுஉ)

வாலிவதைப்படலம் முற்றிற்று. ஆடதிருவிருத்தம். நகசு.

அ-ஆவது. அரசியற்படலம்.

வாலியுமேகினன்விண்வரம்பிலாவாற்றலோடும்
பாலியாமுன்னர்நின்றபரிதிச்சேய்செங்கைபற்றி
ஆலிலைப்பள்ளியானுமங்கதனோடும்போனன்
வேல்விழித்தாரைகேட்டாள்வந்தவன்மேலின்வீழ்ந்தாள். (க)

குங்குமங்கொட்டியன்னகுவிமுலைக்குவட்டுக்கொக்கப்
பொங்குவெங்குருதிபோர்ப்பப்புரிகுழல்சிவப்பப்பொற்றோள்
அங்கவனலங்கன்மார்பிற்புரண்டனளகன்றசெக்கர்
வெங்கதிர்விசும்பிற்றோன்றுமின்னெனத்திகழுமெய்யாள். (உ)

வேய்ங்குழல்விளிகொணல்யாழ்வீணையென்றினையநாண
ஏங்கினளிரங்கிவிம்மியுருகினளிருகைகூப்பித்
தாங்கினடலயிற்சோர்ந்துசரிந்துதாழ்குழல்கடள்ளி
ஓங்கியகுரலாற்பன்னியினையனவுரைக்கலுற்றாள். (ஙு)

வேறு. வரைசேர்தோளிடைநாளும்வைகுவேன்
கரைசேராவிடர்வேலைகாண்கலேன்
உரைசேராருயிரேயெனுள்ளமே
அரைசேயானிதுகாணவஞ்சினேன். (ச)

துயராலேதொலையாதவென்னையும்
பயிராயோபகையாதபண்பினோய்
செயிர்தீராய்வினியானதெய்வமே
உயிர்போனுடலாருமுய்வரோ. (ஙு)

நறிதாநல்லமிழ்துண்ணநல்கலின்
பிறியாவின்னுயிர்பெற்றபெற்றிதாம்
அறியாரோநமனுரதன்றெனின்
சிறியாரோவுபகாரஞ்சிந்தியார். (சு)

அணங்கார்பாகனையாசைதோறுழற்
றுணங்காவொண்மலர்கொண்டுளன்பொடும்
இணங்காக்காலமிரண்டொடொன்றினும்
வணங்காதித்துணைவைகவல்லையோ. (எ)

வரையார்தோள்பொடியாடவைகுவாய்
தரைமேலாயுறுதன்மையீதெனக்
கரையாதேனீடுபூசல்கண்டுமென்
றுரையாயென்வயினூனம்யாவதோ. (அ)

நய்யாநின்றனெஞ்னிருந்திஞன்
மெய்வாஞேர்திருநாடுமேவினாய்
அய்யாநீயெனதாவியென்பது
பொய்யோபொய்யுரையாதபுண்ணியா. (க)

செருவார்தோளநின்சிந்தையுளெனெனின்
மருவார்வெஞ்சரமெனையும்வெளவுமால்
ஒருவேனுள்ளுளேயாகினுய்தியால்
இருவேமுள்ளிருவேமிருந்திலேம். (கo)

எந்தாய்நீயமிழ்தீயயாமெலாம்
உய்ந்தேமென்றுபகாரமுன்னுவார்
நந்தாநாண்மலர்சிந்திநண்பொடு
வந்தாரோவெதிர்வானுளோரெலாம். (கக)

ஓயாவாளியொளித்துநின்றெய்வான்
ஏயாவந்தவிராமனென்றுளான்
வாயாலேயினனென்னின்வாழ்வெலாம்
ஈயாயோவமிழ்தேயுமீகுவாய். (கஉ)

சொற்றேன்முந்துறவன்னசொற்கொளாய்
அற்றுனன்னதுசெய்கலானென
உற்றுயும்பியையூழிகாணுநீ
இற்றுய்நானுளேயென்றுகாண்கெனே. (கஙு)

நீருமேருவுநெருக்கினுல்
மாரேர்வாளியுன்மார்பையீர்வதோ
தேறேன்யானிதுதேவர்மாயமோ
வேரேர்வாலிகொலாம்விளிந்தனான். (கச)

தகைநேர்வண்புகழ்நின்றுதம்பியார்
பகைநேர்வாருளரானபண்பினுல்
உகநேர்சிந்தியுலந்தழிந்தவால்
மகனேகண்டிலையோநம்வாழ்வெலாம். (கஞ)

அருமைந்தற்றமகற்றும்வில்லியார்
ஒருமைந்தற்குமடாதுதுன்னினுர்
தருமம்பற்றியதக்கவர்க்கெலாம்
கருமங்கட்டளேயென்றல்கட்டதோ. (கசு)

என்ருளின்னனபன்னியின்னலோ
டொன்ருளு ணர்வேதுமுற்றிலாள்
நின்ருளங்நிலோக்கிநீதிசால்
வன்ருண்மால்வரையன்னமாருதி. (கஎ)

மடவாரால மடந்தைமுன்னர்வாழ்
இடமேவும்புடியேவிவாலிபால்
கடன்யாவுங்கடைகண்டுகண்ணலே
டனுவுற்றவெலாமுணர்த்தலும். (கஅ)

அகம்வேரற்றுகவீசருக்கனுர்
புகமேலக்கிரிபுக்கபோழ்தினின்
நகமேயொத்தகுரக்குநாயகன்
முகமேயொத்தது மூரிமண்டிலம். (கக)

மறைந்தான்மாலையருக்கன்வள்ளியோன்
உறைந்தான்மங்கைதிறத்தையுன்னுவான்
குறைந்தானெஞ்சுகுழைந்தழுங்குவான்
நிறைந்தார்கங்குலின்வேலைநீங்கினுன். (உ0)

புதல்வன்பொன்மகுடம்பொறுக்கலான்
முதல்வன்பேருவகைக்குமுந்துவான்
உதவும்பூமகள்சேரவொண்மலர்க்
கதவஞ்செய்யகரத்தினீக்கினுன். (உக)

அதுகாலத்தவருட்குநாயகன்
மதிசாறம்பியைவல்லையேவினுன்
கதிரோன்மைந்தனையயகைளான்
விதியான்மௌலிமிலைச்சுவாயென்ருன். (உஉ)

அப்போதேயருணின்றவண்ணலும்
மெய்ப்போர்மாருதிதன்னைவீரநீ
இப்போதேகொணரின்னசெய்வினைக்
கொப்பாம்யாவையுமென்றுணர்த்தலும், (உங)

மண்ணுங்நீர்முதன்மங்கலங்களும்
எண்ணும்பொன்முடியாதும்யாவையும்
நண்ணும்வேலினம்பிதம்பியும்
திண்ணஞ்செய்வனசெய்துசெம்மலை. (உச)

மறையோராசிவழங்கவானுளோர்
நறைதோய்நாண்மலர்தூவநன்னெறிக்
கிறையோன்றன்னிலையோனவ்வேந்தலைத்
துறையோர்நான்முறைமௌலிசூட்டினுன். (உரு)

பொன்மாமௌலிபுனைந்துபொய்யிலான்
தன்மானக்கழறூழும்வேலையின்
நன்மார்பிற்றழுவுற்றநாயகன்
சொன்னன்முற்றியசொல்லினெல்லையான். (உசு)

வேறு. ஈண்டுநின்றேகுநீநின்னியல்பமையிருக்கையெய்தி
வேண்டுவமரபினெண்ணிவிதிமுறையியற்றிவீர
பூண்டபேரரசுக்கேற்றயாவையும்புரிந்துபோரில்
மாண்டவன்மைந்தனெம்வாழ்நிலற்றிருவின்வைகி. (உஎ)

வாய்மைசாலறிவின்வாய்த்தமந்திரமாந்தரோடும்
தீய்மைதீரொழுக்கின்வந்ததிறத்தொழின்மறவரோடும்
ஆய்மைசால்புனர்ச்சிபேணித்துகளறுதொழிலையாகிச்
சேய்மையோடணிமையின்றித்தேவரிற்றெரியநிற்றி. (உஅ)

புகையுடைத்தென்னினுண்டுபொங்கனலங்கென்றுன்னும்
மிகையுடைத்துலகநூலோர்வினையமும்வேண்டற்பாற்றே
பகையுடைச்சிந்தையார்க்கும்பயனுறுபண்பிற்றீரா
நகையுடைமுகத்தையாகியின்னுரைசால்குநாவால். (உக)

தேவருமருடற்கொத்தசெயிரறுசெல்வமஃதுன்
காவலுக்குரியதென்றுலன்னதுகருதிக்காண்டி
ஏவருமினியநண்பரயலவர்விரவாரென்றிம்
மூவகையியல்பிற்றருகுமூனவர்க்குமூலகமூன்றின். (ஈ0)

செய்வனசெய்தல்யாண்டுந்தீயனசிந்தியாமல்
வய்வனவந்தபோதும்வசையிலவினியகூறல்
மெய்யனவழங்கல்யாவுமேவினவெஃகலின்மை
உய்வனவாக்கித்தம்மோடுயர்வறவுயர்ந்ததோளாய். (ஈக)

சிறியரென்றிகழ்ந்துநொய்வுசெய்வனசெய்யன்மற்றிந்
நெறியிகழ்ந்தியானேர்தீமையிழைத்தலாலுணர்ச்சிநீண்டு
குறியதாமேனியாயகூனியாற்குவவுத்தோளாய்
வெறியனவெய்திநொய்தின்வெந்துயர்க்கடலின்வீழ்ந்தேன். (ஈஉ)

மங்கையர்பொருட்டாலெய்துமாந்தர்க்குமரணமென்றல்
சங்கையின்றுணர்திவாலிசெய்கையாற்சாலுமின்னும்
அங்கவர்திறத்தினானேயல்லலும்பழியுமாதல்
எங்களிற்காண்டியன்றேயிதற்குவேறெதியாதோ. (ஈஈ)

நாயகனல்லனம்மைநனிபயந்தெடுத்துநல்கும்
தாயெனவினிதுபேணத்தாங்குதிதாங்குவாரை
ஆயதுதன்மையேனுமறவரம்பிகவாவண்ணம்
தீயனவந்தபோதுசுடுதியாற்றீமையோரை. (ஈச)

இறத்தலும்பிறத்தருணமென்பனவிரண்டும்யாண்டும்
திறத்துளிநோக்கிற்செய்தவினைதரத்தெரிந்தவன்றே
புறத்தினியுரைப்பதென்னேபூவின்மேற்புனிதற்கேனும்
அறத்தினதிறுதிவாழ்நாட்கிறுதியஃதுறுதியென்ப. (கடு)

ஆக்கமுங்கேடுந்தாஞ்செயறத்தொடுபோவமாய
நோக்கிவேறுண்மைதேரார்பொருவரும்புலமைநூலோர்
தாக்கினவொன்றேடொன்றுதருக்குறுஞ்செருவிற்றக்கோய்
பாக்கியமின்றிமற்றும்பாவத்தைப்பற்றலாமோ. (கசு)

இன்னதுதகைமையென்பவியல்புளிமரபினெண்ணி
மன்னரசியற்றியென்கண்வருவழிமாறிக்காலம்
பின்னுவமுறையினுன்றன்பெருங்கடற்சேனையோடும்
துன்னுதிபோதியென்றுன்சுந்தரனவனுஞ்சொல்வான். (கஎ)

குரங்குறையிருக்கையென்னுங்குற்றமேகுற்றமல்லால்
அரங்கெழுதுறக்கநாட்டுக்கரசெனலாயதன்றே
மரங்கிளரருவிக்குன்றம்வள்ளனீமனத்தினெம்மை
இரங்கியபணியாமெய்தவிருத்தியாற்சிலநாளெம்பால். (கஅ)

அரிந்தமனின்னையண்மியருளுக்குமூரியேமாகிப்
பிரிந்துவேறெய்துஞ்செல்வம்வெறுமையிற்பிறிதொன்றுமால்
கருந்தடங்கண்ணினுனைநாடலாங்காலங்காறும்
இருந்தருடருதியெம்மோடென்றடியிணையின்வீழ்ந்தான். (கக)

ஏந்தலுமிதனைக்கேளாவின்னிளமுறுவலுறை
வேந்தமையிருக்கையெம்போல்விரதியர்விழைதற்கொவ்வா
போந்தவணிருப்பினெம்மைப்போற்றவேபொழுதுபோமால்
சேர்ந்தனிற்கமுன்பவ்வரசியற்றருமந்தீர்தி. (கo)

ஏழிரண்டாண்டியான்போந்தெரிவனத்திருக்கவேன்றேன்
வாழியாயரசர்வைகும்வளநகர்வைகலொல்லேன்
பாழியந்தடந்தோள்வீரபார்த்திலேபோலுமன்றே
யாழிசைமொழியோடன்றியானுறையின்பமென்னை. (கக)

தேவிவேறரக்கன்வைத்தசேமத்துளிருப்பத்தான்றன்
ஆவிபோற்றுணவரோடுமெளவிடற்கரியவின்பம்
மேவினுனிராமனென்றுலையவிவ்வெய்யமாற்றம்
மூவகையுலகமுற்றுங்காலத்துமுற்றவற்றே. (கஉ)

இல்லறந்துறந்திலாதோரியற்கையையெதிர்ந்துபோரின்
வில்லறந்துறந்துவாழ்வேனென்கின்றமெய்யையல்லால்
சில்லறம்புரிந்துநின்றதீமைகடீருமாறு
நல்லறந்துறந்தநோன்பினையறநோற்பலென்றான். (கங)

அரசியற்குரியயாவுமாற்றுழியாற்றியான்ற
திரைசெயற்குரியசேனைக்கடலொடுந்திங்கணான்கின்
விரைசுகவென்பானின்னவேண்டினென்வீரவென்றான்
உரைசெயற்கெளிதுமாகியரிதுமாமொழுக்கினின்றான். (சச)

மறித்தொருமாற்றங்கூறான்வானுயர்கொற்றத்தன்னான்
குறிப்பறிந்தொழுகன்மாதோகோதிலராதலென்னு
நெறிப்படர்கண்கள்பொங்கிநீர்வரநெடிதுதாழ்ந்து
பொறிப்பருந்துன்பமுன்னுக்கவிக்குலத்தரசன்போனான். (சரு)

வாலிகாதலனுமாண்டுமலரடிவணங்கினானை
நீலமாமேகமன்னநெடியவனருளினேக்கிச்
சீலநீயுடையையாதலிவன்சிறுதாதையென்னு
மூலமேதந்தநுந்தையாமெனமுறையினிற்றி. (சசு)

என்னமற்றினையகூறியேகவற்றொடரவென்றான்
பொன்னடிவணங்கிமற்றைப்புகழுடைக்குரிசில்போனான்
பின்னர்மாருதியைநோக்கிப்பேரெழில்வீரநீயும்
அன்னவனரசுக்கேற்றதாற்றுதியறிவினென்றான். (சள)

பொய்த்தலிலுள்ளத்தன்புபொழிகின்றபுணர்ச்சியானும்
இத்தலையிருந்துநாயேனையினவெனக்குத்தக்க
கைத்தொழில்செய்வெனென்றுகழலிணைவணங்குங்காலை
மெய்த்தலைநின்றவீரனிவ்வுரைவிளம்பிவிட்டான். (சஅ)

நிரம்பினுனெருவன்காத்தநிறையரசிறுதிநின்ற
வரம்பிலாதசனைமற்றோர்தலைமகன்வலிதிற்கொண்டான்
அரும்புவதலனுந்தீங்குமாகலினையநின்போல்
பெரும்பொறையறிவினோரானிலையினைப்பெறுவதம்மா. (சக)

ஆன்றவற்குரியதாயவரசினைநிறுவியப்பால்
என்றெனக்குரியதாயகருமமுமியற்றற்கொத்த
சான்றவர்நின்னினில்லையாதலாற்றருமந்தானே
போன்றநீயானேவேண்டவத்தலைபோதியென்றான். (கூ)

ஆழியானனையகூறவாணையீதாகினஃதே
வாழியாய்புரிவெனென்றுவணங்கிமாருதியும்போனான்
சூழிமால்யானையன்னதம்பியுந்தானுந்தொல்லை
ஊழிநாயகனும்வேறேருயர்தடங்குன்றமுற்றான். (கூக)

ஆரியனருளிற்போயவ்வகன்மலையகத்தலைய
சூரியன்மகனுமானத்துணைவருங்கினையுஞ்சுற்றத்
தாரையைவணங்கியன்னுடாயெனத்தந்தைமுந்தைச்
சீரியன்சொல்லையென்னச்செவ்விதினரசுசெய்தான். (கூஉ)

வளவரசெய்திமற்றைவானரவீரர்யாரும்
இளஞரினுதவவாணிகளர்திசையளப்பக்கேளோ
டளவிலவாற்றலாண்மையங்கதன்றங்கள்செல்வத்
திளவரசியற்றவேவியினிதினிருந்தானிப்பால். (நிக)

வள்ளலுமவணின்றேகிமதங்கனதிருக்கையான
வெள்ளவான்குடுமிக்குன்றத்தொருசிறைமேவிமெய்ம்மை
அள்ளுறுகாதற்றம்பியன்பிலுலமைக்கப்பட்ட
எள்ளலில்சாலையெய்தியினிதினிருந்தகாலை. (நிச)

அரசியற்படலம் முற்றிற்று. ஆகதிருவிருத்தம் - சநிக.

கூ-ஆவது. கார்காலப்படலம்.

மாவியல்வடதிசைநின்றுவானவன்
ஓவியமேயெனவொளிக்கவின்குலாம்
தேவியைநாடியமூந்தித்தென்றிசைக்
கேவியதூதெனவிரவியேகினான். (க)

பய்யணைப்பூறலைப்பாந்தளேந்திய
மொய்ந்நிலத்தகளியின்முழங்குநீர்நெயின்
வெய்யவன்விளக்கமாமேருப்பொன்றிரி
மய்யெடுத்தொத்ததுமழைத்தவானமே. (உ)

நண்ணுதலருங்கடனஞ்சநுங்கிய
கண்ணுதல்கண்டத்தின்காட்சிகாணலாய்
விண்ணகமிருண்டதுவெயிலின்வெங்கதிர்
தண்ணியமெலிந்தனதழைத்தமேகமே. (ங)

நஞ்சினனளிர்நெடுங்கடலினங்கையர்
அஞ்சனநயனத்தினவிழ்ந்தகூந்தலின்
வஞ்சனையரக்கர்தம்வடிவிற்செய்கையின்
நெஞ்சினிலிருண்டதுநீலவானமே. (ச)

நாட்களினளிர்கடனுரநாவுற
வேட்கைபிற்பருகியமேகமின்னுவ
வாட்கைகண்மயங்கியசெருவின்வார்மதப்
பூட்கைகணிறைந்தபுண்டிறப்பபோன்றவே. (ஞ)

நீனிறப்பெருங்கானிரைத்தநீர்த்தெனச்
சூனிறமுகிற்குலந்துவன்றிச்சூழ்திரை
மானிறனெடுங்கடல்வாரிமூரிவான்
மேனிரைத்துளதெனமுழக்கமிக்கதே. (ட)

அரிப்பெரும்பெயரவன்முதலினோரணி
விரிப்பவுமொத்தனவெற்புமீதுதீ
எரிப்பவுமொத்தனவேசிலாசைகள்
சிரிப்பவுமொத்தனதெரிந்தமின்னெலாம். (எ)

மாதிரக்கருமகன்மாரிக்கார்மழை
யாதினுமிருண்டவிண்ணிருந்தைக்குப்பையின்
கூதிர்வெங்கானெடுந்துருத்திக்கோளமைத்
தூதுவெங்கனலுமிழூலையுமொத்ததே. (அ)

பிரிந்துறைமகளிரும்பிலத்தபாந்தளும்
எரிந்துயிர்ங்கிடவிரவியின்கதிர்
அரிந்தனவாமெனவசனிநாவென
விரிந்தனதிசைதொறுமிசையின்மின்னெலாம். (கூ)

சூடினமணிமுடித்துகளின்விஞ்சையர்
கூடுறைநீக்கியகுருதிவாட்களும்
ஆடவர்பெயர்தொறுமாசையானையின்
ஓடைகளொளிபிறழ்வனவுமொத்ததே. (கo)

எண்வகைநாகங்கடிசைகளெட்டையும்
நண்ணினநாவளைத்தனயமின்னகக்
கண்ணன்மெய்வடிவெனக்கருகிக்கார்விசும்
புண்ணிறையுயிர்ப்பெனவுதைபொங்கவே. (கக)

தலைமையுங்கீழ்மையுந்தவிர்தலின்றியே
மலையினுமரத்தினுமற்றுமூற்றினும்
விலகினோந்துளவழிவிலங்கும்வேசையர்
உலவுறுமனமெனவுலாயதுதையே. (கஉ)

அழுங்குறுமகளிர்தமன்பர்த்தீர்ந்தவர்
புழுங்குறுபுணர்முலைகொதிப்பப்புக்குலாய்க்
கொழுங்குறைத்தசையெனவீர்ந்துகொண்டது
விழுங்குறுபேயெனவாடைவீங்கிற்றே. (கங)

ஆர்த்தெழுதுகள்விசும்படைத்தலானுமின்
கூர்த்தெழுவாளெனப்பிறழுங்கோட்பினும்
தார்ப்பெரும்பணையின்விண்டழுங்குதாவினும்
போர்ப்பெருங்களமெனப்பொலிந்ததும்பரே. (கச)

இன்னகைச்சனகியைப்பிரிந்தவேந்தன்மேல்
மன்மதன்மலர்க்கணைவழுங்கினனெனப்
பொன்னெடுங்குன்றின்மேற்பொழிந்ததாரைகள்
மின்னெடுந்துவன்றினமேகராசியே. (கஞ)

கல்லிடைப்படுந்துளித்துவலைகாரிடு
வில்லிடைச்சரமெனவிசையின்வீழ்ந்தன
செல்லிடைப்பிறந்தசெங்கனலிற்சிந்தின
எல்லிடைமணிசிதர்ந்தழலியற்றல்போல். (கசு)

மள்ளர்கண்ணுறுபடைமானயானைமேல்
வெள்ளிவேலெறிவனபோன்றமேகங்கள்
தள்ளருந்துளிபடத்தகர்ந்துசாய்கிரி
புள்ளிவெங்கடகரிபுரள்வபோன்றவே. (கஎ)

வானிடுதனுநெடுங்கருப்புவின்மழை
மீனெடுங்கொடியவன்பகழிவீழ்துளி
தானெடுஞ்சார்துணைபிரிந்ததன்மையர்
ஊனுடையுடம்பெலாமுழ்கலொத்தவே. (கஅ)

தீர்த்தனுங்கவிகளுஞ்செறிந்துநம்பகை
பேர்த்தனரினிரெனப்பேசிவானவர்
ஆர்த்தெனவார்த்தனமேகமாய்மலர்
தூர்த்தனவொத்தனதுள்ளிவெள்ளமே. (ககூ)

வண்ணவிற்கரதலத்தரக்கன்வாளினன்
விண்ணிடைக்கடிதுகொண்டேகும்வேலையில்
பெண்ணினிற்கருங்கலமனையபெய்வளை
கண்ணெனப்பொழிந்ததுகாலமாரியே. (உ0)

சிரஞ்சுடர்மதிபுனைதேவன்விண்டொடர்
புரஞ்சுடவிடுசரம்புரையுமின்னினம்
அரஞ்சுடப்பொறிங்மிரயிலிணுடவர்
உரஞ்சுடவுளைந்தனபிரிந்துளோர்க்கெலாம். (உக)

பொருடரப்போயினர்ப்பிரிந்தபொய்யுடற்
குருடருதேர்மிசையுயிர்கொண்டெய்த்தலால்
மருடர்பிரிவிஞ்ஞெய்மாசுணங்கெடக்
கருடனைப்பொருவினகாலமாரியே. (உஉ)

முழங்கினமுறைமுறைமூரிமேகநீர்
வழங்கினமிடைவனமானயானைகள்
தழங்கினபொழிமதத்திவலைதாழ்தரப்
புழுங்கினவெதிரெதிர்பொருவபோன்றவே. (உங)

விழைவுறுபொருடரப்பிரிந்தவேந்தர்வந்
தழையுறவுயிருறவுயிர்க்குமாதரின்
மழையுறமாமுகமலர்ந்துதோன்றின
குழையுறப்பொலிந்தனவுலவைக்கொம்பெலாம். (உச)

வேறு. பாடலம்வறுமைகூரப்பகலவன்பசுமைகூரக்
கோடல்கள்பெருமைகூரக்குவலயஞ்சிறுமைகூர
ஆடினமயில்கள்பேசாதடங்கினகுயில்களன்பர்த்
தேடுறத்தளர்ந்தார்போன்றுந்திருவுறக்கிளர்ந்தார்போன்றும். (உடு)

ஈனிறச்சுரும்பும்வண்டுநென்மணியணியுஞ்சாரல்
தேனுகமலர்ந்துசாய்ந்தசெயிதழ்க்காந்தட்செம்பூ
வேனிலவென்றதம்மாகாரெனவியந்துநோக்கி
மானிலக்கிழத்திகைகண்மறித்தனபோன்றமன்னோ. (உசு)

வாளெயிற்றரவம்போலவன்றலைகான்றமானத்
தாளுடைக்கோடறம்மைத்தழீஇயனகாதறங்க
மீளலவையுமன்னவிழைவனவுணர்வுவீந்த
கோளரவென்னப்பின்னியவற்றெடுங்குழைந்துசாய்ந்த. (உஎ)

எள்ளிடவிடனுமின்றியெழுந்தனவிலங்குகோபம்
தள்ளுறத்தலைவர்தம்மைப்பிரிந்தவர்தழீஇயதூமக்
கள்ளுடையோதியார்தங்கலவியிற்பலகாற்கான்ற
வெள்ளடைத்தம்பற்குப்பைசிதர்ந்தெனவிரிந்தமாதோ. (உஅ)

தீங்கனிஈவலோங்குஞ்சேணுயர்குன்றிற்செம்பொன்
வாங்கினகொண்டொரின்மண்டொல்யாறுமான
வேங்கையின்மலருங்கொன்றைவிரிந்தனவியுமீர்த்துத்
தாங்கினகுழிசென்றுதலைமயக்குறுவதம்மில். (உக)

நன்னெடுங்காந்தட்போதினறைவிரிகடுக்கைமென்பூத்
துன்னியகோபத்தோடுந்தோன்றியதோற்றந்தும்பி
இன்னிசைமுரல்வநோக்கியிருநிலமலர்க்கையேந்திப்
பொன்னெடுங்காசையீட்டிக்கொடுப்பதேபோன்றவன்றே. (கூ0)

கிளைத்துணைமழலைவண்டுகின்னரரிகர்த்தமின்னும்
துளிக்குரன்மேகம்வள்வார்தூரியந்துவைப்பபோன்ற
வளைக்கையர்போன்றமஞ்ஞைதோன்றிகளரங்கின்மாடே
விளங்கினமொத்தகாண்போர்விழியொத்தவிளையின்மென்பூ. (கூக)

பேடையுஞ்மிறும்பாயப்பெயர்வுழிப்பிறக்குமோசை
ஊடுறத்தாக்குந்தோறுமொல்லொலிபிறப்பநல்லார்
ஆடியற்பாணிக்கொக்குமாரியவமிழ்தப்பாடற்
கோடியதாளங்கொட்டன்மலர்ந்தகூதாளமொக்க. (கூஉ)

வழைதுறுகானயாறுமாநிலக்கிழத்திமக்கட்
குழைதுறுமலைமாக்கொங்கைசுரந்தபாலொழுக்கையொத்த
விழைவுறுவேட்கைஈளும்வேண்டினர்க்குதவவேண்டிக்
குழைதொறுங்கனகந்தூங்குங்கற்பகநிகர்த்தகொன்றை. (கூஊ)

பூவியல்புறவமெங்கும்பொறிவரிவண்டுபோர்ப்பத்
தீவியகளியவாகிச்செருக்கியகாமச்செவ்வி
ஓவியமரன்கடோறுமுரைத்தறவுரிஞ்சிவொண்கேழ்
நாவியசெவ்விநாறக்கலையொடும்புலந்தவ்வி. (நச)

வேறு. தேரினன்னெடுந்திசைசெலச்செருக்கழிந்தொடுங்கும்
கூரயிற்றருங்கண்ணெனக்குவிந்தனகுவளை
மாரனன்னவர்வரவுகண்டுவக்கின்றமகளிர்
மூரன்மென்குறுமுறுவலொத்தரும்பினமுல்லை. (நடு)

களிக்குமஞ்ஞையக்கண்ணுளரினமெனக்கண்ணுற்
றளிக்குமன்னரிற்பொன்மழைவழங்கினவருவி
வெளிக்கண்வந்தகார்விருந்தெனவிருந்துகண்டுள்ளம்
களிக்குமங்கையர்முகமெனப்பொலிந்தனகமலம். (நசு)

சரதநாண்மலர்யாவையுங்குடைந்தனதடவிச்
சுரதநூறெரிவிடரெனத்தேன்கொண்டுதொகுப்ப
பரதநான்முறைநாடகம்பயனுறப்பகுப்பான்
இரதமீட்டுறுங்கவிஞரைப்பொருவினதேனீ. (நஎ)

நோக்கிஞனமைநோக்கழிகண்டநுண்மருங்குற்
றூக்கணங்கருஞ்சீதைக்குத்தாக்கருந்துன்பம்
ஆக்கிஞனமதுருவினென்றரும்பெறலுவகை
வாக்கிஞனுரையாமெனக்களித்தனமான்கள். (நஅ)

நீடுநெஞ்சுறுநேயத்தானெடிதுறப்பிரிந்து
வாடுகின்றனமருளுறுகாதலின்மயங்கிக்
கூடுநன்னதித்தடந்தொறுங்குடைந்தனபடிவுற்
றூடுகின்றனகொழுநரைப்பொருவினவன்னம். (நஙு)

காரெனும்பெயர்க்கரியவன்மார்பினிற்கதிர்முத்
தாரமென்னவும்பொலிந்தனவளக்கருமளக்கர்
நீர்முகந்தமாமேகத்தினருகுறநிரைத்துக்
கூரும்வெண்ணிறத்திறத்தனபறப்பனகுரண்டம். (சம)

மருவிநீங்கல்செல்லாதெமோலியவானில்
பருவமேகத்தினருகுறக்குருகினம்பறப்ப
திருவினுயகனிவனெனத்தேமறைதெரிக்கும்
ஒருவன்மார்பினுத்தரீயத்தையுமொத்த. (சக)

உறவெதுப்புறுங்கொடுந்தொழில்வேனிலாலெழியத்
திறனினைப்பருங்காரெனுஞ்செவ்வியோன்சேர
நிறமனத்துறுகுளிர்ப்பினெடுநிலமடந்தை
புறமயிர்த்தலம்பொடித்தனபோன்றனபசும்புல். (சஉ)

தேனவாமலர்த்திசைமுகன்முதலினர்தெளிந்தோர்
ஞானநாயகனவையுறநோக்கினநல்கக்
கானம்யாவையும்பரப்பியகண்ணெனச்சனகன்
மானேநாடிநின்றழைப்பனபோன்றனமஞ்ஞை. (சஙு)

செஞ்செவேலவர்செறிசிலைக்குரிசிலிருண்ட
குஞ்சிசேயொளிகதுவறப்புதுநிறங்கொடுக்கும்
பஞ்சிபோர்த்தமெல்லடியெனப்பொலிந்தனபதுமம்
வஞ்சிபோலியர்மருங்கெனதுடங்கினவல்லி. (சச)

நீயிரன்னவர்குதலையராதலினேடிப்
போயதையலைத்தருதிரென்றிராகவன்புகலத்
தேயமெங்கணுந்திரிந்தனபோந்திடைதேடிக்
கூயவாய்க்குரல்குறைந்தபோற்குறைந்தனகுயில்கள். (சஙூ)

பொழிந்தமாநிலம்புற்றரக்குமட்டியபுனிற்ரு
எழுந்தவாம்பிக்ளிடறினசெறிதயிரேய்த்த
மொழிந்தசேனுடைமுகிழ்முலையாய்ச்சியர்முழவில்
பிழிந்தபால்வழிநுரையெனப்பொருவுவபிடவம். (சசு)

வேங்கைபூறினகொடிச்சியர்வெடிக்குழல்விழைவண்
டேங்கநாகமுநாறினதுளைச்சியரைம்பால்
ஓங்குநாண்முல்லைநாறினவாய்ச்சியரோதி
ஞாங்கருற்பலமுழத்தியர்பித்திகைநாற. (சஎ)

தேரைக்கொண்டபேரல்குலாடிருமுகங்காணுன்
ஆரைக்கண்டுயிராற்றுவானல்லுணர்வழிந்தான்
மாரற்கெண்ணில்பல்லாயிரமலர்க்கணைவகுத்த
காரைக்கண்டனன்வெந்துயர்க்கொருகரைகாணுன். (சஅ)

அளவில்காரெனுமப்பெரும்பருவம்வந்தணைந்தால்
தளர்வரென்பதுதவம்புரிவோருக்குந்தகுமால்
இளவிதேனினுமமிழ்தினுங்கினித்தவெள்வளைதோள்
வளவியுண்டவன்வருந்துமென்றுலதுவருத்தோ. (சகு)

காவியுங்கருங்குவளையுநெய்தலுங்காயாம்
பூவையும்பொருவானவன்புலம்பினன்றளர்வான்
ஆவியுஞ்சிறிதுண்டுகொலாமெனவயிர்த்தான்
தூவியன்னமன்னுடிறத்திவையிவைசொல்லும். (ருo)

வேறு. வாரேர்முலையாளைமறைக்குரர்வாழ்
ஊரேயறியேனுயிரோடுழல்வேன்
நீரேயுடையாயருணின்னிலையோ
காரேயெனதாவிகலக்குதியோ. (ருக)

வெப்பார்நெடுமின்னினையிற்றின்வெகுண்
டெப்பாலும்விசும்பினிருண்டெழுவாய்
அப்பாதகவஞ்சவரக்கரையே
ஒப்பாயுயிர்கொண்டலதோவலையோ. (நுஉ)

அயிலேவிழியார்வினையாரமிழ்தின்
குயிலேமொழியார்க்கொணராய்கொடியாய்
துயிலேனொருவேனுயிர்சோர்வுணர்வாய்
மயிலேயெனைநீவலியாதெதியோ. (நுஊ)

மழைவாடையொடாடிவலித்துயிர்மேல்
நுழைவாய்மலர்வாய்கொடியாய்கொடியே
இழைவாணுதலாளிடைபோலிடையே
குழைவாயெனதாவிகுழைக்குதியோ. (நுசு)

விழையேன்விழைவானவைமேன்மையினின்
றிழையேனுணர்வேனவையின்மையினுல்
பிழையேனுயிரோடுபிரிந்தனரால்
உழையேயவரெவ்வுழையாருரையாய். (நுரு)

பயில்பாடகமெல்லடிபஞ்சனையார்
செயிரேதுமிலாரொடுதீருதியோ
அயிராதடனேயகல்வாயலையோ
உயிரேகெடுவாயுறவோர்கிலையோ. (நுசு)

ஒன்றைப்பகராய்குழலுக்குடையாய்
வன்றைப்புறுநீள்வயிரத்தினையே
கொன்றைக்கொடியாய்கொணர்கிற்றிலையே
என்றைக்குறவாகவிருந்தனையே. (நுஎ)

வேறு. குராவுரும்பனையகூர்வாளெயிற்றுவெங்குரூஉகம்
விராவுவெங்கடிவிற்கொல்லுமெல்லினர்மூல்லைவெய்தின்
உராவருந்தியரமூட்டியோய்வறமலைவதொன்றே
இராவணோபநிற்கவிந்திரகோபமென்னை. (நுஅ)

ஓடைவாணுதலினுளியொளிக்கலாமுபாயமுன்னி
நாடிமாரீசனுரோர்நாடகங்வியானுர்
வாடையாய்க்கூற்றினுருமுருவினமாற்றிவந்தார்
கேடுசூழ்வார்க்குவேண்டுமுருக்கொளக்கிடைத்தவன்றே. (நுகூ)

அருவினையரக்கரென்னவந்தரமதனின்யாரும்
வெருவாமுழங்குகின்றமேகமேமின்னுகின்றுய்
தருவலென்றிரங்கினுயோதாமரைமறந்ததையல்
உருவினைக்காட்டிக்காட்டியொளிக்கின்றுயொளிக்கின்றுயால். (சூ0)

உண்ணிறைந்துயிர்க்கும்வெம்மையுயிர்சுடவுடலையுள்ளம்
புண்ணுறவாளிதூர்த்தல்பழுதினிப்போதிமாரா
எண்ணுறுகல்வியுள்ளத்தினையவனின்னேயுன்னேக்
கண்ணுறுமாயிற்பின்னேயாரவன்சிற்றங்காப்பார். (சுக)

வில்லும்வெங்கணையும்வீரர்வெஞ்சமத்தஞ்சினூர்மேல்
புல்லுவல்லவாற்றல்போற்றலர்குறித்தல்போலாம்
அல்லுநன்பகலுநீங்காயநங்கணியருளிற்றீர்ந்தாய்
செல்லுமென்றெளிவந்தேமைச்செயலுறுஞ்சீர்மைத்தாமோ. (சுஉ)

என்னவித்தகையபன்னியீடழிந்திரங்குகின்ற
தன்னையொப்பானைநோக்கித்தகையழிந்தயர்ந்ததம்பி
நின்னையெத்தகையையாகநினைந்தனைநெடியோயென்னுச்
சென்னியிற்சுமந்தகையன்றேற்றுவான்செப்பலுற்றான். (சுங)

வேறு. காலநீளிதுகாருமாரியும்வந்ததென்றகவற்சியோ
நீலமேனியரக்கர்வீரரினைந்தழுங்கியநேர்மையோ
வாலிசேனைமடந்தைவைகிடநாடவாரலதாமையோ
சாலுநல்லுணர்கேள்விவீரதளர்ந்ததென்னைதவத்தினுய். (சுச)

மறைதுளங்கினுமதிதுளங்கினும்வானுமாழ்கடல்வையமும்
நிறைதுளங்கினுநிலைதுளங்குறுநிலைமைநின்வயினிற்குமோ
பிறைதுளங்குவவனையபேரெயிறுடையபேதையர்பெருமைநின்
இறைதுளங்குறுபுருவமென்சிலையிடைதுளங்குறவிசையுமோ. (சுடு)

அணுமனென்பவனளவறிந்தனமறிஞனங்கதனுதியோர்
எனையரென்பதொரிறுதிகண்டிலமெழுபதென்றெணுமியல்பினூர்
வினையின்வெந்துயர்விரவுதிங்களும்விரைவுசென்றனவெளிதினின்
தனுவெனுந்திருநுதலிவந்தனள்சரதம்வன்றுயர்தவிர்தியே. (சுசு)

மறையறிந்தவர்வரவுகண்டமைவலியும்வஞ்சகர்வழியொடுஞ்
குறையவென்றிடர்களெவெனென்றனைகுறைமுடிந்ததுவிதியினால்
இறைவவங்கவரிறுதிகண்டினிதிசைபுனைந்திமையவாகிடாது
உறையுமும்பருமுதவினின்றருளுணர்வழிந்திடவுறுதியேர்
காதுகொற்றனினக்கலாமைபிறர்க்கெவ்வாறுகலக்குமோ
வேதனைக்கிடமாதல்வீரதையன்றுபேதைமையுமாமோ
போதுபிற்படவுண்டிதோர்பொருளன்றியின்றிபுணர்த்தியே
யாதுனக்கியலாததெந்தைவருந்தலென்னவியம்பினான். அ)

சொற்றதம்பியுரைக்குணர்ந்துயிர்சோர்வொடுங்கியதொல்லையோன்
இற்றவின்னலியக்கமெய்திடவைகல்பற்பலவேகமேல்
உற்றுநின்றவினைக்கொடும்பிணியொன்றின்மேலுடனென்றுரா
மற்றும்வெம்பிணிபற்றினுலெனவந்தெதிர்ந்ததுமாரியே. (சுஎ)

வேறு. நிறைந்தனநெடுங்குளனெருங்கினதரங்கம்
குறைந்தனகருங்குயில்குளிர்ந்தவுயர்குன்றம்
மறைந்தனதடந்திசைவருந்தினர்பிரிந்தார்
உறைந்தனவகன்றிலுடனன்றிலுயிரொன்றி. (எ0)

பாசிழைமடந்தையர்பழிப்பிலகலல்குற்
றூசுதொடரூசனனிவெம்மைதொடர்வுற்றே
வீசியதுவாடையெரிவெந்தவிரிபுண்வீழ்
ஆசிலயில்வாளியெனவாசைபுரிவார்மேல். (எக)

வேலநிறைவுற்றனவெயிற்கதிர்வெதும்பும்
சீலமழிவுற்றபுனலுற்றுருகுசெப்பின்
காலமழிவுற்றுணர்தல்கன்னலளவல்லால்
மாலபகலுற்றதெனவோர்வரிதுமாதோ. (எஉ)

நெற்கிழியநெற்பொதிநிரம்பினநிரம்பாச்
சொற்கிழியநற்கிளிகடோகையவர்தூய்மின்
பற்கிழிமணிப்படர்திரைப்பரதர்மூன்றில்
பொற்கிழிவிரித்தனசினைப்பொதுளுபுன்னை. (எங)

நிறங்கருகுகங்குல்பகனின்றநிலநீவா
அறங்கருதுசிந்தைமுனியந்தணரிலிப்
பிறங்கருநெடுந்துளிபடப்பெயர்வில்குன்றின்
உறங்கலில்விலங்கலினின்றவுயர்வேழம். (எச)

சந்தினடையிற்படலைவேதிகைதடந்தோ
றந்தியிடுகிற்புகைநுழைந்தகுளிரன்னம்
மந்திதுயிலுற்றமுழைவன்கடுவனங்கத்
திந்தியமவித்ததனியோகியினிருந்த. (எடு)

ஆசில்சுனைவாலருவியாயிழையரைம்பால்
வாசமணநாறலிலவானமணிவன்கால்
ஊசல்வறிதானவிதழ்ணெண்மணிகள்விண்மேல்
வீசலிலவானினெடுமாரிதுளிவீச. (எசு)

கருந்தகையதண்சினையகைதைமடல்காதல்
தருந்தகையபோதுகிளையிற்புடைதயங்கப்
பெருந்தகையபொற்சிறையொடுக்கியுடல்பேரா
திருந்தகுருகின்பெடைபிரிந்தவர்களென்ன. (எஎ)

பதங்கமுழவொத்தவிசைபன்முறுபன்ன
விதங்களினடித்திடுவிகற்பவழிமேவும்
மதங்கியரையொத்தமயில்வைகுமரமூலத்
தொதுங்கினவுழைக்குலமழைக்குலமுழக்க. (எஅ)

விளக்கொளியகிற்புகைவிழுங்கமளிமென்கொம்
பிளக்குமிடைமங்கையருமைந்தர்களுமேறத்
தளத்தகுமலர்த்தவிசிகந்துகுசந்தின்
தொளைத்துயிலுவந்துதுயில்வுற்றகுளிர்தும்பி. (எசு)

தாமரைமலர்த்தவிசிகந்துதகையன்னம்
மாமரனிரைத்தொகுபொதும்பினுழைவைகத்
தேமரனடுக்கிதணிடைச்செறிகுரம்பைத்
தூமருவெயிற்றியரொடன்பர்துயில்வுற்றூர். (அ0)

வள்ளிபுடைசுற்றியுயர்சிற்றிலமரந்தோ
றெள்ளருமறிக்குருளொடண்டர்களிருந்தார்
கள்ளரிலைளித்துழனெடுங்கழுதொடுங்கி
முள்ளெயிறுதின்றுபசிமூழ்கிடவிருந்த. (அக)

சரம்பயினெடுந்துளிநிமிர்ந்தபுயல்சார
உரம்பெயர்வில்வன்கரிகரந்துறவொடுங்கா
வரம்பகனெடும்பிரசம்வைகல்பலவைகும்
மூரம்பினினிரம்பலமுழைஞ்சிடைநுழைந்த. (அஉ)

இத்தகையமாரியிடைதுன்னியிருளெய்த
மய்த்தகுமணிக்குறுநகைச்சனகன்மான்மேல்
உய்த்தவுணர்வத்தினனெருப்பிடையுயிர்ப்பான்
வித்தகனிலக்குவனேமுன்னினன்விளம்பும். (அங)

வேறு. மழைக்கருமின்னெயிற்றரக்கன்வஞ்சனை
இழைப்பருங்கொங்கையுமெதிர்வுற்றின்னலின்
உழைத்தனளுலந்துயிருலக்குமொன்றினும்
பிழைப்பரிதெனக்குமிதென்னபெற்றியோ. (அச)

துகிறச்சுடுசரந்துணிதுங்கிட
வானுறப்பிறங்கியவயிரத்தோளொடும்
யானுறக்கடவதேயிதுவுமிங்கிலை
வேனிறத்துற்றதொத்துளவும்வீகிலேன். (அடு)

தெரிகணமலரொடுந்திறந்தநெஞ்சொடும்
அரியவன்றுயரொடும்யானும்வைகுவேன்
எரியுமின்மினிமணிவிளக்கினின்றுணைக்
குரீஇயினம்பெடையொடுந்துயில்வகூட்டினுள். (அசு)

வானகமின்னினுமழைமுழங்கினும்
யானகமெலிகுவேனெயிற்றராவெனக்
கானகம்புகுந்தியான்முடித்தகாரியம்
மேனகுங்கீழ்நகுமினியென்வேண்டுமால். (அஎ)

மறந்திருந்துய்கலேன்மாரியீதெனின்
இறந்துவிண்சேர்வதுசரதமிப்பழி
பிறந்துபின்றீர்வலோபின்னரன்னது
துறந்துசென்றுறுவலோதுயரின்வைகுவேன். (அச)

ஈண்டுநின்றரக்கர்தமிருக்கையாமினிக்
காண்டலிற்பற்பலகாலங்காண்டுமால்
வேண்டுவதன்றிதுவீரநோய்தெற
மாண்டனெனென்றதுமாட்சிப்பாலதால். (அசு)

செப்புருக்கனையவிம்மாரிச்சீகரம்
வெப்புறப்புரஞ்சுடவெந்துவீவதோ
அப்புருக்கொண்டவாணெடுங்கணையிழை
துப்புருக்குமுதவாய்நுகர்ந்துதுய்த்தயான். (கூ0)

நெய்யடைதீயெதிர்நிறுவிநிற்கவள்
கய்யடையென்றவச்சனகன்கட்டிரை
பொய்யடையாக்கியபொறியிலெஞ்சு
மெய்யடையாதினிவிளிதனன்றரோ. (கூக)

தேற்றுவாய்நீயுளையாகத்தேறினின்
ரூற்றுவேனுனுளெஞ்சுகவால்வளை
தோற்றுவாளல்லளித்துன்பமாரினி
மாற்றுவார்துயர்க்கொருவரம்புண்டாகுமோ. (கூஉ)

விட்டபோர்வாளிகள்விரிஞ்சன்விண்ணையும்
சுட்டபோதிமையவர்முதலதொல்லையோர்
பட்டபோதுலகமுமுயிரும்பற்றறக்
கட்டபோதல்லதுமயிலைக்காண்டுமோ. (க்ங)

தருமமென்றொருபொருடன்னையஞ்சியான்
தெருமருகின்றதுசெறுநர்தேவரோ
டருமையின்வீந்தனரென்னுமஃதலால்
உருமெனவொலிபடுமுரவிலோயென்றான். (கூச)

இளவலுமுரைசெய்வானெண்ணுநாளினும்
உளவலகூதிருமிறுதியுற்றதால்
களவுசெய்தவருறைகாணுங்காலமீ
தளவியலாகியதாணையாழியாய். (கூடு)

திரைசெயத்திண்கடலமிழ்தஞ்செங்கணான்
உரைசெயத்தரினுமத்தொழிலுவந்திலன்
வரைமுதற்கலப்பைகண்மாடுநாட்டித்தன்
குரைமலர்த்தடக்கையாற்கடைந்துகொண்டனன். (கூசு)

மனத்தினி னுலகெலாம்வகுத் துவாய்ப்பெயும்
நினைப்பின னுயினுநேமியானெமெம்
எனைப்பலபடைக்கலமேந்தியாரையும்
வினைப்பெருஞ்சூழ்ச்சியிற்பொருதுவெல்லுமால். (கூஎ)

கண்ணுடைநுதலினன்கணிச்சிவானவன்
விண்ணிடைப்புரஞ்சுடவெகுண்டமேலைநாள்
எண்ணியசூழ்ச்சியுமீட்டிக்கொண்டவும்
அண்ணலேயொருவரால்அறியற்பாலவோ. (கூஅ)

ஆகுநர்யாரையுந் துணைவராக்கிப்பின்
ஏகுறுநாளிடையெய்தியெண்ணுவ
சேகறப்பன்முறைதெருட்டிச்செய்தபின்
வாகையென்றெருபொருள்வழுவற்பாலதோ. (கூக)

அறத்துறைதிறம்பினரரக்கராற்றலர்
மறத்துறைநமக்கெனவலிக்கும்வன்மையோர்
திறத்துறைநன்னெறிதிறம்பலுண்டெனின்
புறத்தினியார்திறம்புகழும்வாகையும். (கஅ0)

பைந்தொடிக்கிடர்களைபருவம்பையவே
வந்தடுத்துளதினிவருத்தநீங்குவாய்
அந்தணர்க்காகுநாமரக்கர்க்காகுமோ
சுந்தரத்தனுவலாய்சொல்லுநீயென்றான். (கஅக)

உறுதியஃதேயெனவுணர்ந்தவூழியான்
இறுதியுண்டேகொலிம்மாரிக்கென்பதோர்
தெறுதயருழந்தனன்றேயத்தேய்வுசென்
றறுதியையடைந்ததப்பருவமாண்டுபோய். (கஅஉ)

மள்கலில்பெருங்கொடைமருவிமண்ணுளோர்
உள்கியபொருளெலாமுதவியற்றபோ
தெள்கலிரவலர்க்கீவதின்மையால்
வெள்கியமாந்தரின்வெளுத்தமேகமே. (கஅங)

நீவினைநல்வினையென்னத்தேற்றிய
பேர்வினைப்பொருடனையறிந்துபெற்றதோர்
ஆய்வினையெய்யுணர்வணுகவாசறும்
மாயையின்மாய்ந்தமாரிப்பேரிருள். (கஅச)

மூளமர்தொலைவுறமுரசவிந்தபோல்
கோளமைக்கொண்முகில்குமுறலோவின
நீளகணெனத்துளியுநீங்கின
வாளறையுற்றெனமறைந்தமின்னெலாம். (கஅடு)

தடுத்ததாணெடுந்தடங்கிரிகடாழ்வரை
அடுத்தமீரொழிந்தனவருவிதூங்கின
எடுத்தநூலுத்தரியத்தொடெய்திநின்
றுடுத்தவானிறத்துகிலொழிந்தபோலுமே. (கoசூ)

மேகமாமலைகளின்புறத்துவீதலால்
மாகயாறியாவையும்வாரியற்றன
வாகையாற்றகவுழந்தழிவினன்பொருள்
போகவாரெழுகலான்செல்வம்போன்றவே. (கoஎ)

கடந்திறந்தெழுகளிறனையகார்முகில்
இடந்திறந்தேகலிற்பொலிந்தநிந்துவும்
நடந்திறனவில்வுறுங்கைமார்முகம்
படந்திறந்துருவலிற்பொலியும்பான்மைபோல். (கoஅ)

பாசிழைமடந்தையர்பகட்டுவெம்முலை
பூசியசாந்தினைப்புலர்த்துகுங்குமம்
மூசினமுயங்குசேரெழியமொண்டுற
வீசியநறுமலர்விண்டுவோடையே. (கoகூ)

மன்னவன்றலைமகன்வருத்தமாற்றுவான்
அன்னெறிப்பருவம்வந்தணுகிற்றகலால்
பொன்னினைநாடியபோதுமென்பபோல்
அன்னமுந்திசைதிசையகன்றவிண்ணின்வாய். (ககo)

தஞ்சிறையொடுக்கினதழுவுமின்னல
நெஞ்சுறுபயனிலநினைப்புநீண்டன
மஞ்சுறுநெடுமழைபிரிந்தமாமயில்
அஞ்சினமிதிலைநாட்டன்னமன்னவாய். (ககக)

வஞ்சனைதீவினைமறந்தமாதவர்
நெஞ்செனத்தெளிந்தனநீரநீர்தொறும்
பஞ்செனச்சிவக்குமென்பாதப்பேதையர்
அஞ்சனக்கண்ணெனப்பிறழ்ந்தவாடன்மீன். (ககஉ)

வாடியமடந்தையர்வதனமொத்தன
தாடொகமலர்ந்தனமுதிர்ந்ததாமரை
கூடினர்துவரிதழ்க்கோலங்கொண்டன
சேடுறுநறுமுகைவிரிந்தசெங்கிடை. (ககங)

கல்வியிற்றிகழ்கணக்காயர்கம்பலை
பல்விதச்சிறுஅரெனப்பகர்வபல்லரி
செல்விடத்தல்லதொன்றுரைத்தல்செய்கலா
நல்லறிவாளரினவிந்தாவெலாம். (ககச)

செறிபுனற்பூந்துகிறிரைக்கையாற்றிரைத்
துறுதுணைக்கான்மடைத்தொத்தவோதநீர்
எறுழ்வலிக்கணவனையெய்தியாறெலாம்
முறுவலிக்கின்றனபோன்றமுத்தெலாம் (ககடு)

சொன்னிறைகேள்வியிற்றொடர்ந்தமாந்தரின்
இன்னிறப்பசலையுற்றிருந்தமாதரின்
தன்னிறம்பயப்பயநீங்கித்தள்ளரும்
பொன்னிறம்பொருந்தினபூகத்தாறெலாம். (ககசு)

பயின்றுடல்குளிர்ப்பவும்பழனநீத்தவண்
இயன்றிலவிளவெயிலெழுதுமெய்யன
வயின்றொறும்வயின்றொறுமடித்தவாயன
துயின்றனவிடங்கர்மாத்தடங்கடோறுமே. (ககள)

கொஞ்சுறங்கிளிநெடுங்குதலைகூடின
அஞ்சிறையறுபதமளகவோளிய
எஞ்சலில்குழையனவிடைதுடங்குவ
வஞ்சிகள்பொலிந்தனமகளிர்மாலைபோல். (ககஅ)

அளித்தனமுத்தினந்தோற்பமானனர்
வெளித்தெதிர்விழிக்கவும்வெள்கிமேன்மையால்
ஒளித்தனவாமெனவொடுங்குகண்ணன
குளித்தனமண்ணிடைக்கூனநந்தெலாம். (ககக)

மழைபடப்பொதுளியமருதத்தாமரை
தழைபடப்பேரிலைப்புரையிற்றங்குவ
விழைபடப்பெடையொடுமெள்ளநள்ளிகள்
புழையடைத்தொடுங்கினவச்சைமாக்கள்போல். (கஉ0)

கார்காலப்படலம் முற்றிற்று. ஆடதிருவிருத்தம்-நிஎ0.

க0-ஆவது. கிட்கிந்தைப்படலம்.

அன்னகால்மகலுமளவினில்
முன்னவீரனிளவலைமொய்ம்பினேய்
சொன்னவெல்லையினுங்குமத்தூங்கிய
மன்னன்வந்திலனென்செய்தவாறரோ. (க)

பெறலருந்திருப்பெற்றுதவிப்பெருந்
திறனினந்திலன்சீர்மையிற்றீர்ந்தனன்
அறமறந்தனனன்புகிடைக்கநம்
மறனறிந்திலன்வாழ்வின்மயங்கினன். (உ)

நன்றிகொன்றருநட்பினைநாறுத்
தொன்றுமெய்ம்மைசிதைத்துரைபொய்த்துளாற்
கொன்றுநீக்குதல்குற்றத்துநீங்குமால்
சென்றுமற்றவன்சிந்தையைத்தேர்குவாய். (கூ)

வெம்புகண்டகர்விண்புகவேரறுத்
திம்பர்நல்லறஞ்செய்யவெடுத்தவிற்
கொம்புமுண்டருங்கூற்றமுமுண்டெங்கள்
அம்புமுண்டென்றுசொல்லுநம்மானையே. (சு)

நஞ்சமன்னவரைநலிந்தாலது
வஞ்சமன்றுமனுவழக்காதலான்
* அஞ்சிலம்பதிலொன்றறியாதவன்
நெஞ்சினின்றுநிலாவநிறுத்துவாய். (ஙு)

ஊருமாளுமரசுநுஞ்சுற்றமும்
நீருமாளுதிரென்பதுநோர்ந்தநாள்
வாரும்வாரலிராமெனின்வானரப்
பேருமாளுமெனும்பொருள்பேசுவாய். (சு)

இன்னுநாடுதுமிங்கிவர்க்கும்வலி
துன்னிலுரையெனத்துணிந்தாரெனின்
உன்னைவெல்லவுலகொருமூன்றினும்
நின்னலாற்பிறரின்மைநிகழ்த்துவாய். (எ)

நீதியாதிநிகழ்த்தினைநின்றது
வேதியாதபொழுதுவெகுண்டவன்
சாதியாதவர்சொற்றரத்தக்கனை
போதியாதியென்றுன்புகழ்ப்பூணிலுன். (அ)

ஆணைசூடியடிதொழுதாண்டிறை
பாணியாதுபடர்வெரிந்பாழ்படாத்
தூணிபூட்டித்தொடுசிலைதொட்டருஞ்
சேணினீங்கினன்சிந்தையுணீங்கலான். (கூ)

மாறுநின்றமரனுமலைகளும்
நீறுசென்றுநெடுநெறிநீங்கிட
வேறுசென்றனன்மேன்மையனையினும்
ஆறுசென்றிலனுணையினேகுவான். (கo)

விண்ணுறத்தொடர்மேருவின்சீர்வரை
மண்ணுறப்புக்கழுந்தினமாதிரம்
கண்ணுறத்தெரிவுற்றதுகட்செவி
உண்ணிறக்கழற்சேவடியூன்றலால். (கக)

---

* அஞ்சியல்லதொன்றுரறிவாரவர்எனவும்பாடம்.

வெம்புகானிடைப்போகின்றவேகத்தால்
உம்பர்தோயுமராமரத்தூடுசெல்
அம்பிற்சென்றனனன்றடல்வாலிதன்
தம்பிமேற்செலுமானவன்றம்பியே. (கஉ)

மாடுவென்றியொர்மாதிரயானேயின்
சேடுசென்றுசெடிலொருதிக்கின்மா
நாடுகின்றதுநண்ணியகால்பிடித்
தோடுகின்றதுமொத்துளனுயிஞன். (கஙு)

உருக்கொளொண்கிரியொன்றினின்ரொன்றினைப்
பொருக்கவெய்தினன்பொன்னெளிர்மேனியான்
அருக்கன்மாவுதயத்தினின்றத்தமாம்
பருப்பதத்தினையெய்தியபண்பினுல். (கச)

தன்றுணைத்தமயன்றனிவாளியிற்
சென்றுசேணுயர்கிட்கிந்தைசேர்ந்தவன்
குன்றினின்ரொருகுன்றினிற்குப்புறும்
பொன்றுளங்குலச்சீயமும்போன்றனன். (கடு)

கண்டவானரங்காலனைக்கண்டபோல்
மண்டியோடினவாலிமகற்கையா
கொண்டசீற்றத்தினையோன்குறுகினுன்
சண்டவேகத்தினுலென்றுசாற்றலும். (கசு)

அன்னதோன்றலுமாண்டொழிலான்வர
வின்னதென்றறிவான்மருங்கெய்தினுன்
மன்னன்மைந்தன்மனக்கருத்துட்கொளாப்
பொன்னின்வார்கழற்ரூதையிற்போயினுன். (கள)

ளனியற்றியநாயகக்கோயிலுள்
தளமலர்த்தகப்பள்ளியிற்ரூழ்குழல்
இளமூலைச்சியரேந்தடிதைவர
வினைதுயிற்குவிருந்துவிரும்புவான். (கஅ)

தெள்ளியோருதவப்பெருஞ்செல்வமாம்
கள்ளிலுலதிகங்களித்தான்கதிர்ப்
புள்ளிமாமெடும்பொன்வரைபுக்கதோர்
வெள்ளிமால்வரையென்னவிளங்குவான். (கசு)

சிந்துவாரத்திருநறைதேக்கில்
சந்தமாமயிற்சாயலர்தாழ்குழற்
கந்தமாமலர்க்காடுகடாவிய
மந்தமாருதம்வந்துறவைகுவான். (உ0)

தித்தியாநின்றசெங்கிடைவாய்ச்சியர்
மூத்தவாண்முகைமூள்ளெயிற்றூறுதேன்
பித்துமாலும்பிறவும்பெருக்கலான்
மத்தவாரணமென்னமயங்கினான். (உக)

மகுடகுண்டலமேமுதன்மண்டலத்
துகுநெஞ்சுடர்க்கற்றையுலாவலால்
பகலவன்சுடர்பாய்பனிமால்வரைத்
தகமலர்ந்துபொலிந்துதயங்குவான். (உஉ)

கிடந்தனன்கிடந்தானைக்கிடைத்திரு
தடங்கைகூப்பினன்முரைமுன்னுட்டந்த
மடங்கல்வீரனம்மாற்றம்விளம்புவான்
தொடங்கினனவனைத்துயினீக்குவான். (உங)

எந்தைகேளவ்விராமற்கினியவன்
சிந்தையுண்ணெடுஞ்சீற்றத்திருமுகம்
தந்தளிப்பத்தடுப்பரும்வேகத்தன்
வந்தனனுன்மனக்கருந்தியாதென்றான். (உச)

இனையமாற்றமிசைத்தனனென்பதோர்
நினைவிலானெடுஞ்செல்வநெருக்கவும்
நனைநறுந்துளிநஞ்சுமயக்கவும்
தனையுணர்ந்திலன்மெல்லணைதங்கினான். (உடு)

ஆதலோடுமரசிளங்கோளரி
யாதுமுன்னின்றியற்றுவதின்மையால்
கோதில்சிந்தையதுமனைக்கூவுவான்
போதமேயினன்போதகமேயனான். (உசு)

மந்திரத்தனிமாருதிதன்னெடும்
வெந்திறற்படைவீரர்விராய்வர
அந்தரத்தின்வந்தன்னைதன்கோயிலை
இந்திரற்குமகன்மகனெய்தினான். (உஎ)

எய்திமேற்செயத்தக்கதென்னென்றலும்
செய்திர்செய்தற்கருநெடுந்தியன
மொய்திலன்னவைநீக்கவுநோக்குதிர்
உய்திர்போலுமுதவிகொன்றீரென. (உஅ)

மீட்டுமொன்றுவிளம்புகின்றுள்படை
கூட்டுமென்றுமைக்கொற்றவன்கூறிய
நாட்டிறம்பினுங்நாட்டிறம்பும்மெனக்
கேட்டிலீரினிக்காண்டிர்கிடைத்திரால். (உகூ)

வாலியாருயிர்காலனும்வாங்கவிற்
கோலிவாலியசெல்வங்கொடுத்தவர்
போலுமா லும்புறத்திருப்பாரிது
சாலுமா லுங்கடன்மையினோர்க்கெலாம். (சுo)

தேவிநீங்கவத்தேவரிற்சீரியன்
ஆவிநீங்கினன்போலயர்வான து
பாவியாதுபருகுதிர்போலுநும்
காவிநாண்மலர்க்கண்ணியர்காதனீர். (சுக)

திறம்பினீர்மெய்சிதைத்தீருதவியை
நிறம்பொலீஇருங்கடவினேர்ந்ததால்
மறஞ்செய்வானுறின்மாளுதிர்மற்றினிப்
புறஞ்செய்தாவதெனென்கின்றபோழ்தின்வாய். (சுஉ)

கோளுறுத்தற்காியகுரக்கினம்
நீளெழுத்தொடருந்தெவ்வாயிலத்
தாளுறுத்தித்தடவரைதந்தன
மூளுறுத்தியடுக்கினமொய்ம்பினுல். (சுங)

சிக்குறக்கடைசேமித்தசெய்கைய
தொக்குறுத்தமரத்தவன்றின
புக்குறுக்கிப்புடைத்துமெனப்புறம்
மிக்கிறுத்தனவெற்புமிறுத்தன. (சுச)

காக்கவோகருத்தென்றுகதத்தினுல்
பூக்கமூர்ப்புரவலர்புங்கவன்
தாக்கணங்குறைதாமரைத்தாளினுல்
நூக்கினனக்கதவினொய்தினின். (சுஞ)

காவன்மாமதிலுங்கதவுங்கடி
மேவும்வாயிலடக்கியவெற்பொடும்
தேவுசேவடிதீண்டலுந்தீண்டரும்
பாவமாமெனப்பற்றழிந்திற்றவால். (சுசு)

நொய்திலேனுங்கதவும்முதுவாயிலும்
செய்தகன்மதிலுந்திசையோசனை
அய்யிரண்டினளவடியற்றுக
வெய்துநின்றகுரக்கும்வெருக்கொள. (சுஎ)

பரியமாமதிலும்படர்வாயிலும்
சரியவீழ்ந்ததடித்திலிடித்தலை
நெரியநெஞ்சுபிளக்கநெடுந்திசை
இரியலுற்றனவிற்றிலவின்னுயிர். (சுஅ)

பகரவேயுமரி துபரித்தெழு
புகரில்வானரமஞ்சியபூசலான்
சிகரமால்வரைசென் றுதிரிந்துழீஇ
மகரவேலையையொத்ததுமாநகர். (சுக)

வானரங்கள்வெருவிமலையொரீஇக்
காஞரருங்குபடரவக்கர்வரை
மீனெருங்கியவானகமீனெலாம்
போனபின்பொலிவற்றதுபோன்றதே. (சுo)

அன்னகாலையிஞண்டகையாழியான்
பொன்னினன்னகர்வீதியிற்புக்கனன்
சொன்னதாரையைச்சுற்றினர்நின்றவர்
என்னசெய்குவதெய்தினனென்றனர். (சுக)

அனையனுள்ளமுமாய்வலையாயலாம்
மனையின்வாயில்வழியினமாற்றினன்
நினையும்வீரனந்நிணைறிநோக்கலன்
வினையமீதென்றதுமன்விளம்பினன். (சுஉ)

நீரெலாமயனீங்குமினேர்ந்தியான்
வீரனுள்ளம்விளங்குவலென்றலும்
பேரநின்றனர்யாவரும்பேர்கலாத்
தாரைசென்றனடார்குழலாரொடும். (சுங)

உரைசெய்வானரவீரருவந்துறை
அரைசர்வீதிகடந்தகன்கோயிலைப்
புரைசையானையன்ஞன்புகலோடுமவ்
விரைசெய்வார்குழற்றுரைவிலக்கினள். (சுச)

விலங்குமெல்லியல்வெண்ணகைவெண்மதி
இலங்குதண்ணிடையேந்திளமென்முலைக்
குலங்கடோகைமகளிர்குழாத்தினுல்
வலங்கொள்வீதிநெடுவெழிமாற்றினள். (சுரு)

வில்லும்வாளுமணிதொறுமின்னிட
மெல்லரிக்குரன்மேகலையார்த்தெழப்
பல்வகைப்புருவக்கொடிபம்பிட
வல்லியர்யம்வலத்தினில்வந்ததே. (சுசு)

வேறு. ஆர்க்குநூபுரங்கள்பேரியல்குலாந்தடந்தேரொத்த
வேற்கண்வெம்புருவம்போர்வின்மெல்லியர்வளைந்தபோது
பேர்க்கருஞ்சீற்றம்பேரமுகம்பெயர்ந்தொதுங்கிற்றல்லால்
பார்க்கவமஞ்சினனப்பணையினுமுயர்ந்ததோளான். (சஎ)

தாமரைவதனஞ்சாய்த்துத்தனுநெடுந்தரையினூன்றி
மாமியர்குழுவின்வந்தாளுமெனமைந்தனிற்பப்
பூமியிலணங்களுர்தம்பொதுவிடைப்புகுந்துபொற்றேர்
தூமனநெடுங்கட்டாரைநடுங்குவாளினையசொன்னாள். (சஅ)

அந்தமில்காலநோற்றவாற்றலுண்டாயினன்றி
இந்திரன்முதலினோராலெய்தலாமியல்பிற்றன்றே
மய்ந்தனின்பாதங்கொண்டெம்மனைவரப்பெற்றுவாழ்ந்தேம்
உய்ந்தனம்வினையுந்தீர்ந்தேமுறுதிவேறிதினுங்குண்டோ. (சக)

வெய்திநீவருதலுக்கிவ்வெருவுறுஞ்சேனைவீர
செய்திதானுணர்கிலாதுதிருவுளந்தெரித்தியென்றாள்
அய்யநீயாழிவேந்தனடியிணைபிரிகலாதாய்
எய்தியதென்னையென்றாளிசையினுமினியசொல்லாள். (கo)

ஆர்கொலோவுரைசெய்தாரென்றருள்வரச்சீற்றமஃகாப்
பார்குலாமுழுவெண்டிங்கள்பகல்வந்தபடிவம்போலும்
ஏர்குலாமுகத்தினோயிறைமுகமெடுத்துநோக்கித்
தார்குலாமலங்கன்மார்பன்முயரைநினைந்துரைந்தான். (கக)

மங்கலவணியைநீக்கிமணியணிதுறந்துவாசக்
கொங்கலர்கோதைமாற்றிக்குங்குமஞ்சாந்தங்கொட்டாப்
பொங்குவெம்முலைகள்பூகக்கழுத்தொடுமறையப்போர்த்த
நங்கையைக்கண்டவள்ளனயனங்கள்பனிப்பநின்றான். (கஉ)

இனையராமென்னையின்றவிருவருமென்னவந்த
வினைவினையர்ப்புச்சென்றநெஞ்சினெடிதுநின்றான்
வினவினுட்கெதிரோர்மாற்றம்விளம்பவும்வேண்டுமென்றப்
புனைகுழலாட்குவந்தகாரியம்புகல்வதானான். (கங)

சேனையும்யானுந்தேடித்தேவியைத்தருவெனென்று
மானவற்குரைத்தமாற்றமறந்தனனருக்கன்மைந்தன்
ஆனவனமைதிவல்லையறியெனவருளின்வந்தேன்
மேனிலையனையான்செய்கைவினைந்தவாவிளம்புகென்றான். (கச)

சிறுவாயல்லையசிறியவர்தீமைசெய்தால்
ஆறுவாய்நீயலான்மற்றருளரயர்ந்தானல்லன்
வேறுவேறுலகமெங்குந்தரைவிடுத்தவெல்லை
ஊறுமாநோக்கித்தாழ்த்தானுதவிமாறுதவியுண்டோ. (கஙு)

ஆயிரகோடிதூதரரிக்கணமழைப்பவாணை
போயினர்புகுதலாலும்புகுந்ததுபுகல்புக்கோர்க்குத்
தாயினுநல்லநீரேதணிதிராற்றருமமஃதால்
தீயனசெய்யாராயின்யாவரேசெறுநராவார். (கசு)

அடைந்தவர்க்கபயநீவிரருளியவளவில்செல்வம்
தொடர்ந்துநும்பணியிற்றீர்ந்தாலதுவுநுந்தொழிலேயன்றே
மடந்தைதன்பொருட்டால்வந்தவாளமர்க்களத்துமாண்டு
கிடந்திலரென்னிற்பின்னுநிற்குமோகேண்மையம்மா. (நிஎ)

செம்மைசேருள்ளத்தீர்கள்செய்தபேருதவிதீரா
வெம்மைசேர்பகையுமாற்றியரசுவீற்றிருக்கவிட்டீர்
உம்மையேயிகழ்வாரென்னினெளிமையாயொழிவதொன்றே
இம்மையேவறுமையெய்தியிருமையுமிழப்பரன்றே. (நிஅ)

ஆண்டுபோர்வாலியாற்றன்மாற்றியதம்பொன்றுயின்
வேண்டுமோதுணைவர்நும்பால்வில்லினுமிக்கதுண்டோ
தேண்டுவார்த்தேடுகின்றீர்தேவியையதனைச்செவ்வே
பூண்டுநின்றுய்தற்பாலார்நுங்கழல்புகுந்துளோரும். (நிக)

என்றவளுரைத்தமாற்றம்யாவையுமினிதுகேட்டு
நன்றுணர்கேள்வியாளனருள்வரநாணுட்கொண்டான்
நின்றனனிற்றலோடுநீத்தனன்முனிவென்றுன்னு
வன்றுணைவயிரத்திண்டோண்மாருதிமருங்கின்வந்தான். (சுo)

வந்தடிவணங்கிநின்றமாருதிவதனநோக்கி
அந்தமில்கேள்வியீயுமயர்த்தனையாகுமன்றே
முந்தினசெய்கையென்றுன்முனிவினுமுனைக்குமன்பான்
எந்தைகேட்டருளுகென்னுவியம்பினனியம்பவல்லான். (சுக)

சிதைவகல்காதற்றுயைத்தந்தையைக்குருவைத்தெய்வ
பதவியந்தணரையாவைப்பாலரைப்பாவைமாரை
வதைபுரிகுரங்குமுண்டாமாற்றலாமாற்றன்மாயா
உதவிகொன்றுர்க்கென்றேனுமொழிக்கலாமுபாயமுண்டோ. (சுஉ)

அய்யநும்மோடுமெங்களரிக்குலத்தரசனுடும்
மெய்யுறுகேண்மையாகமேலுநாள்விளைவதாய
செய்கையென்செய்கையன்றுவன்னதுசிதையுமாயின்
உய்வகையெவர்க்குமுண்டோவுணர்வுமாசுண்டதன்றே. (சுங)

தேவருந்தவமுஞ்செய்யுநல்லறத்திறமுமற்றும்
யாவருநீரேயென்பதென்வயிற்கிடந்ததெந்தாய்
ஆவதுநிற்கசேருமரணுண்டோவருளுண்டன்றே
மூவகையுலகுங்காக்குமொய்ம்பினீர்முனிவுண்டாலுல். (சுச)

மறந்திலன்கவியின்வேந்தன்வயப்படைவருவிப்பாரைத்
திறந்திறமேவியன்னன்செம்மையிற்சிறியனுனன்
அறந்துணைநுமக்குத்தான்றன்வாய்மையையழிக்குமாயின்
பிறந்திலனன்றேயன்றேநரகமும்பிழைப்பதன்றுல். (சுரி)

உதவாமலொருவன்செய்தவுதவிக்குக்கைம்மாறுக
மதவானேயனேயமைந்தமற்றுமுண்டாகவற்றே
சிதையாதசெருவிலன்னன்முன்சென்றுசெறுநர்மார்பின்
உதையானேலுதையுண்டாவியுலையானேலுலகின்மன்னே. (சுகு)

ஈண்டினிநிற்றலென்பதினியதோரியல்பிற்றன்றால்
வேண்டலரறிவரேனுங்கேண்மைதீர்வினையிற்றுமால்
ஆண்டகையாளிமொய்ம்பினையநீரளித்தசெல்வம்
காண்டியாலுன்முன்வந்தகவிக்குலக்கோனெடென்றான். (சுஎ)

மாருதிமாற்றங்கேட்டமலபுரைவயிரத்தோளான்
தீர்வினைசென்றுநின்றசீற்றத்தான்சிந்தைசெய்தான்
ஆரியனருளிற்றீர்ந்தாரல்லர்வந்தடுத்தசெல்வம்
பேரிதாகச்செய்தசிறுமையானென்னும்பெற்றி. (சுஅ)

அனையதுகருதிப்பின்னரரிக்குலத்தவனேநோக்கி
நினையொருமாற்றமின்னேநிகழ்த்துவதுளதுநின்பால்
இனையனவுரைத்தற்கேற்றவெண்ணுதியிவைதீயென்னு
வனைகழல்வயிரத்திண்டோண்மன்னிளங்குமரன்சொல்வான். (சுக)

தேவியைக்குறித்துச்செய்தசீற்றமுமானத்தீயும்
ஆவியைக்குறித்துநின்றதையனேயதனைக்கண்டேன்
கோவியற்றருமநீங்கக்கொடுமையோடிறவுகூடிப்
பாவியர்க்கேற்றசெய்கைகருதுவல்பழியும்பாரேன். (எ0)

ஆயினுமென்னையானேயாற்றினின்றுவியுற்று
நாயகன்றனையுந்தேற்றநாள்பலகழிந்தவன்றேல்
தீயுமிவ்வுலகமூன்றுந்தேவரும்வீவரொன்றே
வீயுநல்லறமும்போகாவிதியதுவிலக்கற்பாலார். (எக)

உன்னைக்கண்டெங்கோன்றன்னையுற்றிடத்துதவும்பெற்றி
என்னைக்கண்டன்னதோர்ந்திங்காளிடைநெடிதுவைகித்
தன்னைக்கொண்டிருந்தேதாழ்த்தானன்றெனிற்றனுவொன்றுலே
மின்னைக்கண்டனையாடன்னைநாடுதல்விலக்கற்பாற்றே. (எஉ)

ஒன்றுமோவானமின்றியுலகமும்பதினுலுள்ள
வென்றிமாக்கடலுமேழ்மலையுள்ளவென்னவேயாய்
நின்றதோரண்டத்துள்ளேயெனினதுநெடியதொன்றே
அன்றுநீர்சொன்னமாற்றந்தாழ்வித்தறருமமன்றுல். (எங)

தாழ்வித்தீரல்லீர்பன்னுடருக்கியவரக்கர்தம்மை
வாழ்வித்தீரிமையோர்க்கின்னல்வருவித்தீர்மரபிற்றீராக்
கேள்வித்தியாளர்துன்பங்கிளர்வித்தீர்பாவந்தன்னை
மூள்வித்தீர்முனியாதானேமுனிவித்தீர்மூடிதிரென்றான். (எச)

தோன்றலஃதுரைத்தலோடமொருதிதொழுதுதொல்லை
ஆன்றநூலறிஞபோயபொருண்மனத்தடைப்பாயல்லை
ஏன்றதமுடியேமென்னினிறத்துமித்திறத்துக்கெல்லாம்
சான்றெனவறவோய்போந்தன்றம்மூனைச்சார்தியென்றான். (எடி)

மூன்னுநீசொல்லிற்றன்றேமுயன்றதமுயற்சிதானும்
இன்னுநீயிசைத்தசெய்வானியைந்தனமென்றுகூறி
அன்னதோரமைதியான்றனருள்சிறிதறிவானேக்கிப்
பொன்னின்வார்சிலையினனுமாருதியோடும்போனான். (எசு)

அயில்விழிக்குமுதச்செவ்வாய்ச்சிலைநுதலன்னப்போக்கின்
மயிலியற்கொடித்தேரல்குன்மணிநகைத்திணிவேய்மென்றோட்
குயின்மொழிக்கலசக்கொங்கைமின்னிடைக்குமிழ்மூக்கின்
புயலியற்கூந்தன்மாதர்குழாத்தொடுந்தாரைபோனாள். (எஎ)

வல்லமந்திரியரோடுவாலிகாதலனுமைந்தன்
அல்லியங்கமலமன்னவடிபணிந்தச்சந்தீர்ந்தான்
வில்லியுமவனேநோக்கிவிரைவினென்வரவுவீர
சொல்லுதிநுந்தைக்கென்றனன்றெனத்தொழுதுபோனான். (எஅ)

போனபின்றுதைகோயில்புக்கவன்பொலங்கொள்பாதம்
தானுறப்பற்றிமுற்றுந்தைவந்ததடக்கைவீரன்
மானவற்கினையோன்வந்துன்வாசலின்புறத்தான்சீற்றம்
மீனுயர்வேலமேலும்பெரிதுவினைந்ததென்றான். (எக)

அறிவுற்றமகளிர்வெள்ளமனைவருமவனைப்பற்றிப்
பிறிவற்றமயக்கத்தான்முந்துற்றதோர்பெற்றியோரான்
செறிபொற்றூரலங்கல்வீரசெய்திலங்குற்றநம்மைக்
கறுவுற்றபொருளுக்கென்னேகாரணங்கண்டதென்றான். (அ0)

இயைந்தநாளெல்லைசென்றெய்தலேசெல்வமெய்தி
வியந்தனையுதவிகொன்றாய்மெய்யிலேயென்னவீங்கி
உயர்ந்ததசீற்றமற்றதுற்றதுசெய்கைதானும்
நயந்தெரியறுமன்வேண்டாநல்கினனம்மையின்னும். (அக)

வருகின்றவேகநோக்கிவானரவீரர்வானைப்
பொருகின்றநகரவாயிற்பொற்கதவடைத்துக்கார்க்குன்
றருகொன்றுமில்லாவண்ணம்வாங்கினரடுக்கிமற்றும்
தெரிகின்றசினத்தீபொங்கச்செருச்செய்வானமைந்துநின்றார். (அஉ)

ஆண்டகையதனைநோக்கியம்மலர்க்கமலத்தாளிற்
றீண்டினன்றீண்டாமுன்னந்தெற்கொடுவடக்குத்தெய்வ
நீண்டகன்மதிலுங்கொற்றவாயிலுநிரைத்தகுன்றும்
கீண்டனதகர்ந்துபின்னைப்பொடியொடுங்கெழீஇயவன்றே. (அங)

அந்நிலைகண்டதிண்டோளரிக்குலத்தனிகமம்மா
எந்நிலையுற்றதென்கேன்யாண்டுபுக்கொளித்ததென்கேன்
இந்நிலைகண்டவன்னேயேந்திழையாயத்தோடு
மின்னிலைவேலினனேவழியெதிர்விலக்கினின்றான். (அச)

மங்கையர்மேனிநோக்கான்மைந்தனுமனத்துவந்த
பொங்கியசீற்றம்பற்றிப்புகுந்திலன்பொருமினின்றான்
நங்கையுமினிதுகூறிநாயகாடந்ததென்னே
எங்கள்பாலென்னச்சொன்னளண்ணலுமினையசொன்னான். (அடு)

அதுபெரிதறிந்தவன்னேயன்னவன்சீற்றமாற்றி
விதிமுறைமறந்தானல்லன்வெஞ்சினச்சேனவெள்ளம்
கதுமெனக்கொணருந்துகல்லதர்செல்லவேவி
எதிர்முறையிருந்தானென்றாளிதுவிங்குப்புகுந்ததென்றான். (அசு)

சொற்றலுமருக்கன்றோன்றல்சொல்லுவான்மண்ணின்விண்ணின்
நிற்குறியார்கள்யாவரனேயவர்சினத்தினேர்ந்தால்
விற்குரியாரித்தன்மைவெகுளியின்விரைவினெய்தின்
எற்குரையாதுநீதியற்றியதென்கொலென்றான். (அஎ)

உணர்த்தினேன்முன்னர்நீயுணர்ந்திலையுணர்விற்றீர்ந்தாய்
புணர்ப்பதொன்றின்மைநோக்கிமாருதிக்குரைப்பான்போனேன்
இணர்த்தொகையின்றபொற்றருவெறுழ்வலித்தடந்தோளெந்தாய்
கணத்திடையவனைநீயுங்காணுதல்கருமமென்றான். (அஅ)

உறவுண்டசிந்தையானுமுரைசெய்வானெருவர்க்கின்னும்
பெறலுண்டேயவராலீண்டியான்பெற்றபேருதவியுற்ற
திறலுண்டோவென்னிற்றீர்வானிறந்தபேரிடரையெல்லாம்
நிறவுண்டுமெறந்தேன்காணாணுவெனம்பவென்றான். (அக)

ஏயினவிதுவலான்மற்றெழைமைப்பாலதென்னே
தாயிவண்மனவியென்னுந்தெளிவன்றேற்றருமமென்னும்
தீய்வினையந்திலென்றுமன்றியுந்திருக்குநீங்கா
மாயையின்மயங்குகின்றுமயக்கின்மேன்மயக்கும்வைத்தாம். (கo)

தெளிந்துதீவினையைத்தீர்ந்தோர்பிறவியைத்தீர்வரென்னு
விளிந்திலாவுணர்விலேருமவேதமும்விளம்பவேயும்
தெளிந்துறைபுழுவைநீக்கிநிறவுண்டுநிறைகின்றேனுல்
அளிந்தகத்தெரியுந்தீயைநெய்யிலுலவிக்கின்றுமால். (கக)

தன்னைத்தானுணரத்தீருந்தகையறுபிறவியென்ப
தென்னைத்தான்மறையுமற்றதுறைகளுமிசைத்தவெல்லாம்
முன்னைத்தான்றன்னையோராமுழுப்பிணியழுக்கின்மேலே
பின்னைத்தான்பெறுவதம்மாநிறவுண்டுதிகைக்கும்பித்தோ. (கஉ)

அளித்தவரஞ்சுநெஞ்சினடைந்தவரறிவுமூழ்கிக்
குளித்தவரின்பதுன்பங்குடைந்தவர்குடைந்தவேரி
ஒளித்தவருண்மீண்டிவ்வுலகெலாமுணரவோடிக்
களித்தவரெய்திநின்றகதியொன்றுகண்டதுண்டோ. (கூஉ)

செற்றதும்பகைஞர்நட்டார்செய்தபேருதவிதானும்
கற்றதுங்கண்கூடாகக்கண்டதுங்கலைவலாளர்
சொற்றதுமானம்வந்துதொடர்ந்ததும்படர்ந்ததுன்பம்
உற்றதுமுணராராயினிறுதிவேறிதனினுண்டோ. (கூசு)

வஞ்சமுங்களவும்பொய்யுமயக்கமுமரபில்கோட்புஞ்
தஞ்சமென்றுரைதீக்குந்தன்மையுங்களிப்புந்தாக்கும்
கஞ்சமெல்லணங்குந்தீருங்கள்ளினுலருந்தினுரை
நஞ்சமுங்கொல்வதல்லானரகினுநல்காதன்றே. (கூடு)

கேட்டனனறவாற்கேடுவருமெனக்கிடைத்தவச்சொல்
காட்டியதறுமனீதிக்கல்வியாற்கடந்ததல்லால்
மீட்டினியுரைப்பதென்னேவிரைவின்வந்தடைந்தவீரன்
மூட்டியவெகுளியானுன்முடிவதற்கையமுண்டோ. (சுசு)

அய்யநானஞ்சினேனிந்நறவினினியகேடு
கய்யினுலன்றியேயுங்கருதுதல்கருமமன்றுல்
வெய்யதாமதுவையின்னும்விரும்பினேனென்னின்வீரன்
செய்யதாமரைகளன்னசேவடிசிதைக்கவென்றான். (சுஎ)

என்றுகொண்டியம்பியண்ணற்கெதிர்கொளற்கியைந்தவெல்லாம்
நன்றுகொண்டின்னுநீயேநணுகெனவவனேவித்
தன்றுணைத்தேவிமாருந்தமரொடுந்தழுவத்தானும்
நின்றனனெடியவாயிற்கடைத்தலைநிறைந்தசீரான். (கூஅ)

உரைத்தசெஞ்சாந்தும்பூவுஞ்சுண்ணமும்புகையுமூழின்
நிரைத்தபொற்குடமுந்தீபசாலமுநிகழ்ந்தமுத்தும்
குரைத்தெழுவிதானத்தோடுதொங்கலுங்கொடியுஞ்சங்கும்
இரைத்துமிழ்முரசுமுற்றுமியங்கினவீதியெல்லாம். (கூசு)

தூயதிண்பளிக்கிற்செய்தசுவர்களிற்றலத்திற்சுற்றில்
நாயகமணியிற்செய்தநனிநெடுந்தூணினுப்பண்
சாயைபுக்குறலாற்கண்டோரயர்வுறக்கைவிலோடும்
ஆயிரமைந்தர்வந்தாருளரெனப்பொலிந்ததவ்வூர். (கஅஅ)

அங்கதன்பெயர்த்தும்வந்தாண்டடியிணைதொழுதானைய
எங்கிருந்தானுங்கோமானென்றலுமெதிர்கோளெண்ணி
மங்குறீர்கோயில்கொற்றக்கடைத்தலைமருங்குநின்றான்
சிங்கவேறனையவீரசெய்தவச்செல்வனென்றான். (கஅக)

சுண்ணமுந்துசும்மீசிச்சூடகத்தொடிக்கைமாதர்
கண்ணகன்கவரிக்கற்றைக்காலுறக்கலைவெண்டிங்கள்
விண்ணுறவளர்ந்ததென்னவெண்குடைவிளங்கவீர
வண்ணவிற்கரத்தான்முன்னர்க்கவிக்குலத்தரசன்வந்தான். (கஉ)

அருக்கியமுதலவாயவருச்சனைக்கமைந்தயாவும்
முருக்கிதழ்மகளிரேந்தமுரசினும்கிலிஞர்ப்ப
இருக்கினமுனிவரோதவிசைதிசையளப்பயாணர்த்
திருக்கிளர்செல்வநோக்கித்தேவருமருளச்சென்றான். (கஙு)

வெம்மூலமகளிர்வெள்ளமீனெனவிளங்கவிண்ணில்
சும்மைவான்மதியங்குன்றிற்ரேன்றியதெனவுந்தோன்றிச்
செம்மலையெதிர்கோளெண்ணித்திருவெரிமலர்ந்தசெல்வன்
அம்மலையுதயஞ்செய்ததாதையுமனையஞ்ஞன். (கஙச)

வேறு. தோற்றியவரிகுலத்தரசைத்தோன்றலும்
ஏற்றெதிர்நோக்கினனெழுந்ததவ்வழி
சீற்றமங்கதுதனைத்தெளிந்தசிந்தையால்
ஆற்றினன்றருமத்தினமைதியுன்னுவான். (கஙரி)

எழுவினுமலையினுமெழுந்ததோள்களால்
தழுவினரிருவருந்தழுவித்தையலார்
குழுவொடெம்வீரர்தங்குழாத்திறைம்புக்
கொழிவிலாப்பொற்குழாத்துறையுளெய்தினார். (கஙசு)

அரியணையமைந்ததுகாட்டியையவீண்
டிருவெனக்கவிக்குலத்தரசனேவலும்
திருமகடலமகன்புல்லிற்சேரவெற்
குரியதோவிஃதெனமனத்தினுன்னுவான். (கஙஎ)

கல்லணைமனத்தினையுடைக்கைகேசியால்
எல்லணைமணிமுடிதுறந்தவெம்பிரான்
புல்லணைவைகியான்பொன்செய்பூத்தொடர்
மெல்லணைவைகவும்வேண்டுமோவென்றான். (கஙஅ)

என்றவனுரைத்தலுமிரவிகாதலன்
நின்றனன்விம்மினன்மலர்க்கணீருகக்
குன்றெனவுயர்ந்தவக்கோயிற்குட்டிம
வன்றலத்திருந்தனன்மனுவின்கோமகன். (கஙக)

மைந்தருமுதியருமகளிர்வெள்ளமும்
அந்தமிலைக்கினரழுதகண்ணினர்
இந்தியமவித்தவரெனவிருந்தனர்
நொந்தனர்தளர்ந்தனர்றுவல்வதோர்கிலர். (கஙஙo)

மஞ்சனவிதிமுறைமரபினுடனே
எஞ்சலினின்னமுதருந்தின்யாமெலாம்
உஞ்சனமினியெனவரசுரைத்தலும்
அஞ்சனவண்ணனுக்கநுசன்கூறுமால். (ககக)

வருத்தமும்பழியுமேவயிறுமீக்கொள
அருத்துமென்றுலெமக்கினியதியாவதோர்
இருத்தியுண்டாயினுமவலந்தான்றழீஇக்
கருத்துவேறுற்றபினமிழ்துங்கைக்குமால். (ககஉ)

மூட்டியபழியெனுமுருங்குதீயவித்
தாட்டினேகங்கைநீரசன்றேவியைக்
காட்டினேயெனினெமைக்கடலினூரமிழ்
தூட்டினேயாற்பிறிதுயிருமில்லையால். (ககங)

பச்சிலேகிழங்குகாய்பரமனுங்கிய
மிச்சிலேநுகர்வதுவேறுதானென்று
நச்சிலேனச்சினேனுயிருயுண்ட
எச்சிலேயதுவிதற்கேதுவில்லையால். (ககச)

அன்றியுமொன்றுளதையயானினிச்
சென்றனென்கொணர்ந்திடைதிருத்தினுலது
நன்றுணைக்கோமகனுகர்வதாதலான்
இன்றிறைதாழ்த்தலுமினிதன்றுமென்றான். (ககஞ)

வானரவேந்தனுமினிதின்வைகுதற்
கியானதுதலைமகனிடரின்வைகவே
ஆனதுகுரக்கினத்தெமர்கட்காமெனு
மேனிலையழிந்துயிர்விம்மினனரோ. (ககசு)

எழுந்தனன்பொருக்கெனவிரவிகான்மூலை
விழுந்தகண்ணீரினன்வெறுத்தவாழ்வினன்
அழிந்தயர்சிந்தையனநுமற்காண்டொன்று
மொழிந்தனன்வரன்முறைபோதன்முன்னுவான். (ககள)

போயினதூதரிற்புகுதுஞ்சேனையை
நீயுடன்கொணருதிநெறிவலோயென
ஏயினனநுமனையிருத்தியீண்டென
நாயகனிருந்துழிக்கடிதுணர்ணுவான். (ககஎ)

அங்கதனுடன்செலவரிகண்முன்செல
மங்கையருள்ளமும்வழியும்பின்செலச்
சங்கையிலிலக்குவற்றழுவித்தம்முனிற்
செங்கதிரோன்மகன்கடிதுசென்றனன். (ககக)

ஒன்பதினுயிரகோடியுகந்தன்
முன்செலப்பின்செலமருங்குமொய்ப்புற
மன்பெருங்கிளைஞருமருங்குசுற்றுற
மின்பொருபூணினுன்செல்லும்வேலையில். (கஉ0)

கொடிவனமிடைந்தனகுமுறுபேரியின்
இடிவனமிடைந்தனபணிலமேங்கின
கடிவனமிடைந்தனதயங்குபூணெளி
கொடிவனமெழுந்தனவானம்போர்த்தவே. (கஉக)

பொன்னினின்முத்தினிற்புனைமென்றூசினில்
மின்னினமணியினிற்பளிங்கில்வெள்ளியில்
பின்னினலிசும்பினும்பெரியபெட்புறத்
துன்னினசிவிகைவெண்கவிகைசுற்றின. (கஉஉ)

வீரனுக்கிளையவன்விரும்புசேவடி
பாரினிற்சேறலிற்பரிதிமைந்தனும்
தாரினிற்பொலன்கழறழங்கத்தாரணித்
தேரினிற்சென்றனன்சிவிகைபின்செல. (கஉங)

எய்தினன்மானவனிருந்தமால்வரை
நொய்தினிற்சேனைபின்பொழியநோன்கழல்
அய்யவிற்குமரனுந்தானுமங்கதன்
கய்தொடர்ந்தயல்செலக்காதன்முன்செல. (கஉச)

கண்ணியகணிப்பருஞ்செல்வக்காதல்விட்
டண்ணலேயடிதொழவணையுமன்பினுல்
நண்ணியகவிக்குலத்தரசனுடொறும்
புண்ணியற்றெழுகழற்பரதன்போன்றனன். (கஉஇ)

பிறிவருந்தம்பியும்பிரியப்பேருல
கிறுதியிற்றுனெனவிருந்தவேந்தலை
அறைமணித்தாரினுடாரம்பார்தொடச்
செறிமலர்ச்சேவடிமுடியிற்றீண்டினுன். (கஉசு)

தீண்டலுமார்பிடைத்திருவுநோவுற
நீண்டபொற்றடக்கையானெடிதுயுல்லினுன்
மூண்டெழுவெகுளிபோயொளிப்பமுன்புபோல்
நண்டியகருணைதந்திருக்கையேவியே. (கஉள)

அயலினிதிருத்திநின்னரசுமாணையும்
இயல்பினினியைந்தவேயினிதின்வைகுமே
புயல்பொருதடக்கைநீபுரக்கும்பல்லுயிர்
வெயிலிலதேகுடையெனவிளம்பினுன். (கஉஅ)

பொருளுடையவ்வுரைகேட்டபோழ்துவான்
உருளுடைத்தேரினேன்புதல்வனூழியின்
இருளுடையுலகினுக்கிரவியன்னநின்
அருளுடையேற்கவையரியவோவெனு. (கக2.கு)

பின்னரும்விளம்புவான்பெருமையோய்நின
தின்னருளுதவியசெல்வமெய்தினேன்.
மன்னவனின்பணிமறுத்துவைகியென்
புன்னிலக்குரக்கியல்புதுக்கினேனென்றான். (கக0)

பெருந்திசையனைத்தையும்பிசைந்துதேடினென்
தருந்தகையமைத்துமத்தன்மைசெய்திலேன்
திருந்திழைதிறத்தினுற்றெளிந்தசிந்தைதீ
வருந்தினையிருக்கயான்வாழ்வின்வைகினேன். (கக்க)

இனையனயானுடையியல்புமெண்ணும்
நினைவுமென்றலினிநின்றுநான்செயும்
வினையுநல்லாண்மையும்விளம்பவேண்டுமோ
வனைகழல்வரிசிலைவள்ளியோயென்றான். (கக2)

திருவுறைமார்பனுந்தீர்ந்ததேயும்வந்
தொருவருங்காலமுன்னுரிமையோருரை
தருவினைத்தாகையிற்றுழ்வித்தாகுமோ
பரதனீயினையனபகரற்பாலையோ. (கக்க)

ஆரியன்பின்னருமைமந்துநன்குணர்
மாருதியெவ்வழிமருவினுனெனச்
சூரியன்கான்முளைதோன்றுமாலவன்
நீரரும்பரவையினெடிதுசேணையான். (கக்ச)

கோடியோராயிரங்குறித்ததுதுவர்
ஓடினர்நெடும்படைகொணரலுற்றதால்
நாடரக்குறித்தமின்றுநாளையவ்
வாடலந்தானையோடவனுமெய்துமால். (கக்டு)

ஒன்பதினுயிரகோடியுற்றது
நின்பெருஞ்சேனையந்நெடியசேனைக்கும்
நன்பெயரவதிநாணுளைநண்ணிய
பின்செயத்தக்கதுபேசற்பாற்றென்றான். (கக்ச)

விரும்பியவிராமனும்வீரநிற்கதோர்
அரும்பொருளாகுமோவமைதிநன்றெனப்
பெரும்பகலிறந்ததுபெயர்தினின்படை
பொருந்துதியெனவவன்றொழுதுபோயினான். (கக்எ)

அங்கதற்கினியனவருளியையபோய்த்
தங்குதியந்தையோடென்றுதாமரைச்
செங்கணுன்றம்பியுந்தானுஞ்சிந்தையின்
மங்கையுமவ்வழியன்றுவைகினான். (கஙஅ)

சேயுயர்கீர்த்தியான்கதிரின்செம்மல்பால்
போயதுமவ்வயிற்புகுந்தயாவையும்
ஓய்வுறுதுணர்த்தெனவுணர்த்தினனரோ
வாய்மையாவுணர்வுறுவலியமொய்ம்பினோன். (கஙக)

அன்றவணிறுத்தனனலரிகீட்டிசைப்
பொன்றிணிநெடுவரைபொலிவுறுதமுன்
வன்றிறற்றானுவர்கூவவானரக்
குன்றுறழ்நெடும்படையடைந்தகூறுவாம். (கசo)

இட்கிந்தைப்படலம்முற்றிற்று, ஆடதிருவிருத்தம் - எகசு.

கக-ஆவது. தானைகாண்படலம்.

ஆனையாயிரமாயிரத்தெறுழ்வலிக்கமைந்த
வானராதிபராயிரருடன்வரவகுத்த
கூனன்மாக்குரங்கையிரண்டாயிரகோடித்
தானையோடுமெச்சதவலியென்பவன்சார்ந்தான். (க)

ஊன்றிமேருவையெடுக்குறுமிடுக்கினுக்குரிய
தேன்றெரிந்துண்டுதெளிவுறுவானரச்சேனை
ஆன்றபத்துநூறுயிரகோடியோடமையத்
தோன்றினன்வந்துசுசேடணனெனும்பெயர்த்தோன்றல். (உ)

ஈறில்வேலையியைப்புறுமளவினிற்கலக்கிச்
சேறுகாண்குறுந்திறல்கெழுவானரச்சேனை
ஆறெனுயிரகோடியதுடன்வரவமிழ்தம்
மாறிலாமொழியுருமையைப்பயந்தவன்வந்தான். (ஊ)

ஐம்பதாயநூறுயிரகோடியெண்ணமைந்த
மொய்ம்புமால்வரைபுரைநெடுவானரமொய்ப்ப
இம்பர்ஞாலத்தும்வானத்துமெழுகியசீர்த்தி
நம்பனேத்தந்தகேசரிகடலெனநடந்தான். (எ)

மண்கொள்வாளெயிற்றேனத்தின்வலியெனவயிரத்
திண்கொண்மால்வரைமயிர்ப்புறத்தனவெனத்திரண்ட
கண்கொளாயிரகோடியினிரட்டியிற்கணித்த
எண்கினீட்டங்கொண்டெறுழ்வலியிடும்பன்வந்திறுத்தான். (ஙி)

முனியுமாமெனினருக்கனேமுரணையுமுருக்கும்
தனிமைதாங்கியவுலகையுஞ்சலம்வரிற்குமைக்கும்
இனியமாக்குரங்கீரிரண்டாயிரகோடி
அனிகமுன்வரவான்பெயர்க்கண்ணன்வந்தடைந்தான். (சு)

தனிவருந்தடங்கிரியெனப்பெரியவன்சலத்தால்
நினையுநெஞ்சிறவுருமெனவுறுக்குறுநிலையன்
பனசனென்பவன்பன்னிரண்டாயிரகோடிப்
புனிதவெஞ்சினவானரப்படைகொடுபுகுந்தான். (எ)

இடியுமாக்கடன்முழக்கமும்வெருக்கொளவிசைக்கும்
முடிவில்பேருறுக்குடையனவிசையனமுரண
கொடியகூற்றையுமொப்பனபதிற்றைந்துகோடி
நெடியவானரப்படைகொண்டுபுகுந்தனனீலன். (அ)

மாகரத்தனவுரத்தனவியனிலைய
வேகரத்தவெங்கண்ணுமிழ்வெயிலனமலையின்
ஆகரத்தினும்பெரியனவாறைந்துகோடி
சாகரத்தொடுததிமுகனென்பவன்சார்ந்தான். (கூ)

இலைத்துவேரொருமாநிலம்வேண்டுமென்றிரங்க
முலைத்தமுப்பதினுயிரகோடியின்முற்றும்
விலைத்தவெஞ்சினத்தரியினம்வெருவுறவிரிந்த
அளக்கரோடுமக்கயனெனும்பெயரன்வந்தடைந்தான். (கo)

ஆயிரத்தறுநூறுகோடியிற்கடையமைந்த
பாயிரப்பெரும்படைகொண்டுபரவையிற்றிரையில்
தாயுருத்துடனேவரத்தடநெடுவரையை
ஏயுருப்புயச்சாம்பனென்பவனும்வந்திறுத்தான். (கக)

வகுத்ததாமரைமலரயனிசிசரர்வாணுள்
உகுத்திநீயெனப்பொருவரும்பெருவலியுடையான்
பகுத்தபத்துநூறுயிரப்பத்தியினிரட்டி
தொகுத்தகோடிவெம்படைகொண்டுதுன்முகன்றொடர்ந்தான் (கஉ)

கோடிகோடிநூறுயிரவெண்ணெனக்குவிந்த
நீடுவெஞ்சினத்தரியினமிருபுடைநெருங்க
மூடுமும்பருமிம்பரும்பூழியின்மூழ்கத்
தோடிவர்ந்ததார்க்கிரிபுரைதுமிந்தனுந்தொடர்ந்தான். (கங)

இயைந்தபத்துநூறுயிரப்பத்தெனுங்கோடி
உயர்ந்தவெஞ்சினவானரப்படையொடுமொருங்கே
சயந்தனக்கொருவடிவெனத்திறல்கொடுதழைத்த
மயிந்தன்மற்கசகோமுகன்றன்னெடும்வந்தான். (கச)

கறங்குபோல்வனகாற்றினுங்கூற்றினுங்கடிய
பிறங்குதெண்டிரைக்கடல்புடைபெயர்ந்தெனப்பெயர்வ
மறங்கொள்வானரமொன்பதுகோடியெண்வகுத்த
திறங்கொள்வெஞ்சினப்படைகொடுகுமுதனுஞ்சேர்ந்தான். (கடு)

ஏழினேழுநூறுயிரகோடியென்றிசைந்த
பாழிமன்னெடுந்தோள்ளிளர்படைகொண்டுபரவை
ஊழிபேரினுமுலவிலவுலகினிலுயர்ந்த
பூழிவிண்புகப்பதுமுகனென்பவன்புகுந்தான். (கசு)

ஏழுமேழுமென்றுரைக்கின்றவுலகங்களெவையும்
தாழுங்காலத்துந்தாழ்விலாத்தடவரைக்குலங்கள்
சூழுந்தோற்றத்தவலிகொடொள்ளாயிரகோடிப்
பாழிவெம்புயத்தரியொடுமிடபனும்படர்ந்தான். (கள)

தீர்க்கபாதனும்வினதனுஞ்சரபனுந்திரைக்கும்
ஆர்க்கருங்கடற்குயர்ந்துளமைம்முகத்தனீகம்
ஆர்க்குமெண்ணருங்கோடிகொண்டண்டமும்புறமும்
போர்க்கும்பூழியின்மறைதரமுறையினிற்புகுந்தார். (கஅ)

* கய்யஞ்சாசரமுடையவக்கடவுளைக்கண்டு
மெய்யஞ்சாதவன்மாதிரஞ்சிறிதெனவிரிந்த
வய்யஞ்சாய்வரத்திரிதருவானரச்சேனை
அய்யஞ்சாயிரகோடிகொண்டுமன்வந்தடைந்தான். (கக)

நொய்திற்கூடியசேனைநூறுயிரகோடி
எய்தத்தேவருமென்கொலோமுடிவென்பதெண்ணை
மய்யற்சிந்தையாலந்தகன்மறுக்குற்றுமயங்கத்
தெய்வத்தச்சன்மெய்த்திருநெடுங்காதலன்சேர்ந்தான். (உ0)

சும்பனுங்குலச்சங்கனுமுதலினர்குரங்கிற்
றம்பெரும்படைத்தலைவர்கடரவந்ததானை
இம்பர்நின்றவர்க்கெண்ணரிதிராகவனுமத்
தம்பெனுந்துணைக்குரியமாறுரைப்பரிதனவே. (உக)

தோயினுழியோரேழுநீர்சுவறிவெண்கெளாம்
சாயினண்டமுமேருவுமொருங்குடன்சாயும்
ஏயின்மண்டலமெள்ளிடவிடமின்றிவிரியும்*
காயின்வெங்கனற்கடவுளுமிரவியுங்கரியும். (உஉ)

எண்ணினுன்முகரெழுபதினுயிரர்க்கியலா
உண்ணினண்டங்களோர்பிடியுண்ணவுமுதவா
கண்ணினேக்குறிற்கண்ணுதலானுக்குங்கதுவா
மண்ணின்மேல்வந்தவானரச்சேனையின்வரம்பே. (உங)

* கய்யஞ்சாயுதமுடையவென்றும்பாடம்.

ஒடிக்குமேல்வடமேருவைவேரொடுமொடிக்கும்
இடிக்குமேனெடுவானகமுகட்டையுமிடிக்கும்
பிடிக்குமேற்பெருங்காற்றையுங்கூற்றையும்பிடிக்கும்
குடிக்குமேற்கடலேழையுங்குடங்கையிற்குடிக்கும். (உசு)

ஆறுபத்தெழுகோடியர்வானரர்க்கதிபர்
கூறுதிக்கினுக்கப்புறங்குப்புறற்குரியார்
மாறில்கொற்றவனினைத்தனமுடிக்குறும்வலியர்
ஊறுமிப்பெருஞ்சேனைகொண்டெளிதின்வந்துற்றார். (உரு)

ஏழுமாகடற்பரப்பினும்பரப்பெனவிசைப்பச்
சூழும்வானரப்படையொடவ்வீரருந்துவன்றி
ஆழிமாபரித்தேரவன்காதலனடிகள்
வாழிவாழியென்றுரைத்தலர்தூவினர்வணங்கி. (உசூ)

அனையதாகியசேனைவந்திறுத்தலுமருக்கன்
தனையனெய்தினிற்றயரதன்புதல்வனைச்சார்ந்தான்
நினையுமுன்னம்வந்தடைந்ததுகின்பெருஞ்சேனை
வினையின்கூற்றுவகண்டருணீயெனவிளம்பும். (உஎ)

அய்யனும்முவந்தகமெனமுகமலர்ந்தருளித்
தய்யலாள்வரக்கண்டனனுமெனத்தளிர்ப்பான்
எய்திஞனங்கொர்நெடுவரைச்சிகரத்தினிருக்கை
வெய்யவன்மகன்பெயர்த்துமச்சேனையின்மீண்டான். (உஅ)

அஞ்சொடையிரண்டியோசனையகலத்ததாகிச்
செஞ்செவேவடதிசைநின்றுந்தென்றிசைச்செல்ல
எஞ்சலில்பெருஞ்சேனையெழுகெனவேவி
வெஞ்சினப்படைவீரரையுடன்கொண்டுமீண்டான். (உக)

மீண்டிராமனையடைந்திகல்வென்றிவேல்வீர
காண்டிநீயெனவரன்முறைதெரிவுறக்காட்டி
ஆண்டிருந்தவனுதரந்துவகையினுடி
ஈண்டுசேனைபாலெறிகடனெறிபடர்ந்தென்ன. (ஈ0)

எட்டுத்திக்கையுமிருநிலப்பரப்பையுமிமையோர்
வட்டவிண்ணையுமறிகடலனைத்தையுமறையத்
தொட்டுமேலெழுந்தோங்கியதூளியின்பூழி
அட்டிச்செம்பியனிறைகுடமொத்ததவ்வண்டம். (ஈக)

அத்தியொப்பெனினன்னவையுணர்ந்தவருளரால்
வித்தகர்க்கினியுரைக்கலாமுவமைவேறியாதோ
பத்திரட்டிநன்பகலிரவொருவலர்பார்ப்பார்
எத்திறத்தினுமெவுகாண்கிலர்முடிவெவனே. (ஈஉ)

விண்ணிற்றென்கடலுலகத்திருகரின்வெற்றி
எண்ணிற்றுனலதொப்பிலனெனநின்றவிராமன்
கண்ணிற்சிந்தையிற்கல்வியின்ஞானத்திற்கருதி
அண்ணற்றம்பியைநோக்கினனுரைசெய்வதானான். (கக)

அடல்கொண்டோங்கியசேனைக்குநாமுமம்மறிவால்
உடல்கண்டோமினிமுடிவுளகாணுமாறுளதோ
மடல்கொண்டோங்கியவலங்கலான்மண்ணிடைமாக்கள்
கடல்கண்டோமென்பர்யாவரேமுடிவுறக்கண்டார். (கச)

ஈசன்மேனியையீரைந்துதிசைகளையீண்டிவ்
வாசில்சேனையையம்பெரும்பூதத்தையறிவைப்
பேசும்பேச்சினைச்சமயங்கள்பிணக்குறும்பிணக்கை
வாசமாலையாயாவரேமுடிவெண்ணவல்லார். (கடு)

இன்னசேனையைமுடிவுறவிருந்திவணைக்கிப்
பின்னைக்காரியம்புரிதுமேலுள்பலபெயரும்
முன்னைச்செய்கைமேலொருப்படலுறுவதேயுறுதி
என்னவீரனைக்கைதொழுதிளையவனியம்பும். (கஎ)

யாவதெவ்வுலகத்தினினிங்கிவர்க்கியற்றல்
ஆவதாகுவதரியதொன்றுளதெனலாமே
தேவதேவியைத்தேடுவதென்பதுசிறிதால்
பாவந்தோற்றதுதருமமேவென்றதிப்படையால். (கஅ)

தரங்கநீரெழுதாமரைநான்முகன்றந்த
வரங்கொள்பேருலகத்தினின்மற்றைமன்னுயிர்கள்
உரங்கொண்மால்வரையுயிர்படைத்தெழுந்தனவொக்கும்
குரங்கின்மாப்படைக்குறையிடப்படைத்தனன்கொல்லாம். (கஆ)

ஈண்டுதாழ்க்கின்றதென்னினியெண்டிசைமருங்கும்
தேண்டுவார்களவல்லையிற்செலுத்துவதல்லால்
நீண்டநூல்வலாயென்றனனிளையவனெடியோன்
பூண்டதேரவன்காதலற்கொருமொழிபுகலும். (கஈ)

தானைகாண்படலம்முற்றிற்று. ஆதிருவிருத்தம்-எடுஉ.

கஉ-ஆவது. நாடவிட்டபடலம்.

வகையுமானமுமாறெதிர்ந்தாற்றுறும்
பகையுமின்றிநிரைந்துபரந்தெழும்
தகைவில்சேனைக்கமைதிசமைந்ததோர்
தொகையுமுண்டுகொலோவெனச்சொல்லினான். (க)

ஏற்றவெள்ளமெழுபதினிற்றவென்
முற்றலாளரறிவினமைந்ததோர்
மாற்றமுண்டதுவல்லதுமற்றுமோர்
தோற்றமென்னிதற்கென்றுமூன்சொல்லுமோ. (உ)

ஆறுபத்தெழுகோடியனீகருக்
கேறுகொற்றத்தலைவரிவர்க்குமுன்
கூறுசேனைப்பதிகொடுங்கூற்றையும்
நீறுசெய்திடுநீலனென்றுரைத்திலன். (ஊ)

என்றுரைத்தவெரிகதிர்மைந்தனை
வென்றிவிற்கையிராமன்விருப்பினன்
நின்றினிப்பலபேசியென்னெதிர்
சென்றிழைப்பனசிந்தனைசெய்கென்றான். (எ)

அவனுமண்ணலதுமனையையநீ
புவனமூன்றுநின்றுதையிற்புக்குழல்
தவனவேகத்தையோர்கிலைதாழ்த்தனை
கவனமாக்குரங்கின்செயல்காண்டியோ. (ஏ)

ஏகியேந்திழைதன்னையிருந்துழீஇ
நாகநாடுகநானிலனுடுக
போகபூமிபொருந்திடவல்லகின்
வேகமீண்டுவெளிப்படவேண்டுமால். (ஐ)

தென்றிசைக்கணிராவணன்சேனைகர்
என்றிசைக்கின்றதென்னறிவின்னணம்
வன்றிசைக்கினிமாருதியலால்
வென்றிசைக்குரியார்பிறர்வேண்டுமோ. (ஒ)

வள்ளறெவியைவஞ்சித்துவெளிய
கள்ளவாளரக்கன்செலக்கண்டது
தெள்ளியோயதுதென்றிசையென்பதோர்
உள்ளமும்மெனக்குண்டெனவுன்னுவாய். (ஓ)

தாரைமைந்தனுஞ்சாம்பனுந்தாமுதல்
வீரர்யாவருமேம்படுமேன்மையால்
சேர்கநின்னொடுந்திண்டிறற்சேனைகள்
பேர்கவெள்ளமிரண்டொடும்பெற்றியால். (ஔ)

குடதிசைக்கட்சுடேணன்குபேரன்வாழ்
வடதிசைக்கட்சதவலிவாசவன்
இடதிசைக்கண்வினதன்விறற்றரு
படையொடுற்றுப்படர்கெனப்பன்னினான். (க0)

வெற்றிவானரவெள்ளமிரண்டொடும்
சுற்றியோடித்துருவியொருமதி
முற்றுறுதமுன்முற்றுதிரிவ்விடை
கொற்றவாகையினீரெனக்கூறினான். (கக)

ஈண்டுநின்றிறந்தீரைந்துநூறெழில்
தண்டுசோதிக்கொடுமுடிதோன்றலால்
நீண்டநேமிகொலாமெனநேர்தொழ
வேண்டுமெவ்விந்தமலையினமேவுவீர். (கஉ)

தேடியவ்வழிதீர்ந்தபின்றேவரும்
ஆடுகின்றதறுபத *மைந்தினைப்
பாடுகின்றதுபன்மணிபாயிருள்
நாடுகின்றநருமதைநாடுவீர். (கங)

வாமமேகலைவானரமங்கையர்
காமவூசற்களியிசைக்கள்ளினுல்
தூமமேனியசுணங்துயில்வுறும்
ஏமகூடமெனுமலையெய்துவீர். (கச)

நொய்தினம்மலைநீங்கிநுமரொடும்
பொய்கையின்கரைபிற்படப்போதிரால்
செய்யபெண்ணைக்கரியபெண்ணைச்சில
வய்கறேடிக்கடிதுவழிக்கொள்வீர். (கஞ)

தாங்குவாரிற்றருவளர்சந்தனம்
வீங்குவேலிவிதர்ப்பமுமெல்லென
நீங்கிநாடுநெடியனபிற்படத்
தேங்குவார்புனற்றண்டகஞ்சேர்திரால். (கசு)

பண்டகத்தியன்வைகியதாப்பகர்
தண்டகத்ததுதாபதர்தம்மையுட்
கண்டகத்துயர்தீர்வதுகாண்டிரால்
முண்டகத்துறையென்றெருமொய்ம்பொழில். (கஎ)

ஞாலநல்லறத்தோருன்னுநற்பொருள்
போலநின்றுபொலிவதுபூம்பொழில்
சீலமங்கையர்வாயெனத்தீங்கனி
காலமின்றிக்கனிவதுகாண்டிரால். (கஅ)

நயனநன்கிமையார்துயிலார்ந்னி
அயனமில்லையருக்கனுக்கவ்வழி
சயனமாதர்கலவித்தலைதரும்
பயனுமின்பமூநீரும்பயக்குமால். (கஙு)

---

* ஐந்திணையெனவும்பாடம்.

ஆண்டிறந்துபின்னந்தரத்திந்துவைத்
தீண்டுகின்றதுசெங்கதிர்ச்செல்வனும்
ஈண்டுறைந்தலதேகலனென்பது
பாண்டவின்மலையென்னும்பருப்பதம். (உ0)

வேறு. முத்தீர்த்துப்பொன்றிரட்டிமணியுருட்டிமுதுநீத்தமூன்றிலாயர்
மத்தீர்த்துமரனீர்த்துமலையீர்த்துமரனீர்த்துவருவதியார்க்கும்
புத்தீர்த்திட்டலையாமற்புலவர்நாடுதவுவதுபுனிதமான
அத்தீர்த்தமகன்கோதாவிரியென்பரம்மலையினருகிற்றம்மா. (உக)

அவ்வாறுகடந்தப்பாலறத்தாறேயெனத்தெளிந்தவருளினூறும்
செவ்வாறுமெனக்குளிர்ந்துவெயிலியங்காவகையியங்கும்விரிபூஞ்சோலை
எவ்வாறுமெனத்துவன்றியிருளாறுமணியிமைப்பதிமையோர்வேண்ட
தெவ்வாறுமுகத்தொருவன்றனிக்கிடந்தசுவணத்தைச்சேர்திர்மாதோ. (உஉ)

சுவணத்தைக்கடந்தப்பால்சூரியகாந்தகமென்னத்தோன்றிமாதர்
கவணுமிழ்கல்வெயிலியங்குங்கனவரையுஞ்சந்திரகாந்தகமுங்காண்பீர்
அவணவைநீத்தேகியபின்னகலுபெலகடந்தாலநந்தனென்பான்
உவணபதிக்கொளித்துறையுங்கொங்கணமுங்குலிந்தமுஞ்சென்றுறுதிர்மாதோ

அரனதிகனுலகளந்தவரியதிகனென்றுரைக்குமறிவிலோர்க்குப்
பரகதிசென்றடைவரியபரிசேபோற்புகலரியபண்பிற்றுமால்
சுரநதியினயலதுவான்றோய்குடுமிச்சுடர்த்தொகையதொழுதோர்க்கெல்லாம்
வரனதிகந்தருந்தகையவருந்ததியாதெடுமலையைவணங்கியப்பால். (உச)

அஞ்சிவரும்வெஞ்சுரனுமாறுமகன்பெருஞ்சுனையுமகிலோங்காரம்
மஞ்சிவருநெருங்கிரியும்வளநாடும்பிற்படப்போய்வழிமேற்சென்றால்
நஞ்சுவருமிடற்றரவுக்கமிழ்தானிகொடுத்தாயைக்கலுழணண்ணும்
எஞ்சின்மரகதப்பொருப்பையிறைஞ்சியதன்புறஞ்சாரவேகிர்மாதோ. (உடு)

வடசொற்குந்தென்சொற்கும்வரம்பாகுநான்மறையுமற்றைநூலும்
இடைசொற்றபொருட்கெல்லாமெல்லையதாய்நல்லறத்துக்கீறுய்வேறு
புடைசுற்றுந்துணையின்றிப்புகழ்பொதிந்தமெய்யேபோற்பூத்துநின்ற
உடைசுற்றுந்தண்சாரலோங்கியவேங்கடத்திற்சென்றுறுதிர்மாதோ. (உசு)

இருவினையுமிடைவிடாவெவ்வினையுமியற்றுதேயிமையோரேத்தும்
திருவினையுமிடுபதந்தேர்சிறுமையையுமுறையொப்பத்தெளிந்துநோக்கிக்
கருவினையதிப்பிறவிக்கென்றுணர்ந்தங்குகளையுங்கடையின்ஞானத்
தருவினையின்பெரும்பகைஞராண்டுளரீண்டிருந்துமடிவணங்கற்பாலார். (உஎ)

சூதகற்றுந்திருமறையோர்துறையாடுநிறையாறுஞ்சுருதித்தொன்னூல்
மாதவத்தோருறைவிடனுமழையுறங்குமணித்தடனும்வானமாதர்
கீதமொத்தகின்னரங்களின்னரம்புவருடுதொறுங்கிளக்குமோதை
போதகத்தின்மழக்கன்றும்புலிப்பறழுமுறங்கிடனும்பொருந்திற்றம்மா. (உஅ)

கோடுறுமால்வரையதனைக்குறுகுதிரேலுங்நெடியகொடுமைநீங்கி
வீடுறுதிராதலான்விலங்குதிரப்புறத்துணீர்மேவுதொண்டை
நாடுறுதிருற்றதனைநாடியதற்பின்னையவைநளிநீர்ப்பொன்னிச்
சேடுறுதண்புனற்றெய்வத்திருநதியினிருகரையுஞ்சேர்த்திர்மாதோ. (உசு)

துறக்கமுற்றூர்மனமென்னத்துறைகெழுநீர்ச்சோணுகெடந்தாற்றெல்லை
மறக்கமுற்றூரதனயலேமறைந்துறைவரவ்வழிநீர்வல்லையேகி
உறக்கமுற்றூர்கனவுற்றூரெனுமுணர்விலுமொதுங்கிமணியாலோங்கற்
பிறக்கமுற்றமலைநாடுநாடியகன்றமிழ்நாட்டிற்பெயர்த்திர்மாதோ. (உ0)

தென்றமிழ்நாட்டகன்பொதியிற்றிருமுனிவன்றமிழ்ச்சங்கஞ்சேர்கிற்றீரேல்
என்றுமவனுறைவிடமாமாதலானம்மலையையிடத்திட்டேகிப்
பொன்றிணிந்தபுனல்பெருகும்பொருநையெனுந்திருநதிபின்பொழியநாகக்
கன்றுவளர்தடஞ்சாரன்மகேந்திரமாமெவெரையுங்கடலுங்காண்டிர். (உக)

ஆண்டுகடந்தப்புறத்துமெப்புறத்துமொருதிங்களவதியாகத்
தேண்டியிவண்வந்தடைதிர்விடைகொடூர்கடிதென்னச்செப்பும்வேலை
நீண்டவனுமாருதியைநிறையருளாலுறநோக்கிநீதிவல்லோய்
காண்டியெனிற்சூறிகேட்டியெனவேறுகொண்டிருந்துகழறலுற்றூன். (உஉ)

வேறு. பாற்கடற்பிறந்தசெய்யபவளத்தைப்பஞ்சியூட்டி
மேற்படமதியஞ்சூட்டிவிளங்குறநிரைத்தமெய்ய
காற்றகைவிரல்களேயகமலமும்பிறவுங்கண்ட
ஏற்பிலவென்பதன்றியேணையடிக்குவமையென்னே. (உங)

நீமெயாயுணர்தியையநிரைவளமகளிர்க்கெல்லாம்
வாய்மையாலுவமையாகமதியறிபுலவர்வைத்த
ஆமையாமென்றபோதுமல்லனசொல்லினுலும்
யாமயாழ்மழலையாடன்புறவடிக்கிழுக்கமன்னே. (உச)

வனைவராலரியகோதைபேதைமென்கணைக்கான்மெய்ய
நினைவராலரியவின்னநேர்படப்புலவர்போற்றும்
சினைவராற்பகழியாவதெற்சினையென்னுஞ்செப்பம்
எனைவராற்பகருமீட்டியானுரைத்தின்பமென்னே. (உடு)

அரம்பையென்றளகமாதர்குறங்கினுக்கமைந்தவொப்பின்
வரம்பையுங்கடந்தபோதுமற்றுரைவகுக்கலாமோ
நரம்பையுமிழ்தநாறுநறவையுநன்னீர்ப்பண்ணைக்
கரும்பையுங்கடந்தசொல்லாள்கவாற்கிதுகருதுகண்டாய். (உசு)

வாராழிக்கலசக்கொங்கைவஞ்சிபோன்மருங்குலாடன்
தாராழிக்கலைசாரல்குற்றடங்கடற்குவமைதக்கோய்
பாராழிபிடரிற்றங்கும்பாந்தளும்பனிவென்றேங்கும்
ஓராழித்தேருங்கண்டவுனக்குநானுரைப்பதென்னே. (உஎ)

சட்டகந்தன்னைநோக்கியாரையுஞ்சமைக்கத்தக்காள்
இட்டிடையிருக்குந்தன்மையியம்பக்கேட்டுணர்திபென்னின்
கட்டுரைத்துவமைகாட்டக்கட்பொறிகதுவாகையிற்
றெட்டவெற்குணரலாமற்றுண்டெனுஞ்சொல்லுமில்லை. (கூஅ)

ஆலிலைப்படிவந்தீட்டுமையநுண்பலகைநொய்ய
பால்நிறத்தட்டம்வட்டக்கண்ணடிபலவுமின்ன
போலுமென்றுரைத்தபோதும்புனைந்துரைபொதுமைபார்க்கின்
ஏலுமென்றிசைக்கினேலாவிதுவயிற்றியற்கையின்னும். (கூக)

சிங்கலில்சிறுகூதாளிநந்தியின்றிரட்பூச்சேர்ந்த
பொங்குபொற்றெரியையென்றலும்புல்லிதுபுதுமைத்தாமால்
அங்கவளுந்தியொக்குஞ்சுழியெனக்கணித்ததுண்டால்
கங்கையைநோக்கிச்சேறிகடலினுநெடிதுகற்றோய். (கூ0)

மயிரொழுக்கெனவொன்றுண்டால்வல்லிசேர்வயிற்றின்மற்றென்
உயிரொழுக்கதற்குவேண்டுமுவமையொன்றுரைக்கவேண்டின்
செயிரில்சிற்றிடையாயுற்றசிறுகொடிநுடக்கந்தீரக்
குயிலுறுத்தமையவைத்தகொள்கொம்பென்றுணர்ந்துகோடி. (கூக)

அல்லியூர்ந்திடுமென்றஞ்சியரவிந்தந்துறந்தாட்கம்பொன்
வல்லிமூன்றுளவாற்கோலவயிற்றின்மற்றவையுமார
வில்லிமூன்றுலகின்வாழுமாதருந்தோற்றமெய்ம்மை
சொல்லியூன்றியவாம்வெற்றிவரையெனத்தோன்றுமன்றே. (கூஉ)

செப்பென்பென்கலசமென்பென்செவ்விளநீருந்தோர்வென்
துப்பொன்றுதிரள்சூதென்பென்சொல்லுவென்றும்பிக்கொம்பைத்
தப்பின்றிப்பகலின்வந்தசக்கரவாகமென்பென்
ஒப்பொன்றுமுலகிற்காணேன்பலநினைந்துலைவெனின்னும். (கூங)

கரும்புகண்டாலுமாலைக்காம்புகண்டாலுமாலி
அரும்புகண்டாரைசோரவழுங்குவேனறிவதுண்டோ
சுரும்புகண்டாலுங்கோதைதோணினைந்துவமைசொல்ல
இரும்புகண்டனையநெஞ்சமெனக்கில்லையிசைப்பதென்னை. (கூச)

மூன்கையேயொப்பதொன்றுமுண்டுமூன்றுலகத்துள்ளும்
என்கையேயிழுக்கமன்றேயியம்பினுங்காந்தளென்றல்
வன்கையாழ்மணிக்கையென்றன்மற்றொன்றையுணர்த்தலன்றி
நன்கையாடடக்கையாமோவலத்தின்மேனலமுண்டாமோ. (கூடு)

ஏலக்கொண்டீன்றபிண்டியிளந்தளிர்க்கிடக்கையாணர்
காலைக்கற்பகத்தின்காமர்குழைபடுங்கமலமென்பூ
நூலொர்க்குமருங்குலாடனூபுரம்புலம்புங்கோலக்
காலுக்குத்தொலையுமென்றற்கைக்கொப்புவைக்கலாமோ. (கூசு)

வெள்ளியமுறுவல்செவ்வாய்விளங்கிழையிளம்பொற்கொம்பின்
வள்ளுகிர்க்குவமைநம்மான்மயர்வறவகுக்கலாமோ
எள்ளுதிர்நீரேமூக்கையென்றுகொண்டிவறிப்பின்னும்
கிள்ளைகண்முருக்கின்பூவைக்கிழிக்குமஃதழிக்கலாமோ. (சஎ)

அங்கையுமடியுங்கண்டாலரவிந்தினையுமாபோல்
செங்களிசிதறிநீலஞ்செருக்கியதெய்வவாட்கண்
மங்கைதன்கழுத்தைநோக்கிவளரிளங்கமுகும்வாரிச்
சங்கமுநினதியாயினவையென்றுதுணிதக்கோய். (சஅ)

பவளமுங்கிடையுங்கொவ்வைப்பழனும்பைங்குமுதப்போதும்
துவளிலவங்கங்கோபமுருக்கென்றித்தொடக்கஞ்சாலத்
தவளமென்றுரைக்கும்வண்ணஞ்சிவந்துதேன்றதும்புமாகின்
குவளையுண்கண்ணிவண்ணவாயதுகுறியுமஃதே. (சக)

சிவந்ததோரமிழ்தமில்லத்தேனில்லையுளவென்றும்
கவர்ந்தபோதன்றியுள்ளநினைப்பவோர்களிப்புநல்கா
பவர்ந்தவாணுதலினுடன்பவளவாய்க்குவமைபாவித்
துவந்தபோதுவந்தவண்ணமுரைத்தபோதுரைத்ததாமோ. (கo)

மூல்லையுமுருந்துமுத்துமுறுவலென்றுரைத்தபோது
சொல்லையுமமிழ்தும்பாலுந்தேனுமென்றுரைக்கத்தோன்றும்
அல்லதொன்றுவதில்லையமிழ்திற்குமுவமையுண்டோ
வல்லையேலறிந்துகோடிமாநிலவாறுசான்றோய். (கக)

ஓதியுமெள்ளுந்தொள்ளைக்குமிழுமூக்கொக்குமேற்ற
சோதிசெம்பொன்னுமின்னுமணியும்போற்றுளங்கித்தோன்று
ஏதுவுமில்லவல்லாரெழுதுவார்க்கெழுதவொண்ணு
நீதியைநோக்கிநீயேநினதியானெடிதுகாண்பாய். (கஉ)

வள்ளைகத்தரிகைவாமமயிர்வினைக்கருவியென்னப்
பிள்ளைகளுரைத்தவொப்பைப்பெரியவருரைக்கிற்பித்தாம்
வெள்ளைவெண்டோடுசெய்தவிழுத்தவம்விளைந்ததென்றே
உள்ளுதியுலகுக்கெல்லாமுவமைக்குமுவமையுண்டோ. (கங)

பெரியவாய்ப்பரவையொவ்வாபிறிதொன்றுனைந்துபேச
உரியவாயொருவருள்ளத்தடங்குவவல்லவண்மை
தெரியவாயிரக்காலுக்கிற்றேவர்க்குந்தெய்வமென்னக்
கரியவாய்வெளியவாகும்வாட்டங்கண்களம்மா. (கச)

கேளொக்குமன்றியொன்றுளத்திலுற்கீழ்மைத்தாமே
கோளொக்குமென்னினல்லாற்குறியொக்கக்கூறிற்றன்றுல்
வாளொக்கும்வடிக்கணுடன்புருவத்துக்குவமைவைக்கின்
தாளொக்கவனந்துநிற்பவிரண்டில்லையங்கசாபம். (கஞ)

நன்னுளருளினாணுமுகத்தினைநுதலோடிப்
பன்னுளும்பன்னியாற்றுமதியெனும்பண்பதாகி
முன்னுளின்முளைவெண்டிங்கண்முறைநாளுங்குறைவேயாகி
என்னுளும்வளர்ந்ததென்னினிறையொக்குமியல்பிற்றுமே. (நுசு)

வனபவரில்லையன்றேவனத்துணும்வந்தபின்னை
அனையனவெனினுந்தாந்தமழுக்கோரழிவுண்டாகா
வினைசெயக்குமுன்றவல்லவிதிசெயவினைந்தலேம்
புனைமணிப்பவளமின்னும்புதுமையாமுவமைபூணு. (நுஎ)

கொண்டலின்குழவியாம்பல்குனிசிலைவள்ளைகொற்றக்
கெண்டையொண்டரளமென்றிக்கேண்மையகிடந்ததிங்கள்
மண்டிலவதனமென்றுவைத்தனன்விதியேயேப்
புண்டரீகத்தையுற்றபொழுதுபொருந்தித்தேர்வாய். (நுஅ)

காரினைக்கழித்துக்கட்டிக்கள்ளிலைடாவிகாட்டிப்
பேரிருட்பிழம்புதோய்ந்துநெறிவுறீஇப்பிறங்குகற்றைச்
சோர்குழற்றொகுதிச்சூழல்சும்மைசெய்தனையதம்மா
நேர்மையைப்பருமைசெய்தநிறைநறுங்கூந்தனீத்தம். (நுக)

புல்லிதழ்கமலத்தெய்வப்பூவிற்குமுண்டுபொற்பின்
எல்லைசூழ்மதிக்குமுண்டங்களங்கமென்றுரைக்குமேதம்
அல்லவுஞ்சிறிதுகுற்றமகன்றிலவன்னமன்ன
நல்லியலாளுக்கெல்லாநலனன்றிப்பிறிதுண்டன்றுல். (சுo)

மங்கையர்க்கோதிவைத்தவிலக்கணம்வண்ணவாசப்
பங்கயத்தவட்குமையாநிரம்பலபற்றிநோக்கின்
செங்கயற்கருங்கட்செவ்வாய்த்தேவரும்வணங்குந்தெய்வக்
கொங்கையைக்குயிலுக்கொன்றுங்குறைவிலகுறியுமஃதே. (சுக)

குழல்படைத்தியாழைச்செய்துகுயிலொடுகிளியுங்கூட்டி
மழலையும்பிறவுந்தந்துவடித்தகைம்மலரின்மேலான்
இழைபொருமுலையினுடனின்சொற்களியையச்செய்தான்
பிழையிலனுவமைகாட்டப்பெற்றிலன்பெறுங்கொலின்னும். (சுஉ)

வானின்றவுலகமூன்றும்வரம்பின்றிவளர்ந்தவேனும்
நானின்றசுவைமற்றொன்றேவமிழ்தன்றிநல்லதில்லை
மீனின்றகண்ணினுடன்மென்மொழிக்குவமைவேண்டின்
தேனென்றேவமிழ்தமொன்றேவவைசெவிக்கின்பஞ்செய்யா. (சுங)

பூவருமழலையன்னம்புனைமடப்பிடியென்றின்ன
தேவருமருளத்தக்கசெலவினவெனவுந்தேறேன்
பாவருங்கிழமைத்தொன்மைப்பருணிதர்தொடுத்தபத்தி
நாவருங்கிளவிச்செவ்விநடைவருநடையணல்லோய். (சுச)

என்னிறமுரைக்கேன்மாவினிளநிறமுதிருமற்றைப்
பொன்னிறங்கறுக்குமென்ரூன்மணிநிறமூவமைபோதா
மின்னிறநாணியெங்கும்வெளிப்படாவொளிக்கும்வேண்டின்
தன்னிறந்தானேயொக்குமலர்நிறஞ்சமழ்க்குமன்றே. (சுடு)

மங்கையரவளையொப்பார்மற்றுளரில்லரென்னும்
சங்கையிலுள்ளந்தானேசான்றெனக்கொண்டுசான்ரோய்
அங்கவணிலைமையெல்லாமளந்தறிந்தருகுசார்ந்து
திங்கள்வாண்முகத்திளுட்குச்செப்பெனப்பின்னுஞ்செப்பும். (சுசு)

வேறு. முன்னைநான்முனியொடுமுதியநீர்மிதிலைவாய்ச்
சென்னிநீண்மாலையான்வேள்விகாணியசெல
அன்னமாடுறையுளுக்கருகுநின்ரூளையச்
கன்னிமாடத்திடைக்கண்டதுங்கழறுவாய். (சுஎ)

சூழிமால்யானையின்றுணைமருப்பினையெனக்
கேழிலாவனமுலைக்கிரிசமந்திடைவதோர்
வாழிவான்மின்னிளங்கொடியின்வந்தாளையன்
ரூழியானரசவைக்கண்டதும்மருளுவாய். (சுஅ)

வரைசெய்தாள்வில்லிறுத்தவனமாமுனியொடும்
விரசிஞனல்லனேல்விடவெல்யானுயிரெனுக்
கரைசெயாவேலையிற்பெரியகற்பினடெரிந்
துரைசெய்தாளஃதெலாமுணரநீயுரைசெய்வாய். (சுக)

முன்புநானறிகிலாமுளிநெடுங்கானிலே
என்பினேபோதுவாய்நினைதியோவேழைநீ
இன்பமாயாருயிர்க்கினியையாயினையினித்
துன்பமாய்முடிதியோவென்றதுஞ்சொல்லுவாய். (எ0)

ஆனபேரரசிழந்தடவிசேர்வாயுனக்
கியானலாதனவெலாமினியவோவினியெனு
மீனுலாநெடுமலர்க்கண்கணீர்விழவிழுந்
தூனிலாவுயிரின்வந்தயர்வதும்மூரைசெய்வாய். (எக)

மல்லன்மாநகர்துறந்தேகுநாண்மதிதொடும்
கல்லின்மாமதின்மணிக்கடைகடந்திதென்முன்
எல்லைதீர்வரியவெங்கானம்யாதோவெனுச்
சொல்லினுளஃதெலாமுணரநீசொல்லுவாய். (எஉ)

இனையவாறுரைசெயாவினிதினேகுதியெனு
வினையுமாமணிநன்மோதிரமளித்தறிஞின்
வினையெலாமுடிகெனுவிடைகொடுத்தவலும்
புனையும்வார்கழலினருளொடும்போயினன். (எங)

அங்கதக்குரிசிலோடுசினத்துழுவராம்
வெங்கதத்தலைவரும்விரிகடற்படையொடும்
பொங்குவிற்றலைவரைத்தொழுதுமுன்போயினர்
செங்கதிர்ச்செல்வனேப்பணிவுறுஞ்சென்னியார். (எச)

நாடவிட்டபடலம்முற்றிற்று. ஆ திருவிருத்தம்-அஉங.

கஙு - ஆவது. பிலநீங்குபடலம்.

போயினர்போயபின்புறநெடுந்திசைகடோ
றேயினரிவிகாதலனுமேயினபொருட்
காயினரவரையங்கன்னநாளவதியிற்
றூயினருலகினேத்தகைநெடுந்தானையார். (க)

குன்றிசைத்தனவெனக்குவவுதோள்வலியினர்
மின்றிசைத்திடுமிடைக்கொடியையாடினர்விராய்
வன்றிசைப்படருமாழியவண்டமிழ்டைத்
தென்றிசைச்சென்றுளார்திறனெடுத்துரைசெய்வாம். (உ)

சிந்துராகத்தொடுந்திரண்மணிச்சுடர்செறிந்
தந்திவானத்தினின்றவிர்தலானரவிலை
டிந்தியாறெய்தலானிறைவன்மாமௌலிபோல்
விந்தைநாகத்தின்மாடெய்தினர்வெய்தினுல். (ங)

அந்நெடுங்குன்றமோடவிர்மணிச்சிகரமும்
பொன்னெடுங்கொடுமுடிப்புரைகளும்புடைகளும்
நன்னெடுந்தாழ்வரைநாடினுர்நவையிலார்
பன்னெடுங்காலமாமென்னவோர்பகலிடை. (ச)

மல்லன்மாஞாலமோர்மறுவுறுவகையினச்
சில்லலோதியையிருந்துறைவிடந்தேடுவார்
புல்லினுருவகினேப்பொதுவிலாவகையினுல்
எல்லைமாகடல்களேயாகுமாறெய்தினர். (ஞ)

விண்டுபோயிழிவமேனிமிர்வவின்படர்வவேர்
உண்டமாமரனினம்மலையும்வாயுறையுநீர்
மண்டுபோரதனின்வாழுயிர்களம்மதியினர்
கண்டிலாதனவயன்கண்டிலாதனகொலாம். (ட)

வேறு. ஏகினர்யோசனையேழொடேழுபார்
சேகரத்தென்றிசைகடிதுசெல்கின்றூர்
மேகமாலையினுடும்விரவிமேதியின்
நாகுசேர்ந்தருமதையாறுநண்ணினர். (எ)

அன்னமாடிடங்களுமமரர்நாடியர்
துன்னியாடிடங்களுந்துறக்கமேயவர்
முன்னியாடிடங்களுஞ்சுரும்புமூசுதேன்
பன்னியாடிடங்களும்பரந்துசுற்றினர். (அ)

பெறலருந்தெரிவையைநாடும்பெற்றியார்
அறனறுங்கூந்தலுமள்கவண்டுசூழ்
நிறைநறுந்தாமரைமுகமுநித்தில
முறுவலுங்காண்பரான்முழுதுங்காண்கிலார். (கூ)

செருமதயாக்கையர்திருக்கில்சிந்தையர்
தருமதயாவிவைதழுவுந்தன்மையர்
பொருமதயானையும்பிடியும்புக்குழல்
நருமதையாமெனுநதியைநீங்கினர். (கo)

தாமகூடத்திரைத்தீர்த்தசங்கமும்
நாமகூடப்பெருந்திசையையல்கிய
வாயகூடச்சுடர்மணிவயங்குறும்
ஏமகூடத்தடங்கிரியையெய்தினர். (கக)

மாறுகிரிகளுமரனுமற்றவும்
சூறுபொன்னெனப்பொலிந்துதோன்றுறப்
பாறுசுடரொளிபரப்புகின்றது
வீறுறுமுலகினும்விளங்குமெய்யது. (கஉ)

பறவையும்பல்வகைவிலங்கும்பாடமைந்
துறைவனகனகநுண்பூழியொட்டலான்
நிறைநெடுமேருவைச்சேர்ந்தநீரவாய்ப்
பொறைநெடும்பொன்னெளிமுழுதும்போர்ப்பது. (கங)

பரவியகனகநுண்பராகம்பாடுற
எரிசுடர்ச்செம்மணியீட்டத்தோடிழி
அருவியுநிகளுமலங்குதீயிடை
உருகுபொன்பாய்வபோன்றொழுகுகின்றது. (கச)

விஞ்சையர்பாடலும்விசும்பின்வெள்வளைப்
பஞ்சின்மெல்லடியினராடற்பாணியும்
குஞ்சரமுழக்கமுங்குமுறுபேரியின்
மஞ்சினமுரற்றலும்வயங்குமாண்பது. (கடு)

அனையதுநோக்கினராமிதாமயில்
வினையவேலிராவணனிருக்கும்வெற்பெனும்
நினைவினருவந்துயர்ந்தோங்குநெஞ்சினர்
சினமிகக்கனற்பொறிசிந்துசெங்கணார். (கசு)

இம்மலைகாணுதுமேழைமானேயச்
செம்மலைநீக்குதுஞ்சிந்தைத்தீதென
விம்மலுற்றுவகையின்விளங்குமுள்ளத்தார்
அம்மலையேறினரச்சநீங்கினர். (கள)

இரிந்தனகரிகளும்யாளியீட்டமும்
விரிந்தகோளரிகளும்வெருவிநீங்கின
திரிந்தனரெங்கணுந்திருவைக்காண்கிலார்
பரிந்தனசிந்தனைபரிகின்றுமென. (கஅ)

ஐம்பதிற்றிரட்டிகாவதத்தினுலகன்
றும்பரைத்தொடுவெதொத்துயர்வினேங்கிய
செம்பொனற்கிரியையோர்பகலிற்றேடினர்
கொம்பினைக்கண்டிலர்குப்புற்றேகினர். (ககூ)

வெள்ளமோரிரண்டெனவிரிந்தசேனையைத்
தெள்ளுநீருலகெலாந்தெரிந்துதேடினர்
எள்ளருமகேந்திரத்தெம்மிற்கூடுமென்
றுள்ளினருயர்நெடுமோங்கனீங்கினர். (உ0)

மாருதிமுதலியவயிரத்தோள்வயப்
போர்கெழுவீரரேகுழுமிப்போகின்றூர்
நீரெனும்பெயருமந்நெறியினீங்கலால்
சூரியன்வெருவுமோர்சுரத்தைநண்ணினர். (உக)

புள்ளடையாவிலங்கரிதுபுல்லொடும்
கள்ளடைமரனிலகல்லுந்தீந்தக
டுள்ளிடையரவநுண்பொடியொடொட்டலின்
வெள்ளிடையல்லதொன்றரிதவ்வெஞ்சுரம். (உஉ)

நன்புலனடுக்குறவுணர்வுநாமறப்
பொன்பொலியாக்கைகள்புழுங்கிப்பொங்குவார்
தென்புலத்தங்கெரிநரகிற்சிந்திய
என்பில்பல்லுயிரெனவெம்மையெய்தினர். (உங)

நீட்டியநாவினர்நிலத்திற்றீண்டுதோ
றூட்டியவெம்மையாலுலையுங்காலினர்
காட்டினுங்காய்ந்ததங்காயந்தீயலால்
சூட்டகன்மேலெழுபொரியிற்றுள்ளினர். (உச)

ஒதுங்கலாநிழலினைக்காண்கிலாதுயிர்
பிதுங்கலாமுடலினர்முடிவில்பீழையார்
பதுங்கமப்பருகிடப்பதைக்கின்றூர்பல
விதுங்கொளாநெடும்பிலவழியின்மேவினர். (உரு)

மீச்செலவரிதினிவிளியினல்லது
தீத்செலவொழியவந்தடுக்குந்திண்பில
வாய்ச்செலனன்றெனமனத்தினெண்ணினர்
போய்ச்செலவறிதுமென்றதனிற்போயினர். (உசு)

அக்கணத்தப்பிலத்தந்தமெய்தினர்
திக்கினெடுலகுறச்செறிந்ததேங்கிருள்
எக்கியகதிரவற்கஞ்சியேமுறப்
புக்கதேயனையதோர்புரைபுக்கெய்தினர். (உஎ)

எழுகிலர்காலெடுத்தேகுமெண்ணிலர்
வழியுளதாமெனுமுணர்வுமாற்றினர்
இழுகியநெய்யெனுமிருளினேக்கத்துள்
முழுகியமெய்யெனவுயிர்ப்புமுட்டினர். (உஅ)

நின்றனர்செய்வதோர்நிலைமைநோக்கலர்
பொன்றினராமெனப்பொருமும்புந்தியர்
வன்றிறன்மாருதிவல்லையோவெமை
இன்றிதுகாக்கவென்றிரந்துகூறினர். (உக)

உய்வுறுத்துவென்மனமுலையிருழின்வால்
மெய்யுறப்பற்றுதிர்விடுகிலீரென
அய்யனக்கணத்தினின்றகலுநீணெறி
கய்யினிற்றடவிவெங்காலினேகினன். (கூ0)

பன்னிரண்டியோசனைபடர்ந்தமெய்யினன்
மின்னிரண்டனையகுண்டலங்கள்வில்லிடத்
துன்னிருடொலந்திடத்துருவியேகினன்
பொன்னெடுங்கிரிநிகர்பொலிந்ததோளினன். (கூக)

கண்டனன்கடிநகர்கமலத்தொண்கதிர்
மண்டிலமறைந்துறைந்தனையமாண்பது
விண்டலநாணுறவிளங்குகின்றது
புண்டரிகத்தவள்வதனம்போன்றது. (கூஉ)

கற்பகக்கானதுகமலக்காடது
பொற்பெருங்கோபுரப்புரிசைபுக்கது
அற்புதவமரருமெய்தலாவது
சிற்பமுமயன்மனம்வருந்திச்செய்தது. (கூங)

இந்திரநகரமுநிகரிலாதது
மந்திரமணியினிற்பொன்னின்மண்ணினின்
அந்தரத்திழிசுடரவையின்றியினும்
உந்தருமிருடொலந்தொளிரநின்றது. (கூச)

புவிபுகழ்சென்னிபேரமலன்மூள்புகழ்
கவிகடமேனியெனக்கனகராசியும்
சவியுடைத்தூசுமென்சாந்துமாலையும்
அவிரிழைக்குப்பையுமளவிலாதது. (கூடு)

பயில்குரற்கிண்கிணிபரந்தபாவையர்
இயல்புடைமைந்தர்களியக்கிலாமையால்
துயிலவுநோக்கவுந்துணையதன்றியும்
உயிரிலாவோவியமென்னவொப்பது. (கூசு)

அமிழ்துலையினியையடித்தவண்டியும்
தமிழ்நிகர்நறவமூந்தணிதண்டேறலும்
இமிழ்கனிப்பிறக்கமும்பிறவுமின்னன
கமழ்வுறத்தோன்றியகணக்கில்கொட்பது. (கூஎ)

வேறு. கன்னிநெடுமாநகரமன்னதெதிர்கண்டார்
இந்நகரமாமிகுராவணனதூரென்
றுன்னியுறையாடினருவந்தனர்வியந்தார்
பொன்னினெவோயிலதனூடுநனிபுக்கார். (கூஅ)

புக்கநகரத்தினிதுநாடினர்புகுந்தார்
மக்கள்கடைதேவர்தலைவானுலகின்வையத்
தொக்கவுறைவோருருவமோவியமலான்மற்
றெக்குறியினுள்ளவுமெதிர்ந்திலர்திரிந்தார். (கூகூ)

வாவியுளபொய்கையுளவாசமணகாறும்
காவுமுளகாவிவிழியார்மொழிகளென்னக்
கூவுமிளமென்குயில்கள்பூவைகிளிகோலத்
தூவிமடவன்னமிவையுள்ளசுவடில்லை. (சூ0)

ஆயநகரத்தினியல்புள்ளுறவறிந்தார்
மாயைகொலெனக்கருதிமற்றுநினைவுற்றார்
தீயபிலனுட்பிறவிசென்றவிவையொன்றே
தூயதுதறக்கமெனநெஞ்சுதுணிவுற்றார். (சக)

இறந்திலமிதற்குரியதெண்ணியிலமேது
மறந்திலமயிர்ப்பினெடிமைப்புளமயக்கம்
பிறந்தவர்செயற்குரியசெய்தல்பிழையின்றுல்
திறந்தருவதென்னெனவிசைத்தனர்திகைத்தார். (சஉ)

சாம்பனவனென்றுரைசெய்வானெழுசலத்தால்
காம்பனையதோளியையொளித்தபகைவன்
நாம்புகவமைத்தபொறிநன்றுமுடிவின்றுல்
ஏம்பலினிமேலுவிதியான்முடியுமென்றான். (சகூ)

இன்றுபிலனீதிடையினேறரிதெனிற்பார்
தின்றுசகரர்க்கதிகமாகிநனிசேறும்
அன்றதெனின்வஞ்சனையரக்கரையடங்கக்
கொன்றெழுதமஞ்சலெனமாருதிகொதித்தான். (சச)

மற்றவருமற்றதமனக்கொளவலித்தார்
உற்றனர்புரத்திடையவ்வொண்சுடரினுள்ளோர்
நற்றவமனத்தமுருவண்ணியொளிபெற்ற
கற்றைவிரிபொற்சடையினுலையெதிர்கண்டார். (சடு)

மருங்கலசவற்கலைவரிந்துவரிவாளம்
பொருங்கலசமொக்குமுலைமாசுபுடைபூசிப்
பெருங்கலைமதித்திருமுகத்தள்பிறழ்செங்கேழ்
கருங்கயல்களிப்புறவுமூக்கினுதிகண்ணுள். (சசு)

தேரனையவல்குல்செறிதிண்கதலிசெப்பும்
ஊருவினுடொப்புறவொடெக்கியுறவொல்கும்
நேரிடைசலிப்பறநிறுத்திநிமிர்கொங்கைப்
பாரமுளொடெக்குறவுயிர்ப்பிடைபரிப்ப. (சஎ)

தாமரைமலர்க்குவமைசால்புறுதளிர்க்கைப்
பூமருவுபொற்செறிகுறங்கிடைபொருந்தக்
காமமுதலுற்றபகைகாறளரவாசை
நாமமறியப்புலனுநல்லறிவுபுல்க. (சஅ)

நெறிந்துநிமிர்கற்றைநிறையோதிநெடுநீலம்
செறிந்தசடையுற்றதுதலத்தினெறிசெல்லப்
பறிந்துவினைபற்றறமனப்பெரியபாசம்
பிறிந்துபெயரக்கருணைகண்வழிபிறங்க. (சகூ)

இருந்தனளிருந்தவளையெய்தினரிறைஞ்சா
அருந்ததியெனத்தகையசீதையவளாகப்
பரிந்தனர்பதைத்தனர்பணித்தகுறிபண்பிற்
றெரிந்துணர்திமற்றிவள்கொறேவியெனலோடும். (டுo)

எக்குறியொடெக்குணமெதித்திவணுரைக்கேன்
இக்குறியுடைக்கொடியிராமன்மனையாளோ
அக்கின்மணிமுத்தமணியாரமதினேர்நின்
றெக்குமெனிலெக்குமெனமாருதியுரைத்தான். (டுக)

அன்னபொழுதின்கணவணங்குமறிவற்றூள்
முன்னனையர்சேறன்முறையன்றெனமுனிந்தாள்
தன்னரியபொன்னகரியின்னுறைவிரல்லீர்
என்னவரவியாவருரைசெய்மெனவிசைத்தாள். (டுஉ)

வேதனையரக்கரொருமாயைவிளைவித்தார்
சீதையையொளித்தனர்மறைத்தபுரைதேர்வுற்
றேதமிலறத்துறைநிறுத்தியவிராமன்
தூதருலகிற்றிரிதுமென்னுமுரைசொன்னார். (நிசு)

என்றலுமிருந்தவளெழுந்தனளிரங்கிக்
குன்றனையதாயதொருபேருவகைகொண்டாள்
நன்றுவரவாகநடனம்புரிவலென்னு
நின்றனணைங்கணிணைநீர்கலுழிகொள்ள. (நிசு)

எவ்வுழையிருந்தனணிராமனெனயாணர்ச்
செவ்வுழைநெடுங்கணவள்செப்பிடுதலோடும்
அவ்வுழைங்கழ்ந்ததனையாதியினுடந்தம்
வெவ்விழைவில்சிந்தைநெமொருதிவிரித்தான். (நிஙு)

கேட்டவளுமென்னுடையகேடிறவமின்னே
காட்டியதுவீடெனவிரும்பிநனிகானீர்
ஆட்டியமிழ்தன்னசுவையின்னடிசிலன்போ
டேட்டிமனனுள்குளிரவின்னுரையுரைத்தாள். (நிசு)

மாருதியுமற்றவண்மலர்ச்சரண்வணங்கி
யாரிருக்கிறைவர்யாதுனியற்பேர்
பார்புகழ்தவத்தினபணித்தருளுகென்றான்
சோர்குழலுமற்றையவணுற்றபடிசொன்னாள். (நிஎ)

நூன்முகநுனித்தநெறிநூறுவரநொய்தாய்
மேன்முகநிமிர்த்துவெயில்காலொடுவிழுங்கா
மான்முகமுகத்தவன்மயன்செய்ததவத்தால்
நான்முகனளித்துளதிமாகரநல்லோய். (நிஅ)

அன்னதுதானவனரம்பையருளாங்கோர்
நன்னுதலிணண்முலேயந்தனனநல்லாள்
என்னுயிரனளவனேயானவனிரப்பப்
பொன்னுலகினின்றியல்பிலத்திடைபுணர்த்தேன். (நிகூ)

புணர்ந்தவளுமன்னவனுமன்றில்விழைபோகத்
துணர்த்திலர்நெடும்பகலிம்மாகருறைந்தார்
கணங்குழையினுளொடுயர்காதலொருவாதுற்
றிணங்கிவருபாசமுடையேனுடனிருந்தேன். (கூ0)

இருந்துபலநாள்கழியுமெல்லையினின்வல்லோய்
திருந்திழையைநாடிவருதேவரிறைசீறிப்
பெருந்திறலினனேயுயிருண்டுபிழையென்றம்
முருந்துநிகர்மூரனகையாளையுமுனிந்தான். (கூக)

முனிந்தவனேயுற்றமுறைமுற்றுமொழிகென்னக்
கனிந்தசுவர்வாயவளுமென்னேயிவள்கண்ணுல்
இனிந்தைமுடிவுற்றதெனவண்ணலுமிதெல்லாம்
நினைந்திவணிருத்திநகர்காவனினதென்றன். (சுஉ)

என்றனனிருத்தியிருளாகெறியென்ன
ஒன்றுரையெனக்குமுடிவென்றுரைசெயாமுன்
வன்றிறலவ்வானரமிராமனருள்வந்தால்
அன்றுமுடிவாகுமிடரென்றவனகன்றன். (சுங)

உண்ணவுளபூசவுளசூடவுளவென்றே
வண்ணமணியாடையுளமற்றுமுளபெற்றேன்
அண்ணலவைமுற்றுமறவிட்டதனைவெல்வான்
எண்ணரியபல்பகலிருந்தவமிழைத்தேன். (சுச)

அய்யிருபதோசனையமைந்தபிலமையா
மெய்யுளதுமேலுலகம்வேறுநெறிகூறு
உய்யுநெறியுண்டதவுவீரெனினுபாயம்
செய்யும்வகையுண்டெனினினைத்திரிதென்றுள். (சுடு)

அன்னதுசுயம்பிரபைகூறவதுமானும்
மன்னுபுலன்வென்றுவருமாதவண்மலர்த்தாள்
சென்னியின்வணங்கிநனிவானவர்கள்சேரும்
பொன்னுலகமீகுவனினக்கெனல்புகன்றன். (சுசு)

முழைத்தலையிருட்கடலின்மூழ்கிமுடிவேமைப்
பிழைத்துயிருயிர்க்கவருள்செய்தபெரியோனே
இழைத்தசெயலாயவினையென்றனரிரந்தார்
வழுத்தரியமாருதியுமன்னதுவலிப்பான். (சுஎ)

நடுங்கன்மினெனச்சொலுவின்றுகைகூற
மடங்கலினெழுந்துமறையேறரியவானத்
தொடுங்கலில்பிலத்தலைதிறந்துலகொடொன்ற
நெடுங்கைகள்சுமந்துநெடுவானுறநிமிர்ந்தான். (சுஅ)

எருத்துறுசுடர்ப்புயமிரண்டுமெயிறென்ன
மருத்துமகனிப்படியிடந்துறவளர்ந்தான்
கருத்தனிமிர்கண்ணினெதிர்கண்டவர்கலங்க
உருத்துலகெடுத்தகருமாவினையுமொத்தான். (சுக)

மாவடிவுடைக்கமலநான்முகன்வகுக்கும்
தாவடிவுடைச்சுடர்கொள்விண்டலைதொலைக்கும்
மூவடிகுறித்துமுறையீரடிமுடித்தான்
பூவடிவுடைப்பொருவில்சேவடிபுரைந்தான். (எ0)

ஏழிருபதோசனையிடந்துபடியின்மேல்
ஊழுறவெழுந்ததனையும்பருமொடுங்கப்
பாழிநெடுவன்பிலனுணின்றுபடர்மேல்பால்
ஆழியினெறிந்தனுமன்மேகமெனவார்த்தான். (எக)

இன்றுமுளமேல்கடலியக்கில்பிலதீவா
நின்றுநிலைபெற்றுள துணுதலியோடும்
குன்றுபுரைதோளவரெழுந்துநெறிகொண்டார்
பொன்றிணிவிசும்பினிடைநன்னுதலிபோனுள். (எஉ)

மாருதிவலித்தகைமைபேசிமறவோரும்
பாரிடைநடந்துபகலெல்லைபடரப்போய்
நீருடையபொய்கையெனுநேமியிடைநின்றார்
தேருடைநெடுந்தகையுமேலமலைசென்றான். (எங)

பிலநீங்குபடலம் முற்றிற்று. ஆகத்திருவிருத்தம்-அகசு.

கச-ஆவது. ஆறுசெல்படலம்.

கண்டார்பொய்கைக்கண்ணகனன்னீர்க்கரைகாமுற்
றுண்டார்தேனுமொண்கனிகாயுமொருசூழல்
கொண்டாரன்றேவின்றுயில்குன்றிற்குறியெய்தித்
தண்டார்வென்றித்தானவன்வந்தான்றகைவில்லான். (க)

மலையேபோல்வான்மால்கடலொப்பான்மறமூற்றக்
கொலையேயொப்பான்கூற்றைநிகர்ப்பான்கொடுமைக்கோர்
நிலையேபோல்வானீர்மையிலாதானிமிர்திங்கட்
கலையேபோலுங்காலவெயிற்றுன்கனல்கண்ணுன். (உ)

வேறு. கருவிமாமழைகைகடாவிமீ
துருவமேனிசென்றுலவியொற்றலால்
பொருவின்மாரிமேலொழுகுபொற்பினுல்
அருவிபாய்தருங்குன்றமேயனுன். (ஙு)

வானவர்க்குமற்றவர்வலிக்குநேர்
தானவர்க்குமேயரியதன்மையான்
ஆனபுட்கலனவனெடாடவே
றேனவர்க்குமொன்றெண்ணவொண்ணுமோ. (ச)

பிறங்குபங்கியான்பெயரும்பெட்பினிற்
கறங்குபோன்றுளான்பியையுங்கையினுன்
அறங்கொள்சிந்தையார்நெறிசெலாய்வினுல்
உறங்குவாரைவந்தொல்லையெய்தினுன். (ஞ)

பொய்கையென்னதென் றுணர்ந்தும்புல்லியோர்
எய்திளர்கள்யாரி துவெனுவெனு
அய்யனங்கதனலங்கன் மார்பினிற்
கய்யின்மோதினுன்கால்னேயனுன். (சு)

மற்றிமைந்தனுமுறக்கமாறினுன்
இற்றிவன்கொலாமிலங்கைவேந்தனு
எற்றினுனேநேரெற்றினுனவன்
முற்றினுனிகற்காதிமூர்த்தியான். (எ)

இடியுண்டாங்கணோரோங்கலிற்றதொத்
தடியுண்டான்றளர்ந்தலறிவீழ்தலும்
தொடியின்றேர்ள்விசைத்தெழுந்துசுற்றினுர்
பிடியுண்டாரெனத்தியிலும்பெற்றியார். (அ)

யார்கொலாமிவணிகழ்ந்ததென்னெனுத்
தாரைசேயினைத்தனிவினுயினுன்
மாருதேயன்மற்றவனும்வாய்மைசால்
ஆரியாதெரிந்தறிகிலேனென்றுன். (கூ)

யானிவன்றனைத்தெரியவெண்ணினேன்
தூதிவந்தவேற்றுமிரனென்னும்பே
ரானிவ்வாழ்புனற்பொய்கையாளுமோர்
தானவன்னெனச்சாம்பன்சாற்றினுன். (கo)

வேறுமெய்துவாருளர்கொலாமெனுத்
தேறியின்றுயிற்செலவுதீர்ந்துளார்
வீறுசெஞ்சுடர்க்கடவுள்வேலவாய்
நாறுநாண்மலர்ப்பெண்ணைநாடுவான். (கக)

புண்ணெவெம்முலைப்புளினமேய்தடத்
துண்ணவாம்பலின்னமிழ்தமூறுவாய்
வண்ணவெண்ணைகைத்தரளவாண்முகப்
பெண்ணைநண்ணினர்பெண்ணைநாடுவார். (கஉ)

துறையுந்தோகைகின்றுகுழுலும்
குறையுஞ்சோலையுங்குளிர்ந்தசாரனீர்ச்
சிறையுந்தெள்ளருவிந்தடமுந்தெண்பளிக்
கறையுந்தேடினரறிவின்கோடியார். (கங)

அணிகொழித்துவந்தெவருமாடினர்
பிணிகொழித்தவெம்பிறவிவேரின்வன்
றுணிகொழித்தருஞ்சுழிகடோறுநன்
மணிகொழித்திடுந்துறையின்வைகினர். (கச)

ஆடுபெண்ணைநீராறுமேறினர்
காடுகண்ணினர்மலைகடந்துளார்
வீடுகண்ணினரென்னவீசுநீர்
நாடுகண்ணினர்நாடுகண்ணினர். (கடு)

தசுவப்பெயர்த்தாலசண்பகத்
தசுவப்பிரத்தகனநாடொரீஇ
உசனவப்பெயர்க்கவியுதித்தபேர்
இசைவிதர்ப்பநாடெளிதினெய்தினர். (கசு)

வய்தருப்பமண்டலனில்வந்துபுக்
கெய்தருப்பமத்தனையுமெய்தினர்
மெய்தருப்பைநூல்பிறழுமேனியார்
செய்தவத்துளார்வடிவிற்றேடினர். (கஎ)

அன்னதன்மையாலறிஞர்நாடியச்
செந்நெல்வேலிசூழ்திருநன்னுடொரீஇத்
தன்னையெண்ணுமத்தகைபுகுந்துளார்
துன்னுதண்டகங்கடிதுதுன்னினர். (கஅ)

உண்டகத்துளாருறையுமைம்பொறிக்
கண்டகர்க்கருங்காலனையினர்
தண்டகத்தையுந்தடவியேகினர்
மூண்டகத்துறைகடிதுமுற்றினர். (கக)

அள்ளனீரெலாமமரர்மாதரார்
கொள்ளுமாமுலைக்கலவைகோதையிற்
கள்ளுநாறலிற்கமலவேலிவாழ்
புள்ளுமீனுணுபுலவுதீர்தலால். (உ0)

குஞ்சரங்குடைந்தொழுகுகொட்பதால்
விஞ்சைமன்னர்பால்விரகமங்கைமார்
நஞ்சுவீணையினடத்துபாடலான்
அஞ்சுவார்கணீரருவியாறரோ. (உக)

கமுகவார்நெடுங்கனகவூசலிற்
குமுதவாயினர்குயிலையேசுவார்
சமுகவாளியுந்தனுவும்வாண்முதத்
தமுதபாடலார்மருவியாடுவார். (உஉ)

இனையவாயவொண்டிறையையெய்தினர்
நினையும்வேலைவாய்நெடிதுநேடுவார்
வினையவார்குழற்றிருவைமேவலார்
புனையுநோயினர்கடிதுபோயினர். (உங)

கீண்டமேனியானெடியதாளினின்
றீண்டுகங்கைவந்திழிவதென்னலாய்ப்
பாண்டுவம்மலைபடர்விசும்பீனத்
தீண்டுகின்றதண்சிகரமெய்தினார். (உச)

இருளுறுத்துமீதெழுந்துதெண்ணிலா
மருளுறுத்துவண்சுடர்வழங்கலால்
அருளுறுத்திலாவடலரக்கன்மேல்
உருளுறுத்ததிண்கயிலையொத்ததால். (உடு)

வேறு. விண்ணுறநிவந்தசோதிவெள்ளியங்குன்றமேவிக்
கண்ணுறநோக்கலுற்றார்களியுறக்கனிந்தகாமப்
பண்ணுறுகிளவிச்செவ்வாய்ப்படையுறுநோக்கினாலே
எண்ணுறுதிறத்துங்காணாரிடருறுமனத்தரெய்த்தார். (உசு)

ஊதைபோல்விசையின்வெங்கணழுவைபோல்வயவரோங்கல்
ஆதியையகன்றுசெல்வாரரக்கனல்வஞ்சிப்புண்ட
சீதைபோகின்றுள்கூந்தல்வழிவந்துபுவனஞ்சேர்ந்த
கோதைபோற்கிடந்தகோதாவிரியினைக்குறுகிச்சென்றார். (உஎ)

எழுகின்றகிரியிற்றிகியிழிகின்றமணிநீர்யாறு
தொழுகின்றசனகன்வேள்வி தொடங்கியசுருதிச்சொல்லால்
உழுகின்றபொழுதினின்றவொருமகட்கிரங்கிஞாலம்
அழுகின்றகலுழிமாரியாமெனப்பொலிந்ததன்றே. (உஅ)

ஆசில்பேருலகிற்காண்போரளவைநூலெனலுமாகிக்
காசொடுகனகந்தூவிக்கவினுறக்கிடந்தகான்யா
றேசில்போரரக்கன்மார்பினிடைபறித்தெருவைவேந்தன்
வீசியவடகமீக்கோளீதெனவிளங்கிற்றன்றே. (உக)

அந்நதிமுழுதுநாடியாய்வனமயிலையாண்டும்
சந்நிதியுற்றிலாதார்நெடிதுபின்றவிரச்சென்றார்
இன்னதீதிலாததீதென்றியாவையுமெண்ணுங்கோளார்
சொன்னதீவினைகடீர்க்குஞ்சுவணகத்துறையிற்புக்கார். (ஈ0)

சுரும்பொடுதேனும்வண்டுமென்னமூத்துவன்றிப்புள்ளும்
கரும்பொடுசெந்நெற்காடுங்கமலவாவிகளுமல்கிப்
பெரும்புனன்மருதஞ்சூழ்ந்தகிடக்கைபின்கிடக்கச்சென்றார்
குரும்பைநீர்மூரஞ்சுஞ்சோலைக்குலிந்தமும்புறத்துக்கொண்டார். ()

கொங்கணமேழுநீங்கிக்குடகடற்றரளக்குப்பைச்
சங்கணிபானனெய்தறண்புனறவிரவேகித்
திங்களின்கொழுந்துசுற்றுஞ்சிமயவீள்கோட்டுத்தேவர்
அங்கைகள்கூப்பநின்றவருந்ததிக்கருகரானார். (ஈஉ)

அருந்ததிக்கருகுசென்றுண்டழகினுக்கழகுசெய்தாள்
இருந்ததிக்குணர்ந்திலாதாரேகினரிடையர்மாதர்
பெருந்ததிக்கருந்தேன்மாறுமரகதப்பெருங்குன்றெய்தி
இருந்ததிற்றீர்ந்துசென்றார்வேங்கடத்திறுத்தகாலை. (கூகூ)

மூனைவருமறைவலோருமூன்றைநாட்சிந்தைமூண்ட
வினைவருநெறியைமாற்றுமெய்யுணர்வோரும்விண்ணோர்
எனைவருமமரர்மாதர்யாவருஞ்சித்தரென்போர்
அனைவருமருவிமன்னீர்நாளும்வந்தாடுகின்றார். (கூசு)

வேறு. பெய்தவைம்பொறியும்பெருங்காமமும்
வெய்தவெஞ்சொலின்மங்கையர்வாட்கணின்
எய்தவைம்பெருவாளியினெண்ணறச்
செய்தவம்பலசெய்குநர்தேவரால். (கூடு)

வலங்கொணேமிமழைநிறவானவன்
அலங்குதாளிணைதாங்கியவம்மலை
விலங்கும்வீடுறுகின்றனமெய்ந்நெறிப்
புலன்கொள்வார்கட்கனையதுபொய்க்குமோ. (கூசு)

ஆயகுன்றினையெய்தியருந்தவம்
மேயசெல்வரைமேவினர்மெய்ந்நெறி
நாயகன்றனைநாளும்வணங்கிய
தூயநற்றவர்பாதங்கள்சூடினர். (கூஎ)

சூடியாண்டச்சுரிகுழற்றேகையைத்
தேடிவார்புனற்றெண்டிரைத்தண்டக
நாடுகண்ணுகின்றார்மறைநாவலர்
வேடமேயினர்வேண்டுருமேவுவார். (கூஅ)

குன்றுசூழ்ந்தகடத்தொடுங்கோவலர்
மூன்றில்சூழ்ந்தபடப்பையுமொய்புனல்
சென்றுசூழ்ந்தகிடக்கையுந்தெண்டிரை
மன்றுசூழ்ந்தபரப்புமருங்கெலாம். (கூகூ)

சூலடிப்பலவின்சுளைதூங்குதேன்
கோலடிப்பவெரீஇக்குலமள்ளரோர்ச்
சாலடித்தருஞ்சாலியின்வெண்முளை
தோலடிக்கிளையன்னந்துவைப்பன. (கo)

செருகுறுங்கணிற்றேங்குவளைக்குலம்
அருகுறங்கும்வயன்மருங்காய்ச்சியர்
இருகுறங்குபிறங்கியவாழையில்
குருகுறங்குங்குயிலுந்துயிலுமால். (கக)

தெருவினுர்ப்புறும்பல்லியந்தோமியில்
மருவிமாமழையென்றுகளிப்புறு
பொருநர்தண்ணுமைக்கன்னமும்போகிலா
மருவினுர்க்குமயக்கமுண்டாங்கொலோ. (சஉ)

தேரைவன்றலைத்தெங்கிளம்பாளையை
நாரையென்றிளங்கெண்டைநடுங்குவ
தாரைவன்றலைத்தண்ணிளவாம்பலைச்
சேரையென்றுபுலம்புவதேரையே. (சஙூ)

நள்ளிவாங்குகடையிளநவ்வியர்
வெள்ளிவால்வளைவீசியவெண்மணி
புள்ளிநாரைசினைபொரியாமையென்
றுள்ளியாமைமுதுகினுடைப்பரால். (சச)

சேட்டிளங்கடவெண்சிறுபுன்கையில்
கோட்டதேம்பலவின்கனிக்கூன்சுளை
தோட்டமைந்தபொதும்பரிற்றூங்குதேன்
ஈட்டமென்னச்சென்றீயினமொய்ப்பன. (சடு)

செல்வரென்றும்வடகலைதென்றமிழ்ச்
சொல்வரம்பினரென்றுஞ்சுளிபடக்
கொல்வரென்றுங்கொடுப்பனரென்றுமவ்
வில்வரம்பிலிறைவனேயேத்துவார். (சசு)

அன்னதண்டகநாடெடுத்தகன்
பொன்னிநாடுபொருவிலரெய்தினுர்
செந்நெலுங்கரும்புங்கமுகுஞ்செறிந்
தின்னல்செய்யுநெறியரிதேகுவார். (சஎ)

கொடுறுதாங்கியவாய்க்குழுஉர்வாழ்
தடறுதாங்கியகூனிளந்தாழையின்
மிடறுதாங்கும்விருப்புடைத்தீங்கனி
இடறுவார்நறுந்தேனினிழுக்குவார். (சஅ)

குழுவுமீன்வளர்குட்டமெனக்கொளா
எழுவுபாடலிமிழ்கருப்பேந்திரத்
தொழுகுசாறகன்கூனியினுழ்முறை
முழுகிநீர்க்கருங்காக்கைமுளைக்குமே. (சக)

பூநெருங்கியபுள்ளுறுசோலைகள்
தேனெருங்குசொரிதலிற்றேர்வில
மீனெருங்குறும்வெள்ளம்வெரீஇப்பல
வானரங்கண்மரங்களின்வைகுமால். (நிo)

அனையபொன்னியகன்புனலுடோழி
மனையின்மாட்சிகுலாமலைமண்டலம்
வினையினீங்கியபண்பினர்மேயினர்
இனையதென்றமிழ்நாடுசென்றெய்தினர். (நக)

அத்திருத்தகுநாட்டினையண்டர்நா
டொத்திருக்குமென்றுலுரையொக்குமோ
எத்திறத்தினுமேழுலகும்புகழ்
முத்துமுத்தமிழுந்தந்துமுற்றுமோ. (நஉ)

என்றதென்றமிழ்நாட்டினையெங்கணும்
சென்றுநாடித்திரிந்துதிருந்தினர்
பொன்றுவாரிற்பொருந்தினர்போயினர்
துன்றலோதியைக்கண்டிலர்துன்பினர். (நங)

வன்றிசைக்களிறன்னமகேந்திரக்
குன்றிசைத்தகுவல்லியிற்கூடினர்
தென்றிசைக்கடற்சீகரமாருதம்
நின்றிசைக்குநெடுநெறிநீங்கினர். (நச)

ஆறுசெல்படலம் முற்றிற்று. ஆக திருவிருத்தம்-கடுக.

கரு-ஆவது. சம்பாதிப்படலம்.

மழைத்தவிண்ணகமெனமுழங்கிவானுற
விழைத்தவெண்டிரைக்கரமெடுத்திலங்கையாள்
உழைத்தடங்கண்ணியென்றுரைத்திட்டேழின்வந்
தழைப்பதேகடுக்குமவ்வாழிநோக்கினர். (க)

விரிந்துநீரெண்டிசைமேவிமேன்மையால்
பொருந்துதிர்மகேந்திரத்தென்றுபோக்கிய
அருந்துணைக்கவிகளாமளவில்சேனையும்
பெருந்திரைக்கடலெனப்பெரிதுகூடிற்றே. (உ)

யாவருமவ்வயினெளிதினெய்தினர்
பூவருபொலங்குழற்பொருவில்கற்புடைத்
தேவியைக்காண்கிலார்செய்வதோர்கிலார்
நாவியல்குழறிடநவில்கின்றுரரோ. (ங)

அற்றதுநாள்வரையவதியாட்சியும்
உற்றிலமிராகவனுயிரும்பொன்றுமால்
கொற்றவனுணையுங்குறித்துநின்றனம்
இற்றதுநஞ்செயலினியென்றெண்ணினர். (ச)

அருந்தவம்புரிதுமோவன்னதன்றெனின்
மருந்தருமெடுங்கடவுண்டுமாய்துமோ
திருந்தியதியாததுசெய்துதீர்துமென்
றிருந்தனர்தம்முயிர்க்கிறுதியெண்ணுவார். (இ)

கரைபொருகடல்கனகமால்வரை
நிரைதுவன்றியவெனநெடிதிருந்தவர்க்
குரைசெயும்பொருளுளதெனவுணர்த்தினன்
அரைசிளங்கோளரியயருஞ்சிந்தையான். (ஈ)

நாடிநாங்கொணருதுணினத்தானிவான்
மூடியவுலகினைமுற்றுமூட்டியென்
றூடவர்திலகனுக்கன்பினெனப்
பாடவம்விளம்பினம்பழியின்மூழ்குவான். (எ)

செய்துமென்றமைந்ததுசெய்துதீர்ந்திலம்
நொய்துசென்றுற்றதுதுவலகிற்றிலம்
எய்தும்வந்தென்பதோரிறையுங்கண்டிலம்
உய்துமென்றுலிதோருரிமைத்தாகுமோ. (அ)

எந்தையுமுனியுமெம்மிறையிராமனும்
சிந்தனைவருந்துமச்செய்கைகாண்குறேம்
நுந்துவெனுயிரினை நுணங்குகேள்வியீர்
புந்தியினன்னதுபுகல்விராமென்றான். (கூ)

விழுமிய துரைத்தனைவிசயம்வீற்றிருந்
தெழுவொடுமெலியொடுமிகலுந்தோளினாய்
அழுதுமோவிருந்துநம்மன்புபாழ்படத்
தொழுதுமோசென்றெனச்சாம்பன்சொல்லினான். (கூ0)

மீண்டினியொன்றுநாம்விளம்பமிக்கதென்
மாண்டுறுவதுநலமெனவலித்தனம்
ஆண்டகையரசிளங்குமரவன்னது
வேண்டலினின்னுயிர்க்குறுதிவேண்டுமால். (கூக)

என்றவனுரைத்தலுமிருந்தவாலிசேய்
குன்றுறழ்ந்தெனவளர்குவவுத்தோளினீர்
பொன்றினீர்மடியயான்போவனேலது
நன்றதோவுலகமுநயக்கற்பாலதோ. (கூஉ)

சான்றவர்பழியுரைக்கஞ்சித்தன்னுயிர்
போன்றவர்மடிதரப்போந்துளானென
ஆன்றபேருலகுளோரறைதன்மூன்னம்யான்
வான்றொடர்குவெனெனமறித்துங்கூறுவான். (கூஊ)

வேறு. எல்லாம்மி றுதியாய்க்குமெந்தைக்கும்யாவரேனும்
சொல்லவுங்கூடுங்கேட்டாற்றுஞ்சவுமடக்குங்கண்ட
வில்லியுமிளையகோவும்வீவதுதிண்ணமச்சொல்
மல்லனீரயோத்திபுக்கால்வாழ்வரோபரதன்மற்றூர். (கச)

பரதனும்பின்னுளோனும்பயந்தெடுத்தவருமூரும்
சரதமேமுடிவர்கெட்டேன்சனகியென்றுலகஞ்சாற்றும்
விரதமாதவத்தின்மிக்கவிளக்கினுலகத்தியார்க்கும்
கரைதெரிவிலாததுன்பம்வினைந்தவாவெனக்கலுழ்ந்தான். (கடு)

பொருப்புறழ்வயிரத்திண்டோட்பொருசினத்தாளிபோல்வான்
தரிப்பிலாதுரைத்தமாற்றந்தடுப்பருந்தகைத்ததாய
நெருப்பையேவினைத்தபோலநெஞ்சமுமறுகக்கேட்டு
விருப்பினுலவனோக்கிவிளம்பினனெண்கின்வேந்தன். (கசு)

வேறு. நீயுகின்றுதையுநீங்களின்குலத்
தாயம்வந்தவொடுந்தனயரில்லையால்
ஆயதகருதினமன்னதன்றெனின்
நாயகரிறுதியுமிலற்பாலதே. (கஎ)

ஏகுமீவ்வழியெய்தியிவ்வழி
தோகையைக்கண்டிலாவகையுஞ்சொல்லியென்
சாகையுமுணர்த்துதிதவிர்திசோகம்போர்
வாகையாயென்றனன்வரம்பிலாற்றலான். (கஅ)

அவனவையுரைத்தபின்னுமன்சொல்லுவான்
புவனமூன்றினுமொருபுடையிற்புக்கிலம்
தவனமாண்டவரெனத்தருக்கிலாரெனக்
கவனவேகத்துநீர்கழிதிரோவென்றான். (கக)

பின்னருங்கூறுவான்பிலத்தில்வானத்தில்
பொன்வரைக்குமியிற்புறத்துளண்டத்தில்
நன்னுதற்றேவியைக்காண்டுமெனின்
சொன்னகாலவதியையிறைவன்சொல்லுமோ. (உ0)

நாடுதலேகலமென்னுநாடியத்
தோடலர்குழலிதன்றுயரிற்சென்றமர்
வீடியசடாயுவைப்போலவீதல்
பாடுவமல்லதுபழியிற்றுமென்றான். (உக)

என்றலுங்கேட்டனனெருவைவேந்தன்றன்
பின்றுணையாகியபிழைப்பில்வாய்மையான்
பொன்றினனென்றசொற்புலம்புநெஞ்சினன்
குன்றெனநடந்தவர்க்குறுகன்மேயினான். (உஉ)

மூறையுடையெம்பியார்மூடிந்தவாறெனுப்
பறையிடுநெஞ்சினன்பதைக்குமேனியன்
இறையுடைக்குலிசவேலெறிகலாதமுன்
சிறையுடைமலையெனச்செல்லுஞ்செய்கையான். (உக)

மிடலுடையெம்பியைவீட்டும்வெஞ்சரம்
படருளராயினர்போலும்பாரெனு
உடலினைவழிந்துபோயுவரிநீருகக்
கடலினைப்புரையுறுமருவிக்கண்ணினன். (உச)

உழுங்கதிர்மணியணியுமிழுமின்னினன்
மழுங்கியநெடுங்கணின்வழங்குமாரியான்
புழுங்குவானழுங்கினன்புடவியாரென
முழங்கிவந்திழிவதோர்முகிலும்போல்கின்றான். (உடு)

வள்ளியுமரங்களுமலையுமண்ணுறத்
தெள்ளுநுண்பொடிபடக்கடிதுசெல்கின்றான்
தள்ளுவன்கால்பொரத்தரணியிற்றனி
வெள்ளியம்பெருமலைபொருவுமேனியான். (உசு)

எய்தினனிருந்தவரிரியல்போயினர்
அய்யனம்மாருயிழலுங்கண்ணினன்
கய்தவநிசிசரக்கள்ளவேடத்தை
உய்திகொலினியெனவுருத்துமுன்னின்றான். (உஎ)

வெங்கதம்வீசியமனத்தன்விம்மலன்
பொங்கியசோரிநீர்பொழியுங்கண்ணினன்
சங்கையிற்சழக்கிலனென்னுந்தன்மையை
இங்கிதவகையினலெய்தநோக்கினன். (உஅ)

நோக்கினனின்றனனுணங்குகேள்வியான்
வாக்கினலொருமொழிவழங்கலாதமுன்
தாக்கருஞ்சடாயுவைத்தருக்கினலுயிர்
நீக்கினர்யாரதுநிரப்புவீரென்றான். (உக)

உன்னைநீயுள்ளவாறுரைப்பினுற்றதைப்
பின்னையானிரப்புதல்பிழைப்பின்றுதலால்
என்னமாருதியெதிரெருவைவேந்தனும்
தன்னையாந்தன்மையைச்சாற்றன்மேயினன். (கூ0)

மின்பிறந்தாலெனவிளங்கெயிற்றினன்
என்பிறந்தார்க்கிடையெய்தலாதவென்
பின்பிறந்தான்றுணைபிரிந்தபேதையேன்
முன்பிறந்தேனெனமுடியக்கூறினன். (கூக)

கூறியவாசகங்கேட்டக்கோதிலான்
ஊறியதுன்பத்தினுவரியுட்புகா
ஏறினனுணர்த்தினனிகலிராவணன்
வீறியவாளிடைவீழ்ந்ததாமென்றான். (கூஉ)

அவ்வுரைகேட்டலுமசனியேற்றினுல்
தவ்வியகிரியெனத்தரையின்வீழ்ந்தனன்
வெவ்வுயிராவுயிர்பதைப்பவிம்மினான்
இவ்வுரையிவ்வுரையெடுத்தியம்பினான். (கூக)

வேறு. இளையாநின்சிறகின்றிவெந்துகத்
தளையானேனுயிர்போதறக்கதோ
வளையாநேமியன்வன்மைசால்வலிக்
கிளையானேயிதுவென்னமாயமோ. (கூச)

மலரோனின்றுளன்மண்ணும்விண்ணுமுண்
டுலையாநீடறமின்னுமுண்டரோ
நிலையார்க்கற்பமுநின்றதின்றுநீ
இலையானுயிதுவென்னதன்மையோ. (கூடு)

உடனேயண்டமிரண்டுமூந்துயிர்த்
திடநாள்வந்திருவோருமெய்தியான்
விடநீயேதனிச்சென்றவீரமும்
கடனேவெங்கலுழற்குமென்மையோய். (கூள)

ஒன்றுமூன்றுலகத்துளோரையும்
வென்றுனென்னினும்வீரநிற்குநேர்
நின்றுனேயவ்வரக்கனின்னையும்
கொன்றுனேயிதுவென்னகொள்கையோ. (கூஎ)

என்றென்றேங்கியிரங்கியின்னலால்
பொன்றுந்தன்மைபுகுந்தபோதவற்
கொன்றுஞ்சொற்கொடுணர்ச்சிகல்கினன்
வன்றிண்டோள்வரையன்னமாருதி. (கூஅ)

தேற்றத்தேறியிருந்தசெங்கணுன்
கூற்றெருப்பான்கொலைவாளரக்கனை
டேற்றுப்போர்செய்ததென்னிமித்தனைக்
காற்றின்சேயிதுகட்டுரைக்குமால். (கூக)

எங்கோமானவ்விராமனில்லுளாள்
செங்கோலான்மகள்சீதைசெவ்வியாள்
வெங்கோல்வஞ்சன்வினைத்தமாயையால்
தங்கோனைப்பிரிவற்றதன்மையாள். (சஅ)

கொண்டேகுங்கொலைவாளரக்கனைக்
கண்டானும்பியறங்கடக்கிலான்
வண்டார்கோதையைவைத்துநீங்கெனத்
தெண்டேராதெனதிர்ந்தைசீறினான். (சக)

சீறித்தீயவனேறுதேரையும்
கீறித்தோள்கள் கிழித்தழித்தபின்
தேறித்தேவர்கடேவன்றெய்வவாள்
வீறப்பொன்றினன்மெய்ம்மையோவென்றான். (சஉ)

விளித்தானன்னதுகேட்டுமெய்ம்மையோய்
தெளித்தாடத்தகுதீர்த்தன்மாட்டியிர்
அளித்தானேயதுநன்றுநன்றெனக்
களித்தான்வாரிகலுழ்ந்தகண்ணினான். (சங)

பைந்தாரெங்களிராமன்பத்தினி
செந்தாள்வஞ்சிதிறத்திறந்தவன்
மய்ந்தாவெம்பிவரம்பில்சீர்த்தியோ
யெய்தானல்லதுலந்ததுண்மையோ. (சச)

அறமன்னுடனெம்பியன்பினே
றெவன்னுவுயிரொன்றவோவினான்
பெறவொண்ணுததோர்பெற்றிபெற்றவற்
றிறவென்னுமிதினின்பம்யாவதோ. (சஙி)

என்றென்றேங்கியிரங்கியின்புனற்
சென்றங்காடுதல்செய்துதீர்ந்தபின்
வன்றிண்டோள்வலிமாறிலாதவன்
துன்றுந்தாரவர்க்கின்னசொல்லினான். (சஎ)

வாழ்வித்தீரெனைமந்தர்வந்துநீர்
ஆழ்வித்தீரலிர்தன்பவாழிவாய்
கேள்வித்தீவினைகீறினீரிருள்
போழ்வித்தீருரைபொய்யினீங்கினீர். (சஅ)

எல்லீரும்மவ்விராமராமமே
சொல்லீரென்சிறைதோன்றுஞ்சோர்விலா
நல்லீரப்பயணண்ணுநல்லசொல்
வல்லீர்வாய்மைவளர்க்குமாண்பினீர். (சஆ)

என்றனன்னதுகாண்டெய்யாமெனு
நின்றுர்நின்றுழிநீலமேனியான்
நன்றுராமரவின்றுநல்கினூர்
வன்றேளான்சிறைவானந்தாயவே. (சக)

சிறைபெற்றுன்றிகழ்கின்றமேனியான்
முறைபெற்றுமுலகெங்குமூடினுன்
நிறைபெற்றுவிருப்புயிர்க்கும்வாள்
உறைபெற்றுலெனலாமுறுப்பினுன். (நிம)

தெருண்டான்மெய்ப்பெயர்செப்பலோடும்வந்
திருண்டானுற்றபலத்தையுன்னினுர்
மருண்டார்வானவர்கோனைவாழ்த்தினுர்
வெருண்டார்சிந்தைவியந்துவிம்முவார். (நிக)

அன்னுனைக்கடிதஞ்சலித்துநீ
முன்னுளுற்றதுமுற்றுமோதெனச்
சொன்னுர்சொற்றதுசிந்தைதோய்வுறத்
தன்னுலுற்றதுதான்விளம்புவான். (நிஉ)

வேறு. தாயெனத்தகையகண்பீர்சம்பாதிசடாயுவென்போஞ்
சேயொளிச்சிறையவேகக்கழுகினுக்கரசுசெய்வோம்
பாய்திரைப்பரவைஞாலம்படரிருள்பருகும்பண்பின்
ஆய்கதிர்க்கடவுட்டேரூரருணனுக்கமைந்தமைந்தர். (நிங)

ஆயுயரும்பர்நாடுகாண்டுமென்றறிவுதள்ளி
மீயுயர்விசும்பினூடுமேக்குறச்செல்லும்வேலை
காய்கதிர்க்கடவுட்டேரைக்கண்ணுற்றுங்கண்ணுருமுன்
தீயையுந்தீக்குந்தெய்வச்செங்கதிர்ச்செல்வன்சீறி. (நிச)

மூந்தியவெம்பிமேனிமுருங்கழன்முடுகும்வேலை
எந்தைநீகாத்தியென்றுன்யானிருஞ்சிறையுமேன்றி
வந்தனென்மறைதலோடுமற்றவன்மறையப்போனுன்
வெந்துமெய்யிறகுதீந்துவிழுந்தனென்விளிகிலாதேன். (நிஞ)

மண்ணிடைவிழுந்தவென்னைவானிடைவயங்குவள்ளல்
கண்ணிடைநோக்கியுற்றகருணையான்சனகன்காதற்
பெண்ணிடையீட்டின்வந்தவானரரிராமன்பேரை
எண்ணிடையுற்றகாலத்திறகுபெற்றெழுதியென்றுன். (நிசு)

தாழ்ந்தமாதவத்திலோகசாரங்கனுறையுஞ்சாரல்
வீழ்ந்தனென்சிறைகடீயவெவ்வுயிர்த்துளமுமெய்யும்
போழ்ந்தனதுன்பமூன்றவுயிர்ப்பொறைபோற்றகில்லா
தாழ்ந்தனெனுழ்ந்தவென்னையருந்தவனெதிர்ந்துதேற்றி. (நிள)

கற்றிலார்போலவுள்ளக்களிப்பினுலமர்காப்பூ
டுற்றிடக்கருதிமீப்போயாதபத்தினதுமேனி
மூற்றழன்முருங்கமண்ணைமுயங்கினையினியென்சின்னுள்
மற்றுனின்னுயிரையோம்பாதிகழ்வதுமாலத்தன்றுல். (நிஅ)

களித்தவர்கெடுதறிண்ணஞ்சனகையைக்கபடன்வெளவி
ஒளித்தவாய்தருவியுற்றவானரரிராமநாமம்
விளித்திடச்சிறைவந்தோங்கும்வெவ்வுயிர்த்தயரலென்றன்
றளரித்தனனதனுலாவியாற்றினேனுற்றன்மொய்ம்பீர். (நிகு)

எம்பியுமிடரின்வீழ்வானேயதுமறுக்கவஞ்சி
அம்பரத்தியங்குமானைக்கழுகினுக்கரசனுனன்
நம்பிமீரிதென்றன்மைநீரிவணடந்தவார்த்தை
உம்பருமுவக்கத்தக்கீருணர்த்துமினுணரவென்றான். (சுக)

என்றனுமிராமன்றன்னையேத்தினரிறைஞ்சியெந்தாய்
புன்றொழிலரக்கன்மற்றைத்தேவியைக்கொண்டுபோந்தான்
தென்றிசையென்னவுன்னித்தேடினாம்வந்துமென்றார்
நன்றுநீர்வருந்தல்வேண்டாநானிதுவில்லவென்றான். சுஎ)

பாகொன்றுகுதலையாளைப்பாதகவரக்கன்பற்றிப்
போகின்றபொழுதுங்கண்டேன்புக்கனனிலங்கைபுக்கு
வேகின்றவுள்ளத்தாலேவெஞ்சிறையகத்துவைத்தான்
ஏகொன்றிற்காண்டிரந்திலிருந்தனளிறைவியின்னும். (சுஉ)

யோசனையொருநூறுண்டாலொலிகடலிலங்கையவ்வூர்
பாசவெங்கரத்துங்கூற்றுங்கட்புலன்பரப்பவஞ்சும்
நீசனவ்வரக்கன்சீற்றநெருப்புக்குநெருப்புநீங்கள்
ஏசறுங்குணத்தீர்சேறலெப்பரிசியைவதென்றான். (சுஙு)

நான்முகத்தொருவன்மற்றைநாரியோர்பாகத்தண்ணல்
பான்முகப்பரவைப்பள்ளிப்பாம்பணைபரனென்றாலும்
காலனுக்கேயுஞ்சேறலரிதுகடலின்றன்மை
மேலுமக்குறுவதெண்ணிச்செல்லுமின்விளிவிலுளீர். (சுச)

எல்லீருஞ்சேறலென்பதெளிதன்றவ்விலங்கைமூதூர்
வல்லீரேலொருவரேகிமறைந்தவணுழுகிவாய்மை
சொல்லீரேதயரைநீக்கித்தோகையைத்தெருட்டிமீடிர்
அல்லீரேலென்சொற்றேறியுணர்த்துமினழகற்கம்மா. (சுருி)

காக்குநரின்மையாலக்கழுகினமுழுதுங்கன்றிச்
சேக்கைவிட்டிரியல்போகித்திரிதருமதனைத்தீர்ப்பான்
போக்கெனக்கடுத்தகண்பீர்நல்லதுபுரிமினென்னு
மேக்குறவிசையிற்சென்றுன்சிறையிலுல்விசும்புபோர்ப்பான். (சுசு)

சம்பாதிப்படலம் முற்றிற்று. ஆடி திருவிருத்தம் - கoகசு.

கரு - வது. மகேந்திரப்படலம்.

பொய்யுரைசெய்யான்புள்ளரசென்றேபுகலுற்றார்
கய்யுறைநெல்லித்தன்மையினெல்லாங்கரைகண்டாம்
உய்யுரைபெற்றுநல்லவையெல்லாமுறவெண்ணிச்
செய்யுமினென்றேசெய்வகைநொய்திற்செயவல்லீர். (க)

சூரியன்வெற்றிக்காதலனெடுஞ்சுடர்விற்கை
ஆரியனைச்சென்றேதொழுதுற்றதறைகிற்பீர்
சீருதன்மூற்றுந்தேருதல்கொற்றச்செயலம்மா
வாரிகடப்போர்யாவரெனத்தம்வலிசொல்வார். (உ)

மாளவலித்தேமென்றுமிமாளாவசையோடு
மீளவுமுற்றேமன்னவதீரும்வெளிபெற்றேம்
காளநிறத்தோடொப்பனவிந்நேர்கடறுவற்
றூளநலத்தீராளுமினெம்மாருயிரம்மா. (ஊ)

நீலன்முதற்பேர்போர்கெழுகொற்றநெடுவீரர்
சாலவுரைத்தார்வாரிகடக்குந்தகவின்மை
வேலகடப்பன்மீளமிடுக்கின்றெனவிட்டான்
வாலியளிக்கும்வீரவயப்போர்வசையில்லான். (எ)

வேதமனைத்துந்தேர்தரவெட்டாவொருமெய்யன்
பூதலமுற்றுமீரடிவைத்துப்பொலிபோழ்தியான்
மாதிரமெட்டுஞ்சூழ்பறைவைத்தேவரமேரு
மோதவினைத்தேதாளுலவுற்றேன்விறன்மொய்ம்பீர். (ஏ)

ஆதலினிப்பேரார்கலிகுப்புற்றகழிஞ்சி
மீதுகடத்தித்தீயவருட்கும்வினையோடும்
சீதைதனைத்தேராவரமுற்றுந்திறனின்றென்
றேதியிறுத்தானுலுமுகத்தானுதவற்றான். (ஐ)

யாமினியிப்போதாரிடர்துய்த்திங்கினியாரைப்
போமெனவைப்பேமென்பதுபுன்மைப்புகழன்றே
கோமுதல்வர்க்கேறுகியகொற்றக்குமராநம்
நாமநிறுத்திப்பேரிசைதைக்குநவையில்லோன். (ஒ)

ஆரியன்முன்னர்ப்போதிறவுற்றவதனனும்
காரியமெண்ணிச்சோர்வறமுற்றுங்கடனனும்
மாருதியொப்பார்வேறிலையென்னுவயன்மைந்தன்
சீரியன்மற்றேளாண்மைதெரிப்பானிவைசெப்பும். (ஓ)

மேலவிரிஞ்சன்வீயினும்வீயாமிகைநாளீர்
நூலநயந்துநுண்ணிதுணர்ந்தீர்துவறக்கீர்
காலனுமஞ்சுங்காய்சினமொய்ம்பீர்கடனின்றீர்
ஆலதுகர்ந்தானன்னவயப்போர்டர்கிற்பீர். (கு)

வெப்புறுசெந்தீநீர்வளியாலும்வினியாதீர்
செப்புறுதெய்வப்பல்படையாலுஞ்சிதையாதீர்
ஒப்புறினெப்பார்நும்மலதில்லீரொருகாலே
குப்புறினண்டத்தப்புறமேயுங்குதிகொள்வீர். (கo)

நல்லவுமொன்றேதீயவுநாடிநவைதீரச்
சொல்லவும்வல்லீர்காரியநீரே துணிவுற்றீர்
வெல்லவும்வல்லீர்மீளவும்வல்லீர்மிடலுண்டேல்
கொல்லவும்வல்லீர்தோள்வலியென்றுங்குறையாதீர். (கக)

மேருகிரிக்குமீதுறநிற்கும்பெருமெய்யீர்
மாரிதுளிக்குந்தாரையிடிக்கும்வரவல்லீர்
பாரையெடுக்குநோன்மைவலத்தீர்பழியற்றீர்
சூரியனேச்சென்றெண்டையகத்தங்தொடவல்லீர். (கஉ)

அறிந்துதிறத்தாறெண்ணியறத்தாறழியாமை
மறிந்தருளப்போர்வாலியையெல்லுமதிவல்லீர்
பொறிந்திமையாக்கோன்வச்சிரபாணம்புகமூழ்க
எறிந்துழிமற்றேர்புன்மயிரேனுமிழவாதீர். (கங)

போர்முனைதிர்ந்தான்மூவுலகேனும்பொருளாகா
ஓர்வில்வலங்கொண்டொல்கலில்வீரத்துயர்தோளீர்
பாரலகெங்கும்பேரிருள்சீக்கும்பகலோன்முன்
தேர்முனடக்தேயாரியநூலுந்தெரிவுற்றீர். (கச)

நீதியினின்றீர்வாய்மையமைந்தீர்நினைவானும்
மாதர்நலம்பேணுதுவளர்ந்தீர்மறையெல்லாம்
ஓதியுணர்ந்தீரூழிகடந்தீருலகீனும்
ஆதியயன்றனேயெனயாதுமறைகின்றீர். (கடு)

அண்ணலமைந்தற்கன்புசிறந்தீரதனனே
கண்ணீயுணர்ந்தீர்கருமநுமக்கேகடனென்னத்
திண்ணிதமைந்தீர்செய்துமுடிப்பீர்சிதைவின்றுல்
புண்ணியமொன்றேயென்றுலகுக்கும்பொருள்கொண்டீர். ()

அடங்கவும்வல்லீர்காலமதன்றேலமர்வந்தால்
மடங்கன்முனிந்தாலன்னவலத்தீர்மதிகாடித்
தொடங்கியதொன்றேமுற்றுமுடிக்குந்தொழிலல்லால்
இடங்கெடவெவ்வாயூறுகிடைத்தாலிடையாதீர். (கள)

ஈண்டியகொற்றத்திந்திரனென்பான்முதல்யாரும்
பூண்டுநடக்குநன்னெறிசாபப்பொறையானும்
பாண்டியனீரேயஃதினியுய்க்கும்படிவல்லீர்
வேண்டியபோதேவேண்டியதுய்க்கும்வினைவல்லீர். (கஅ)

ஏகுமினேகியெம்முயிர்நல்கியிசைகொள்ளீர்
ஓகைகொணர்ந்தும்மன்னையுமின்னற்குறையில்லாச்
சாகரமூற்றுந்தாவிடுநீரிக்கடரூவும்
வேகமைமந்தீரென்றுவிரிஞ்சன்மகன்விட்டான். (கக)

சாம்பனியம்பத்தாழ்வதனத்தாமரைநாப்பண்
ஆம்பல்விரிந்தாலன்னசிரிப்பானறிவாளன்
கூம்பலொடுஞ்சேர்கைக்கமலத்தன்குலமெல்லாம்
ஏம்பல்வரத்தன்சிந்தைதெரிப்பானிவைசொன்னான். (உ0)

வேறு இலங்கையையிடந்துவேரோடிவ்வயிற்றருகென்றும்
விலங்கினர்தம்மையெல்லாம்வேரொடும்விளியநூறிப்
பொலன்குழைமயிலைக்கொண்டுபோதெனப்புகன்றிட்டாலும்
கலங்கலீருரைத்தமாற்றமுடிக்குவல்கடிதுகாண்டிர். (உக)

யோசனையொன்றுநூறுமுள்ளடியுள்ளதாக
ஈசன்மண்ணளந்தநேய்ப்பவிருங்கடலினிதுதாவி
வாசவன்முதலோர்வந்துமலையினுமிலங்கைவாழும்
நீசரையெல்லாநூறிநினைத்தமுடிப்பல்பின்னும். (உஉ)

நீயிரேநினையின்முன்னேநெடுந்திரைப்பரவையேழும்
தாயுலகினைத்தும்வென்றுதையலைத்தருதற்கொத்தீர்
போயிதுபுரிதியென்றுபுலமைதீர்புன்மைகாண்டற்
கேயினிரென்னிலென்னிற்பிறந்தவர்யாவரின்னும். (உங)

முற்றுநீருலகமுற்றும்விழுங்குவான்முழங்கிமுந்நீர்
உற்றதேயெனினுமண்டமுடைந்துபோயுயர்ந்ததேனும்
இற்றைநும்மருளுமெங்கோனேவலுமிரண்டொலும்
கற்றைவார்சிறைகளாகக்கலுழனிற்கடப்பல்காண்டிர். (உச)

ஈண்டினிதுறைமின்யானேயெறிகடலிலங்கையெய்தி
மீண்டிவண்வருதல்காறும்விடைதம்மின்விரைவினென்னை
ஆண்டவருவந்துவாழ்த்தவலர்மழையமரர்தூவச்
சேண்டொடர்சிமயத்தெய்வமகேந்திரத்தும்பர்சென்றான் (உடு)

பொருவருவேலைதாவும்புந்தியான்புவனந்தாய
பெருவடிவுயர்ந்தமாயோன்மேக்குறப்பெயர்ந்ததாள்போல்
உருவறிவடிவினும்பரோங்கினனுவமையாலும்
திருவடியென்னுந்தன்மையாவர்க்குந்தெரியநின்றான். (உசு)

பார்நிழல்பரப்பும்பொற்றேர்வெயிற்கதிர்ப்பரிதிமைந்தன்
போர்நிழல்பரப்புமேலோர்புகழெனவுலகம்புக்குத்
தார்நிழல்பரப்புந்தோளான்றடங்கடருவாமுன்னம்
நீர்நிழலுவரிதாவியிலங்கைமேற்செல்லநின்றான். (உஎ)

பகுவாயமடங்கல்வைகும்படர்வரைமுழுதுமூழ்க
உகுவாயவிடங்கொணகத்தொத்தவால்சுற்றியூழின்
நெகுவாயசிகரகோடிநெரிவனதெரியநின்றான்
மகவாமைமுதுகிற்றேன்றுமந்தரமெனலுமானான். (உஅ)

மின்னெடுங்கொண்டருளின்வீக்கியகழலினூர்ப்பத்
தன்னெடுந்தோற்றம்வானோர்கட்புலத்தெல்லாதாவ
வன்னெடுஞ்சிகரகோடிமகேந்திரமண்டந்தாங்கும்
பொன்னெடுந்தூணின்பாதசிலையெனப்பொலிந்துநின்றான். (உக)

மகேந்திரப்படலம் முற்றிற்று. ஆ திருவிருத்தம் - கஅசு.

கிட்கிந்தாகாண்டம் முற்றிற்று.

அட்டவணை.

	பக்கம்.	பாயிரச் செய்கை.
க - ஆவது பம்பைப்படலம்	க	சஉ
உ - ஆவது அநுமப்படலம்	சு	ஙஅ
ங - ஆவது நட்புக்கோட்படலம்	கo	அடு
ச - ஆவது மராமரப்படலம்	உo	உக
டு - ஆவது துந்துபிப்படலம்	உஉ	கடு
சு - ஆவது கலன்காண்படலம்	உச	சஉ
எ - ஆவது வாலிவதைப்படவம்	உக	கடுஉ
அ - ஆவது அரசியற்படலம்	சசு	டுச
கூ - ஆவது கார்காலப்படலம்	டுஉ	கஉo
கo - ஆவது கிட்கிந்தைப்படலம்	சடு	கசo
கக - ஆவது தானைகாண்படலம்	அக	ஙக
கஉ - ஆவது நாடவிட்டபடலம்	அடு	எச
கங - ஆவது பிலநீங்குபடலம்	கூச	எங
கச - ஆவது ஆறுசெல்படலம்	கoஉ	டுச
கடு - ஆவது சம்பாதிப்படலம்	கoஅ	சுசு
ககசு - ஆவது மகேந்திரப்படலம்	ககசு	உக

ஆக படலம் ககசு-இ திருவிருத்தம், கoசடு.

விளம்பரம்.

கீழ்க்கண்ட புத்தகங்கள் சென்னை பெத்துநாயக்கன்பேட்டை அண்ணப் பிள்ளைவீதி சுஎ - வது நம்பர் வீட்டில் ம - ரா - ரா - ஸ்ரீ, சி. த. சுப்பிரமணிய பண்டிதர் குமாரர் சி. த. முத்தையபிள்ளை அவர்களிடத்தில் கிடைக்கும்.

பதிப்பித்திருக்கும் புத்தகங்கள்.

	விலை.	ரூபா.	
தெலுங்கு ஜீவரக்ஷாமிர்தம்			எ.
தமிழ் ஜீவரக்ஷாமிர்தம்		,,	இஉ.
பதார்த்தகுணசிந்தாமணி மூலமும் உரையும்		,,	உஉ.
தைலவருக்கச்சுருக்கம் மூலமும் உரையும்		,,	கஉ.
சாரீர சூத்திரம்		,,	கஉ.
நீர்க்குறி-நெய்க்குறிச்சாஸ்திரம் மூலமும் உரையும்		,,	ஒ.
சீகாழித்தலபுராணம்		,,	க.
ஸ்ரீமத் கம்பராமாயண, பாலகாண்டம்		,,	க.
,, அயோத்தியாகாண்டம்		,,	க.
,, ஆரணியாகாண்டம்		,,	க.
,, கிட்கிந்தாகாண்டம்		,,	க.
,, சுந்தரகாண்டம்		,,	க.
,, உயுத்தகாண்டம்		,,	உ.
ஒட்டக்கூத்தர் பாடிய ஸ்ரீமத் இராமாயண, உத்தரகாண்டம்			க.
திருமுருகாற்றுப்படை மூலமும் பரிமேலழகருரையும் அ			ஊ.
காந்தமகாசங்கிரகம்		,,	உ.

உடனே பதிப்பிக்கப்படும் புத்தகங்கள்.

வைத்தியக்கண்ணாடி.	வைத்திய அகராதி.
தேரையர் செய்தருளிய மோனையமகவெண்பா மூலமும் உரையும்.	சாரசங்கிரகநிகண்டு.
	ஷை நிகண்டகராதி.

வெளிதேசத்தார் கிரயத்துடன் தபாற்செலவு மனுப்புவிக்கவேண்டும்.

(Signed) .....